# ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாமம்

[உரையுடன்]

ஆ. அரங்கநாத முதலியார்

# ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாமம்

[உரையுடன்]

THE MADURA TAMIL SANGAM

ஆ. அரங்கனாத முதலியார்

*Retired Manager, P.W.D., President, S. V. S. Nidhi, Ltd. and Honorary Presidency Magistrate*

பதிப்பித்தது

ஆ. பாலகிருஷ்ண முதலியார், B.A.

"சுவர்ண விலாஸ்," 13, பெரிய தெரு

திருவல்லிக்கேணி.

1931.

[*All Rights Reserved.*]

ஹிந்தி பிரசார் பிரஸ்
திருவல்லிக்கேணி
சென்னை.

செந்தமிழ்க் கல்லூரி
MADURA TAMIL SANGAM

# முகவுரை.

---

இந்நில வுலகில் மானிடப் பிறவியெடுத்த நாம் அடைய வேண்டிய புருஷார்த்தங்கள் நான்கு ஆகும். 'படுமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றிக் கெடுமிதோர் யாக்கை யென்று எண்ணி,' அதன் பயனாகிய புருஷார்த்தங்களுள் முதலது ஆகிய தருமத்தை விரும்பிச் செய்யவேண்டும். அந்தத் தருமங்கள் யுகந்தோறும் மாறுகின்றபடியால், இந்தக் கலியுகத்தில் பலரும், தரும ஸ்வரூபியாகிய எம்பெருமானை அவனுடைய நாம ஸங்கீர்த்தனத்தாலே அடைவது சுலபமான வழியாகுமெனக் கருதி, பகவான் வியாஸ ரூபியாய் அவதரித்து பாரதம் என்னும் இதிகாசத்தை யியற்றி அருளினர். ஐந்தாம் வேதமெனப்படும் அப் பாரதத்தில் லௌகிக வைதிக ஒழுக்கங்களைச் சந்தேகம் இல்லாமல் உலகத்தார் அறிந்து உஜ்ஜீவிக்கும்பொருட்டு வெளியிட்டருளினர்.

விசேஷ மகிமை வாய்ந்த இராமாயணத்துக்குச் சமானமான பாரத இதிகாசத்தில், சாந்திபருவத்தில் வியாச பகவான், 254-ஆவது அத்தியாயத்தில், தரும விஷயமாய், சகல சாஸ்திரங்களின் சாரத்தை நிஷ்கரித்துச் சொல்லியிருக்கிறார். பாணத்தால் ஆகிய படுக்கையில் சயனித்திருந்த பீஷ்மரிடம் சென்று தருமபுத்திரர், சகல தருமங்களையும் கேட்டுக் கடைசியில் அந்த பீஷ்மர் தருமசாரமான இந்த 'ஸஹஸ்ரநாம' அத்தியாயத்தை விஸ்தாரமாகச் சொன்னபடியால் இதுவே பீஷ்மாசாரியருக்கு அபிமதமென்றும், அடிக்கடி மகரிஷிகளால், பகவத்கீதை முதலிய வேதாந்த சாஸ்திரங்களோடு

ஒத்திருப்பதால் சிறந்த மகிமையுள்ளது என்று புகழ்ப் பெற்றதும் ஆகிய இந்த ஸஹஸ்ரநாம அத்தியாயத்தை மகரிஷிகள் முதலானோர் விசேஷமாக ஸ்தோத்திரம் செய்தும், படித்தும், கேட்டு ஆனந்தித்தும் வந்துளர். மேலும் அம் முனிச்ரேஷ்டர்கள், மோக்ஷஸாம்ராஜ்யத்திற்கு எளிதான உபாயம் இதைத்தவிர வேறு கிடையாது என்று சித்தாந்தஞ் செய்தும் சரீரப் பிரயாஸம் முதலியவை இன்றிச் சுலபமாய் பகவந் நாம ஸ்மரண கீர்த்தனங்களாலேயே இம்மை, மறுமைப் பயன் இக்கலியுகத்தில் சித்திக்கும் என்றும் அபிப்பிராயப்பட்டனர். இந்த ஸஹஸ்ரநாம அத்தியாயத்தின் இறுதியில் பலஶ்ருதியில் சொல்லியபடி, ஒவ்வொருவரும் இந்த நாம ஸஹஸ்ர ஸ்தோத்திரம் அவசியம் பாராயணஞ் செய்யக்கடவர்கள் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

இதன் சிறப்பு பின் வருமாறு புராணம் முதலிய நூல்களில் கூறப்பட்டிருத்தலாலும் அறியக்கிடக்கிறது :—

'பாவங்கள் மேலிட்டதனால் தருமானுஷ்டானங்கள் குறைந்துள்ள இந்தக் கலியுகத்தில் மனிதர்கள் உஜ்ஜீவிக்கப் பகவந் நாமஸ்மரணையைத் தவிர வேறு கதி இல்லை' என்று பிரம்மாண்ட புராணத்திலும், 'சாதியில் தாழ்ந்தவனாய் இருந்தாலும், பாபியாய் இருந்தாலும், அவனது பாவத்தைப் போக்கடிக்க விஷ்ணுநாமத்தைத் தவிர மற்றவைகளுக்கு சக்தி போதாது' என்று இதிகாசோத்தமத்திலும், 'சகல வேதங்களும் ஓதியும் சகல தீர்த்தங்களில் நீராடியும் ஏற்படும் புண்ணியத்தைவிட பகவந் நாமஸ்தோத்திரம் நூறு மடங்கு பலன் அளிக்கும்' என்று விஷ்ணுதர்மோத்திரத்திலும், 'பகவான், தமது திவ்விய நாமங்களால் தம்மை ஸ்தோத்திரஞ் செய்பவர்களுக்கே விசேஷப் பிரீதியுடன்

தமது திருப்பதத்தை அளித்து மகிழ்ச்சி எய்துவார். மற்றவர்களிடம் அவ்விதப் பிரியத்தை யடையமாட்டார்' என்று நாரதீய புராணம் ஞானகாண்டத்திலும், 'எவன் வேதம் ஓதாமலும் வேள்வி முதலியன செய்யாமலும் மகாபாபியாய் இருந்தாலும், நாடோறும் பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்கிருனே அவன் சர்வ பாபங்களினின்றும் விடுபட்டு, பகவத் ஸாரூப்யத்தை அடைகின்றுன். அதில் யாதொரு சந்தேகமும் இல்லை' என்று பிரம்மாண்ட புராணத்திலும், 'சகல ஜகத்திற்கும் ஈசனுன நான், எப்பொழுதும் விஷ்ணு ஸஹஸ்ர நாம ஜபம் செய்துகொண்டிருப்பதுபோலவே, மானிடர்களும் ஜபம் செய்தால் நற்கதி யடைவார்கள். இது சத்தியம். இது சத்தியம்' என்று சைவ புராணத்திலும், மற்றுமுள்ள உபபுராணங்களிலும் விசேஷமாக பகவந் நாம ஸ்தோத்திரத்திற்கு உள்ள சிறப்பு விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

இத்தகைய சிறப்புவாய்ந்த ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தை நாள்தோறும் பக்தி சிரத்தையுடன் ஜெபித்தாலும், அல்லது பிறர் சொல்லக் கேட்டாலும், சகல பாபங்களினின்றும் விடுபட்டு, இறுதியில் ஸ்ரீமந்நாராயணனது திவ்விய சரணுரவிந்தங்களை அடைவர். அன்றியும், இம்மையில் சர்ப்பம் முதலிய துஷ்ட ஜந்துக்களின் பாதை, கொடிய நோய்கள், துர்தேவதைகளின் சேஷ்டை, சனி முதலிய நவக்கிரகங்களின் தோஷம், துஸ்வப்னம், சத்ருபயம் முதலியவை சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். செல்வப் பேறு, புத்திரபாக்கியம், தீர்க்காயுள் முதலியன பெற்று சுகமாய் வாழ்வர். மேலும் அவ்வடியார்கள் மறுமையில் பகவத் கிருபைக்குப் பாத்திரர்களாய் ஸநகாதிகளால் புடைசூழ்ந்து, திருமாமணி மண்டபத்தில் ஸ்ரீ பூமிளா சமேதராய்

விளங்கும் பரமபதநாதனுடைய சமீபத்திலேயே நித்திய ஸூரிகள்போல் பகவத் குணானுபவம் பண்ணிக்கொண்டு சாசுவதமாய் வீற்றிருப்பர் என்பது திண்ணம்.

இவ்வாறு மிகச் சிறப்பாக ஸ்ரீ ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தைப்பற்றி நான் பலர் சொல்லக் கேட்டதனாலும், இதைப்பற்றிச் சில நூல்களில் வாசித்து இதன் பெருமையை அறிந்துகொண்டதனாலும், அருந்தமிழ் அறிந்த அன்பர்களும் இதைக் கற்று நன்மையை யடையவேண்டும் என்று கருதி வடமொழியிலுள்ள இந்த ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தைத் தமிழில் உரையுடன் வெளியிடத் துணிந்தேன்.

இந்த ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரமானது மற்ற நூல்களைப்போல, கடின நியமங்கள் இல்லாமல் எல்லோராலும் எளிதாய் பாராயணம் செய்யத்தக்கது. ஸ்ரீ பராசரபட்டரே 'ஸ்தவ ப்ரியः' என்னும் 684-வது நாமத்தின் வியாக்யானத்தில், 'யாவராலும், எந்தப் பாஷையாலும், எவ்வகையாலும், செய்யப்படும் தோத்திரங்களைச் சொற்பிழை, பொருட் பிழை இருந்தாலும் குணங்களைச் சொல்வதாகவே கருதி பகவான் அன்புடன் அங்கீகரிப்பார்' என்று அருளிச் செய்திருக்கிறார். ஆதலின் இந்த நாமங்களின் பொருளைத் தெரிந்துகொண்டு, தமிழ் வசனத்தினாலேயே இந்நூலை ஜபித்தாலும் பலன் கிடைப்பதில் யாதொரு ஆக்ஷேபமும் இல்லை. ஸ்ரீ கிருஷ்ணபகவானே அர்ச்சுனனைப் பார்த்து, 'எவன் என்னை ஆயிரநாமங்களால் தோத்திரம் செய்ய விரும்புகிறானோ அவனுக்கு ஒரு சுலோகம் சொன்னதனாலேயே அவ்வாயிர சுலோகஸ்தோத்திரத்தால் ஏற்படும் பலத்தை அளிப்பேன்' என்று திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார். ஆதலால் இந்த ஸஹஸ்ரநாமங்களைத் தகுந்த பக்தி சிரத்தையுடன்

அவர் அவர் சக்திக்கு ஏற்றபடி பிரதிதினமும் பாராயணஞ் செய்துவந்தால், அவர்கள் சகல பாபங்களிலிருந்தும் விடுபட்டு, பகவத் சரணாரவிந்தங்களை அடைவார்கள் என்பதில் ஐயம் இன்று.

இந்நூலை வாசித்து உணர்ந்து அதன்படி ஒழுகி பயன் பலர் அடையக்கூடும் என்னும் நோக்கத்துடனே யான் எனது சொந்தச் செலவில் இதைப் பிரசுரித்துக் கைம்மாறு கருதாது அன்பர்களுக்கு அளிக்கத் தீர்மானித்து வெளியிட்டுள்ளேன்.

கூரத்தாழ்வார் திருக்குமாரராகிய ஸ்ரீபராசரபட்டர் இதற்கு உரைசெய்த சமயத்தில் 'ஒவ்வொருவரும் ஸஹஸ்ரநாமத்தின் பொருளாகிய ஸ்ரீமந்நாராயணனிடத்திலும், ஸஹஸ்ரநாமங்களிடத்திலும் அவற்றிற்கு உரைசெய்யும் என்னிடத்திலும் ஒருவிதமாக அன்புவைத்து இந்த அமுதத்தை உட்கொள்ளுங்கள். உங்களை நமஸ்கரித்துப் பிரார்த்திக்கின்றேன். யாரும் இந்த விஷயத்தில் உதாசீனர்களாகவும், விரோதமுள்ளவர்களாகவும் ஆகவேண்டாம்' என்றும் சொல்லியிருக்கிறார். அதுபோலவே அடியேனும் எல்லோரையும் இந்த திவ்விய நாமங்களைத் தவறாமல் ஒவ்வொருநாளும் பக்தி சிரத்தையுடன் ஜபிக்கும்படி மிகவும் வினயமாய் நமஸ்கரித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நாமங்களைச்சொல்லும் விதி.—(ம-ா-ா-ஸ்ரீ R. அனந்தகிருஷ்ண சாஸ்திரியார் விஷ்ணுஸஹஸ்ரநாம இங்கிலிஷ் மொழிபெயர்ப்பிலிருந்தும், மற்றும் சில கிரந்தங்களிலிருந்தும் எழுதியது.) துளசி, வில்வம், மல்லிகை, நந்தியாவர்த்தம், ஜாதி, புன்னை, தாமரை அல்லது அந்தந்தக் காலங்களில் கிடைக்கும் புஷ்பங்களைக்கொண்டு மகாவிஷ்ணுவின் அவ

தார விக்கிரகத்தில் ஒன்றை முன்னால் வைத்துக்கொண்டு ஒவ்வொரு நாமத்தைச் சொல்லி ஒவ்வொரு புஷ்பமோ, பத்ரமோ அவனது திருவடிகளில் சமர்ப்பிக்கவேணும். சிலர், திருநீறு, குங்குமம் அல்லது அக்ஷதையைக்கொண்டு அர்ச்சனை செய்வதுமுண்டு. இம்மாதிரி பிரதிதினமும் செய்யமுடியாத பக்ஷத்தில் அவரவர் பிறந்த தினத்திலாவது, பிறந்த நட்சத்திரத்திலாவது, கிரஹணகாலத்திலாவது, மாஸப்பிரவேச தினத்தன்றாவது அல்லது தனக்குக் கூடுமானபோதாவது செய்வது நலம். முன்னமே சொல்லிய வண்ணம் இந்தப் புஸ்தகத்திலுள்ள தமிழ்த் தாத்பரியங்களை மாத்திரம் தினம் படித்தாலும் சொல்லக் கேட்டாலும் போதுமானது. நாமங்களின் தாத்பரியத்தைக் கீழ்க்கண்டமாதிரி சொல்லவும். 'ஓம் பரப்பிரம்ம ஸ்வரூபிக்கு நமஸ்காரம்,' 'ஓம் எல்லாவற்றுள்ளும் பிரவேசித்திருப்பவருக்கு நமஸ்காரம்.' என்று இவ்விதமாய் முதலில் ஓம் என்றும் கடைசியில் நமஃ என்றும் இவ்விரு பதங்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டியது. 1000-வது கடைசி நாமத்தை இரண்டு முறை சொல்லி ஓம் நமஃ என்று முடித்துக்கொள்ள வேண்டும். ஸமஸ்கிருதத்திலுள்ள எழுத்துக்களில் சில தமிழ்ப்பாஷையில் இல்லாமையால் அவைகளைக் குறிப்பிட்டு, உச்சரிப்பு விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் உதவியினால் சுலோகங்களையும் அவைகளின் பிரதி பதங்களையும் நாமாவளியையும் சுலபமாய்ப் படிக்கலாம்.

இந்த ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தை யாவரும் எளிதில் உணர்ந்துகொள்ளும்படி வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்துத்தந்த கவர்ன்மெண்ட் ஓரியண்டல் லைப்ரெரி ஸமஸ்கிருத பண்டிதர் வித்வன்மணி ஸ்ரீ உ. வே. கல்யாணபுரம் E. R. கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி செய்ந்நன்றி ஒருபொழுதும் மறக்கற்பாலதன்று.

இப்புத்தகத்தின் முதல்பதிப்புக் காபிகள் செலவான வுடன் மறுமுறை பதிப்பிக்க உத்தேசித்திருப்பதால், இதை வாசிக்கநேரும் பெரியோர்கள் என்மீது அன்புகூர்ந்து, இதில் காணும் குற்றங்குறைகளை எடுத்து எனக்குத் தெரிவித்தால் அப்பதிப்பில் சீர்திருத்தம் செய்துகொள்வேன்.

இப்புத்தகம் வெளிவர அநேக இடையூறுகள் உண்டா யிருந்தும் அவைகளை நீக்கி இந்த வேலையைப் பூர்த்திசெய் வித்த பாற்கடலில் பள்ளிகொண்ட பத்மநாபன் பதமலரைப் பணிவுடன் பணிகின்றேன்.

இங்ஙனம்,

திருவல்லிக்கேணி,
1—3—1931.

பக்தர் பாததூளி,

ஆ. அரங்கநாதன்.

ஓம்.

# உச்சரிப்பு விளக்கம்

| 1 | 2 | 3 | 4 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|
| க | க்ஹ | க | க | கண் | முகம் | கஜம் | கடம் |
| Ka | Kha | Ga | Gha | | | | |
| ச | ச்ஹ | — | — | சந்திரன் | சாயை | — | — |
| Cha | Chha | | | | | | |
| ட | ட்ஹ | ட | ட | — இஷ்டம் | கண்டம் | மடி | த்ருடம் |
| Ta | Ttha | Da | Dha | | | | |
| த | த்ஹ | த | த | — தநயன் | நாதன் | மதம் | தனுஸ் |
| Tha | Thha | Dha | Dhha | | | | |
| ப | ப்ஹ | ப | ப | பணம் | ஸபலம் | பாணம் | பாரம் |
| Pa | Pha | Ba | Bha | | | | |

ஸ Sa — சமம்.
ஶ Sa — சநி, சந்தை.
ஜ Ja — ஜயம்.
ஷ Sha — பாஷை.
ஹ Ha — ஹரிஹரன்.
க்ஷ Ksha — தக்ஷன்.
ஸ்ரீ Sri — ஸ்ரீராமர்.
o Im — ஓம்.
ः Aha விஸர்க்கம் — நமஃ
ⁿ — உ வின் அடையாளம்.
ூ — ஊ வின் அடையாளம்.

2 இருவார்த்தைகளின் சேர்க்கையில், வருமொழி முதலிலுள்ள அ என்னும் அக்ஷரம் சந்தியால் மறையும். இது அதைக்குறிப்பிடும் அடையாளம்.

ஓம்.

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீ பத்மநாபாயநம:

# ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம்.

3 4
ஹரிஃ ஓம். ஶுக்லாம்பரதரம் விஷ்ணும்

4
ஶஶிவர்ணம் சதுர்புஜம் ।

3 4
ப்ரஸந்நவதநம் த்யாயேத்

4
ஸர்வவிக்நோபஶாந்தயே ॥ (1)

வெண்மையான திருவாடை தரித்தவரும் சந்திரன் போன்ற மேனியுள்ளவரும் நான்கு திருக்கைகளுள்ளவரும் எப்போதும் சந்தோஷமுள்ள திருமுக மண்டலமுடையவரும் ஸர்வவ்யாபியானவரும் ஆகிய விஷ்ணுவைச் சகல இடையூறுகள் நிவர்த்திக்காக தியானிக்கவேண்டும்.

3 3 3 3
யஸ்ய த்விரதவக்த்ராத்யா: பாரிஷத்யா: பரஶ்ஶதம் ।

4 4
விக்நம் நிக்நந்தி ஸததம் விஷ்வக்ஸேநம் தமாஶ்ரயே ॥ (2)

எவன் யானைமுகன் முதலான அநேக பரிவாரங்களை எப்போதும் எக்காலத்திலும் புடைசூழப் பெற்றிருக்கின்றனனோ, அப்பேர்ப்பட்ட விஷ்வக்ஸேநரை இடையூறுகளைப் போக்கடிக்க ஸேவிக்கிறேன்.

2
வ்யாஸம் வஸிஷ்டநப்தாரம் சக்தேः பௌத்ரமகல்மஷம் ।
3 4
பராஶராத்மஜம் வந்தே சுகதாதம் தபோநிதிம் ॥ (3)

வஸிஷ்டரின் கொட்பேரனும் சக்தியின் பேரனும் சுகருக்குத் தகப்பனும் பராசரரின் புத்ரனும் நிர்தோஷருமான வியாஸ முனிவரை ஸேவிக்கிறேன்.

வ்யாஸாய விஷ்ணுரூபாய வ்யாஸரூபாய விஷ்ணவே ।
3 4 2
நமோவை ப்ரஹ்மநிதயே வாஸிஷ்டாய நமோநமः ॥ (4)

மஹா விஷ்ணுவின் அம்சமான வியாஸரையும் வ்யாஸாவதாரமான மஹா விஷ்ணுவையும் வேதக் களஞ்சியமும் வஸிஷ்ட வம்சத்தவருமான பராசரரையும் அடிக்கடி ஸேவிக்கிறேன்.

3 4
அவிகாராய சுத்தாய நித்யாய பரமாத்மநே ।
3
ஸதைகரூபரூபாய விஷ்ணவே ஸர்வஜிஷ்ணவே ॥ (5)

விகாரமற்றவனும் சுத்தனும் நித்யனும் எப்போதும் ஒரே விதமான உருவத்தோடிருப்பவனும் எல்லாத் துஷ்

டர்களை ஜயித்தவனும் பரமாத்மாவுமான விஷ்ணுவை ஸேவிக்கிறேன்.

3 4
யஸ்ய ஸ்மரணமாத்ரேண ஜந்ம ஸம்ஸாரபந்தநாத்
4
விமுச்யதே நமஸ்தஸ்மை விஷ்ணவே ப்ரபவிஷ்ணவே ॥ (6)

எவன் தன்னை ஸ்மரித்த மாத்ரத்தால் மறு பிறப்பு முதலானதன்றி ஸம்ஸாரக் கட்டிலிருந்தும் ஜன்மத்தை விடுவிக்கிறானோ அந்த ஸர்வேசுவரனை விஷ்ணுவை நமஸ்கரிக்கிறேன்.

ஓம் நமோவிஷ்ணவே ப்ரபவிஷ்ணவே

ஸ்ரீவைஶம்பாயன உவாச—ஸ்ரீவைஶம்பாயனர் சொல்லுகிறார் :—

4
ஶ்ருத்வா தர்மாநஶேஷேண பாவநாநிச ஸர்வஶ꞉ ।
4 2 4 4
யுதிஷ்டிரஶ்ஶாந்தநவம் புநரேவாப்யபாஷத ॥ (1)

தர்மபுத்ரர் பரிசுத்தமான ஸகல தர்மங்களையும் நாநா விதமாய்க் கேட்டு மறுபடியும் பீஷ்மரை வினவுகிறார்.

யுதிஷ்டிர உவாச—யுதிஷ்டிரர் சொல்லுகிறார் :—

3
கிமேகம் தைவதம் லோகே கிம்வாப்யேகம் பராயணம் ।
4
ஸ்துவந்த꞉ கம் கமர்சந்த꞉ ப்ராப்நுயுர் மானவாஶ்ஶுபம் ॥ (2)

உலகத்தில் எல்லோராலும் கடைசியிலடையக் கூடிய ஒரே தெய்வமெது? எதை அர்ச்சித்தும் துதித்தும் மானிடர்கள் நற்கதியடைகிறுர்கள்?

4 4 4
கோதர்மஸ்ஸர்வதர்மாணும் பவதஃ பரமோ மதஃ

3 4
கிம்ஜபந் முச்யதே ஜந்துர் ஜந்மஸம்ஸாரபந்தநாத் ॥ (3)

ஸகல தர்மங்களுள் சிரேஷ்டமான தர்மமெது? எந்த ஜபத்தால் மனிதன் ஜன்ம ஸம்ஸார பந்தத்தினின்றும் விடுபடுகிறுனென்கிற இவ்விரண்டு விஷயத்தில் தங்கள் அபிப்பிராயமென்ன?

ஸ்ரீ பீஷ்ம உவாச—ஸ்ரீ பீஷ்மர் சொல்லுகிறுர் :—

4 3 3
ஜகத்ப்ரபும் தேவதேவமநந்தம் புருஷோத்தமம் ।

2
ஸ்துவந்நாமஸஹஸ்ரேண புருஷஸ்ஸததோத்திதஃ ॥ (4)

மஹாபிரபுவும் தேவாதிதேவனும் நாசரஹிதனும் புருஷோத்தமனுமான ஸ்ரீமந்நாராயணனைத் தினந்தோறும் காலையிலெழுந்து அவனது ஆயிரம் நாமங்களால் ஸ்தோத்ரஞ் செய்தும்

4
தமேவ சார்சயந்நித்யம் பக்த்யா புருஷமவ்யயம் ।

4
த்யாயம்ஸ்துவந் நமஸ்யம்ஶ்ச யஜமானஸ்தமேவச ॥ (5)

3 4
அநாதிநிதநம் விஷ்ணும் ஸர்வலோகமஹேஸ்வரம் ।
4 2 3 4
லோகாத்யக்ஷம் ஸ்துவந்நித்யம் ஸர்வதுக்காதிகோ பவேத் ॥(6)

3 4 34
ப்ரஹ்மண்யம் ஸர்வதர்மக்ஞம் லோகாநாம்கீர்திவர்த்தநம் ।
2 34 4 4 34
லோகநாதம் மஹத்பூதம் ஸர்வபூதபவோத்பவம் ॥ (7)

4 4 4
ஏஷ மே ஸர்வதர்மாணாம் தர்மோதிகதமோ மத: ।
3 4 3
யத் பக்த்யா புண்டரீகாக்ஷம் ஸ்தவைரர்சேந்நரஸ்ஸதா ॥(8)

எங்கும் பரிபூர்ணனும் ஸர்வேச்வரனும் ஆதியந்தரஹிதனும் சகல லோகேச்வரனும் லோகரக்ஷகனும் ஸகல வேதங்களால் முறையிடப்படுபவனும் சகல தர்மங்களை யறிந்தவனும் உலகமெங்கும் தனது கீர்த்தியைப் பரவச் செய்பவனும் லோகநாதனும் விச்வரூபமெடுத்தவனும் முக்காலத்திலுமுள்ளவனுமான ஸ்ரீமந்நாராயணனை தினந்தோறும் தியானித்தும் பக்தியுடன் ஸேவித்தும் அவனைக்குறித்து யக்ஞம் முதலானதும் செய்தும் எவனது திவ்யமான ஆயிரம் நாமங்களால் ஸ்தோத்திரமும் செய்வதால் சகல துக்கங்கள் நிவாரணமாகிறதோ அந்த பகவந்நாமஸ்தோத்ரந்தான் சகல தர்மங்களுள் சிரேஷ்டமான தர்மமென்று எனதபிப்பிராயம்

பரமம் யோ மஹத்தேஜ: பரமம் யோ மஹத்தப: ।
3 3
பரமம் யோ மஹத்ப்ரஹ்ம பரமம் ய: பராயணம் ॥ (9)

எவன் பரஞ்சோதியும் சிரேஷ்டமான தபஸ் ஸ்வரூபியும் பரபிரம்மமும் எல்லோராலும் முடிவிலடையக் கூடியவனும்.

பவித்ராணாம் பவித்ரம் யோ மங்களாநாஞ்ச மங்களம் ।
3 3 4
தைவதம் தேவதாநாஞ்ச பூதாநாம் யோऽவ்யயః பிதா ॥ (10)

சுத்தர்களுள் மகாபரிசுத்தனும் மங்களங்களுள் சிரேஷ்ட மங்களரூபியும் தேவாதிதேவனும் உலகத்திற்கு அழிவில்லாத்தகப்பன் போன்றவனும்.

4 3 3 3
யதஸ்ஸர்வாணி பூதாநி பவந்த்யாதியுகாகமே ।
3
யஸ்மிம்ஶ்ச ப்ரளயம் யாந்தி புநரேவ யுகக்ஷயே ॥ (11)

எவனிடமிருந்து யுகாரம்பத்தில் ஜீவர்களுண்டாகி மறுபடி யுகமுடிவில் எவனிடம் லயமடைகின்றனவோ.

4 2 4
தஸ்ய லோகப்ரதாநஸ்ய ஜகந்நாதஸ்ய பூபதே
4
விஷ்ணோர்நாமஸஹஸ்ரம் மே ஶ்ருணு பாபபயாபஹம் ॥ (12)

அரசே ! அப்பேர்ப்பட்ட உலக சிரேஷ்டனும் நாதனுமான மகாவிஷ்ணுவின் சகல பாப நிவாரகமான ஆயிரம் நாமங்களைச் சொல்கிறேன் கேள்.

3 2
யாநி நாமாநி கௌணாநி விக்யாதாநி மஹாத்மநః ।
4 3 4
ரிஷிபிః பரிகீதாநி தாநி வக்ஷ்யாமி பூதயே ॥ (13)

குணச்சிறப்புள்ளவையும் பிரசித்தமானவைகளும் மகரிஷிகளால் பாடப்பட்டதுமான மஹாவிஷ்ணுவின் நாமங்களைச் சர்வ க்ஷேமங்களுண்டாவதற்காகச் சொல்கிறேன்.

3
ரிஷிர் நாம்னும் ஸஹஸ்ரஸ்ய வேதவ்யாஸோ மஹாமுநி: ।
2 3 2 3 4 3 3
சந்தோ ऽநுஷ்டுப் ததா தேவோ பகவாந் தேவகீஸுத: ॥ (14)

இந்த ஆயிரநாமத்துக்கு வேதவ்யாஸர் ரிஷி, அனுஷ்டுப் சந்தஸ் தேவகீபுத்ரனை கிஷ்ணபரமாத்மா தேவதை

3 4 3 3
அம்ருதாம்ஶூத்பவோ பீஜம் ஶக்திர்தேவகீநந்தந: ।
3 2
த்ரிஸாமா ஹ்ருதயம் தஸ்ய ஶாந்த்யர்தே விநியுஜ்யதே ॥ (15)

அம்ருதாம்ஶூத்பவ என்னும் பீஜமும் தேவகீ நந்தந என்கிற சக்தியும் த்ரிஸாமா என்கிற ஹ்ருதயமும் சகல தோஷ சாந்தியின் பொருட்டு விநியோகம்.

4
விஷ்ணும் ஜிஷ்ணும் மஹாவிஷ்ணும் ப்ரபவிஷ்ணும் மஹேஶ்வரம்
3
அநேகரூபம் தைத்யாந்தம் நமாமி புருஷோத்தமம் ॥ (16)

எங்கும் வியாபித்தும் ஜயசீலனும் அநேக அஸுரர்கள் வதத்திற்காக பல அவதாரமெடுப்பவரும் ஸர்வேசுவரனுமான மஹாவிஷ்ணுவை ஸேவிக்கிறேன்.

3
ஓம்—அஸ்ய ஸ்ரீ விஷ்ணோ: திவ்யஸஹஸ்ரநாம ஸ்தோ
3 4
த்ர மஹாமந்த்ரஸ்ய । ஸ்ரீ வேதவ்யாஸோ பகவான் ரிஷி: ।

அநுஷ்டுப்சந்த: । ஸ்ரீ மஹாவிஷ்ணு: பரமாத்மா ஸ்ரீமந்
நாராயணோ தேவதா । அம்ருதாம்ஸூத்பவோ பாநுரிதி
பீஜம் । தேவகீநந்தந: ஸ்ரஷ்டேதி ஸக்தி: । உத்பவ: க்ஷோ
பணோ தேவ இதி பரமோ மந்த்ர: । ஸங்கப்ருந்நந்தகீ சக்ரீதி
கீலகம் । ஸார்ங்க தந்வா கதாதர இத்யஸ்த்ரம் । ரதாங்க
பாணிரக்ஷோப்ய இதி நேத்ரம் । த்ரிஸாமாஸாமகஸ்ஸா
மேதி கவசம் । ஆநந்தம் பரப்ரஹ்மேதியோநி: । ரிதுஸ்
ஸுதர்ஸந: கால இதிதிக்பந்த: । ஸ்ரீ விஸ்வரூப இதி த்யா
நம் । ஸ்ரீ மஹாவிஷ்ணுப்ரீத்யர்த்தே ஸ்ரீ ஸஹஸ்ரநாமபாரா
யண ஜபே விநியோக: ।

(த்யானம்.)

க்ஷீரோதந்வத்ப்ரதேஸே ஸுசிமணிவிலஸத் ஸைகதே
மௌக்திகாநாம் மாலாக்லுப்தாஸநஸ்த: ஸ்படிகமணி
நிபைர்மௌக்திகைர்மண்டிதாங்க: ।
ஸுப்ரைரப்ரைரதப்ரைருபரிவிரசிதைர்முக்த
பீயூஷவர்ஷைராநந்தீந: புநீயாதரிநளிநகதாஸங்க
பாணிர்முகுந்த: ॥ (1)

4 3 3 3 3
பூ: பாதௌ யஸ்ய நாபிர்வியதஸுரநிலஶ்சந்த்ரஸூர்

3 2 3
யௌச நேத்ரே கர்ணாவாஶா ஶிரோத்யௌர்முகமபி தஹ

3 4 2
னோ யஸ்ய வாஸ்தேயமப்தி: । அந்தஸ்தம் யஸ்ய விஶ்வம்

2 3 3 4 3 3 4 3
ஸுரநரகககோபோகிகந்தர்வதைத்யைஶ்சித்ரம் ரம்ரம்யதே

3 4
தம் த்ரிபுவனவபுஷம் விஷ்ணுமீஶம் நமாமி ॥ (2)

4 3 3 4
ஶாந்தாகாரம் புஜகஶயநம் பத்மநாபம் ஸுரேஶம்

3 3 3 4 4 3
விஶ்வாகாரம் ககநஸத்ருஶம் மேகவர்ணம் ஶுபாங்கம் ।

3 4 3
லக்ஷ்மீகாந்தம் கமலநயநம் யோகிஹ்ருத்தயாநகம்யம்

3 4 4 2
வந்தே விஷ்ணும் பவபயஹரம் ஸர்வலோகைகநாதம் ॥ (3)

4
மேகஶ்யாமம் பீதகௌஶேயவாஸம்

4 3 4 3
ஸ்ரீ வத்ஸாங்கம் கௌஸ்துபோத்பாஸிதாங்கம் ।

3
புண்யோபேதம் புண்டரீகாயதாக்ஷம்

3 2
விஷ்ணும் வந்தே ஸர்வலோகைகநாதம் ॥ (4)

[த்யானஶ்லோகங்கள் நான்கையும் சேர்த்து
அர்த்தம் எழுதி யிருக்கிறது.]

நவரத்னங்களால் பிரகாசிக்கும் மணல்களுடன் கூடிய க்ஷீரசமுத்ரக்கரையில் முத்துமாலைகளாலலங்கரிக்கப்பட்ட ஆஸனத்திலிருந்தும் ஸ்படிகத்துக்குச் சமானமான முத்து மாலைகளாலலங்கரிக்கப்பட்ட திவ்ய சரீரமுடையவனும் வெளுத்த மேகங்கள் அம்ருதவர்ஷம் பொழிய அதினால் மிகச் சந்தோஷப் படுகிறவனும் சங்கு சக்கிரம் கதை கமலம் முதலிய திவ்யாயுத பூஷிதனும், எவனுக்கு பூமி திருவடியும் ஆகாசம் நாபியும் வாயு பிராணனும் சந்திர சூரியர்கள் கண் களும் திக்குகள் காதுகளும் சுவர்க்கம் சிரஸாயும் அக்னி முகமாகவும் சமுத்ரம் வாஸஸ்தானமும், எவன் வயிற்றிலுள்ள தேவர் மனிதர் பசுபக்ஷி கந்தர்வாள் அசுரர்கள் முதலிய அண் டத்திற்குள்ளடங்கிய ஸகல பிராணிகளைக் கொண்டு வேடிக் கையாய் விளையாடுகிறவனும் ஸர்வவியாபகனும் ஸர்வ ரக்ஷக னும், சாந்த மூர்த்தியும் பன்னகசயனனும் தாமரைப்பூவை நாபியிலுடையவனும் தேவதேவனும் ஸர்வஜகத் ரூபியும் ஆகாயம்போ லெங்கும் நிறைந்தவனும் மேகம்போல் கறுத்த திருமேனியுடையவனும் மங்கள சரீரமுடையவனும் லக்ஷ்மீ ரமணனும் தாமரைக்கண்ணனும் யோகிகளால் தியானம் பண் ணப்படுவனும் சகல ஸம்ஸாரபயத்தைப் போக்கடிப்பவனும் சகல லோகநாதனுமான மகாவிஷ்ணுவை ஸேவிக்கிறேன். மேகம்போல் கறுத்தும் பீதாம்பரதாரியும் ஸ்ரீவத்ஸ மென்கிற மருவுடையவனும் கௌஸ்துபமாலையாலதிகமாய் விளங்கும் திருமேனியுடையவனும் புண்ய புருஷர்களாலடையக் கூடிய வரும் மலர்ந்த தாமரை இதழ்போன்ற கண்ணனும் எங்கும் நிறைந்து ஒரே தெய்வமுமான ஸ்ரீமந் நாராயணனை ஸேவிக் கிறேன்.

---

# ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம்.

4 4 4 4
ஓம்—விஶ்வம் விஷ்ணுர் வஷட்காரோ பூதபவ்யபவத்ப்ரபு: ।

4 4 4 4 4 4
பூதக்ருத் பூதப்ருத் பாவோ பூதாத்மா பூதபாவந: (1)

1. ஓம் விஶ்வாய நம:—விஶ்வம் - பரப்ரம்மஸ்வரூபி.
2. ஓம் விஷ்ணவே நம:—விஷ்ணு: - எல்லாவற்றுள் பிரவேசித்திருப்பவர்.
3. ஓம் வஷட்காராய நம:—வஷட்கார: - யாகமந்திரஸ்வரூபி.
4. ஓம் பூதபவ்யபவத்ப்ரபவே நம:—பூதபவ்யபவத்ப்ரபு: - முக்காலத்திலும் மாறுமல் என்று மிருப்பவர்.
5. ஓம் பூதக்ருதே நம:—பூதக்ருத் - உலகத்தைப் படைப்பவர்.
6. ஓம் பூதப்ருதே நம:—பூதப்ருத் - உலக ரக்ஷணை செய்பவர்.
7. ஓம் பாவாய நம:—பாவ:-உலகஸ்வரூபி.
8. ஓம் பூதாத்மனே நம:—பூதாத்மா - உலகங்களைச் சரீரமாயுடையவர்.
9. ஓம் பூதபாவநாய நம:—பூதபாவந: - பிராணிகளைப் பருவக்ரமமாய் வளரச் செய்பவர்.

3
பூதாத்மா பரமாத்மாச முக்தாநாம் பரமாகதி: ।
அவ்யய: புருஷஸ்ஸாக்ஷீ க்ஷேத்ரக்ஞோ ऽக்ஷரஏவ ச (2)

10. ஓம் பூதாத்மனே நம:—*பூதாத்மா - பரிசுத்தமான ஆத்மாவுடையவர்.*

11. ஓம் பரமாத்மனே நம:—*பரமாத்மா - பரமாத்ம ஸ்வரூபி.*

12. ஓம் முக்தாநாம் பரமாகதயே நம:—*முக்தாநாம் பரமாகதி: - முக்தர்கள் முடிவிலடையுமிடமா யிருப்பவர்.*

13. ஓம் அவ்யயாய நம:—*அவ்யய: - நாசமில்லாதவர்.*

14. ஓம் புருஷாய நம:—*புருஷ: - எங்கும் நிறைந்திருப்பவர்.*

15. ஓம் ஸாக்ஷிணே நம:—*ஸாக்ஷீ - நேரில் பார்ப்பவர்.*

16. ஓம் க்ஷேத்ரக்ஞாய நம:—*க்ஷேத்ரக்ஞ: - ஜீவர்களுக்கு ஜன்மத்திற்குரிய இடத்தை யறிந்தவர்.*

17. ஓம் அக்ஷராய நம:—*அக்ஷர: - பகவத் குணாநுபவ சுகத்தைவிருத்தியாகும்படி செய்பவர்.*

3 3 3 4
யோகோ யோகவிதாம் நேதா ப்ரதானபுருஷேஶ்வர:।
*நாரஸிம்ஹவபு: ஶ்ரீமான் கேஶவ: புருஷோத்தம:* (3)

18. ஓம் யோகாய நம:—*யோக:- யோகஸ்வரூபி.*

19. ஓம் யோகவிதாம் நேத்ரே நம:—*யோகவிதாம் நேதா - யோகிகளுக்கு க்ஷேமத்தைச் செய்பவர்.*

20. ஓம் ப்ரதான புருஷேஶ்வராய நம:—*ப்ரதான புருஷேஶ்வர: - ப்ரக்ருதி, ஜீவ ஈச்வரரூபி.*

21. ஓம் நாரஸிம்ஹவபுஷே நம:—*நாரஸிம்ஹவபு: - நரசிம்மாவதாரஞ் செய்தவர்.*

22. ஓம் ஸ்ரீமதே நம:—ஸ்ரீமான் - லக்ஷ்மியால் பூஜிக்கப் பட்டவர்.

23. ஓம் கேஶவாய நம:—கேஶவ: - அழகிய கூந்தலுள்ள வர்.

24. ஓம் புருஷோத்தமாய நம:—புருஷோத்தம: - சேதனர் களைவிட விலக்ஷணமானவர்.

2 4 3 4
ஸர்வஶ்ஶர்வஶ்ஶிவஸ்ஸ்தாணு: பூதாதிர்நிதிரவ்யய: ।

4 4 4 4 4
ஸம்பவோ பாவனோ பர்த்தா ப்ரபவ: ப்ரபுரீஶ்வர: (4)

25. ஓம் ஸர்வாய நம:—ஸர்வ: - ஸ்தாவர ஜங்கமங்களுள் ஆத்மாவாயிருந்து அவைகளை நடத்துகிறவர்.

26. ஓம் ஶர்வாய நம:—ஶர்வ: - தன் சரீரமான ஜீவர்களின் தீங்கை ஒழிப்பவர்.

27. ஓம் ஶிவாய நம:—ஶிவ: - பிராணிகளுக்கு மங்களத் தைச் செய்பவர்.

28. ஓம் ஸ்தாணவே நம:—ஸ்தாணு: - உறுதியான மகிமை யுடையவர்.

29. ஓம் பூதாதயே நம:—பூதாதி: - பிராணிகளால் விரும் பத்தக்கவர்.

30. ஓம் நிதயே அவ்யயாய நம:—நிதி: அவ்யய: - குறை வற்ற நிதிபோன்றவர்.

31. ஓம் ஸம்பவாய நம:—ஸம்பவ: - தனதிஷ்டப்படி அவ தரிப்பவர்.

32. ஓம் பாவனாய நம:—பாவன: - அவதாரத்திற் கேற்ற வாறு நடிப்பவர்.

33. ஓம் பர்த்ரே நம:—பர்த்தா - காப்பாற்றுகிறவர்.

34. ஓம் ப்ரபவாய நம:—ப்ரபவ: - உத்தம ஜன்ம மெடுப்பவர்.

35. ஓம் ப்ரபவே நம:—ப்ரபு: - அதிக சாமர்த்தியமுள்ளவர்.

36. ஓம் ஈஸ்வராய நம:—ஈஸ்வர: - மோக்ஷத்திற்கதிகாரி.

4 4 3
ஸ்வயம்பூஸ்ஸம்புராதித்ய: புஷ்கராக்ஷோமஹாஸ்வந: ।

3 4 4 4 4
அநாதிநிதநோ தாதா விதாதா தாதுருத்தம: ॥ (௫)

37. ஓம் ஸ்வயம்புவே நம:—ஸ்வயம்பூ: - பிறரால் சிருஷ்டிக்கப்படாதவர்.

38. ஓம் ஸம்பவே நம:—ஸம்பு: - பேரின்பமளிப்பவர்.

39. ஓம் ஆதித்யாய நம:—ஆதித்ய: - அதிதி புத்ரர்.

40. ஓம் புஷ்கராக்ஷாய நம:—புஷ்கராக்ஷ: - தாமரைக் கண்ணர்.

41. ஓம் மஹாஸ்வனாய நம:—மஹாஸ்வன: - வேதமாகிற மூச்சுக்காற்றுடையவர்.

42. ஓம் அநாதிநிதனாய நம:—அநாதிநிதன: - ஆதியந்தமில்லாதவர்.

43. ஓம் தாத்ரே நம:—தாதா - தானொருவனே எல்லாவற்றையும் தரிப்பவர்.

44. ஓம் விதாத்ரே நம:—விதாதா - கர்மபலனளிப்பவர்.

45. ஓம் தாதுருத்தமாய நம:—தாதுருத்தம: - பிரமனுக்கு மேற்பட்டவர்..

3 4 4
அப்ரமேயோ ஹ்ருஷீகேஶ: பத்மநாபோ ऽமரப்ரபு:
2 2 2 4
விஶ்வகர்மா மநுஸ்த்வஷ்டா ஸ்தவிஷ்டஸ்ஸ்தவிரோத்
ருவ: ॥ 6 ॥

46. ஓம் அப்ரமேயாய நம:—அப்ரமேய: - பிரமாணங்களுக் கெட்டாத பரம் பொருள்.

47. ஓம் ஹ்ருஷீகேஶாய நம:—ஹ்ருஷீகேஶ: - சந்திர சூரியர்களாய் உலகத்தைச் சந்தோஷப் படுத்துகிறவர்.

48. ஓம் பத்மநாபாய நம:—பத்மநாப: - நாபியில் கமலத்தை யுடையவர்.

49. ஓம் அமரப்ரபவே நம:—அமரப்ரபு: - தேவ சிரேஷ்டர்.

50. ஓம் விஶ்வகர்மணே நம:—விஶ்வகர்மா - உலக சிருஷ்டியையே கார்யமாயுடையவர்.

51. ஓம் மநவே நம:—மநு: - மந்திரரூபி.

52. ஓம் த்வஷ்ட்ரே நம:—த்வஷ்டா - தேவசிற்பியாயிருப்பவர்.

53. ஓம் ஸ்தவிஷ்டாய நம:—ஸ்தவிஷ்ட: - ஸ்தூலரூபியாய் மேருமுதலானவற்று யிருப்பவர்.

54. ஓம் ஸ்தவிராய நம:—ஸ்தவிர: - நிலையாயிருப்பவர்.

55. ஓம் த்ருவாய நம:—த்ருவ: - உண்மைப்பொருளாயிருப்பவர்.

3
அக்ராஹ்யஶ் ஶாஶ்வத: க்ருஷ்ணோ
3
லோஹிதாக்ஷ: ப்ரதர்தந: ।
4 3 4
ப்ரபூதஸ்த்ரிககுத்தாம பவித்ரம் மங்களம் பரம் ॥

56. ஓம் அக்ராஹ்யாய நம:—அக்ராஹ்ய: - இந்திரியங்களாலறிய முடியாதவர்.

57. ஓம் ஶாஶ்வதாய நம:—ஶாஶ்வத:-எப்பொழுது மிருப்பவர்.

58. ஓம் க்ருஷ்ணாய நம:—க்ருஷ்ண: - கறுப்பு நிறமுடையவர்.

59. ஓம் லோஹிதாக்ஷாய நம:—லோஹிதாக்ஷ: - கடைக்கண் சிவந்து கருவிழி கறுப்பாயுள்ளவர்.

60. ஓம் ப்ரதர்தனாய நம:—ப்ரதர்தன: - உலக சம்ஹாரஞ் செய்பவர்.

61. ஓம் ப்ரபூதாய நம:—ப்ரபூத: - எல்லா வஸ்துக்களிலும் நிறைந்தவர்.

62. ஓம் த்ரிககுத்தாம்னே நம:—த்ரிககுத்தாமா - ஞானம் முதலிய குணங்களுக்கு ஆதாரமானவர்.

63. ஓம் பவித்ராய நம:—பவித்ரம் - பாபமில்லாத சரீரமுள்ளவர்.

64. ஓம் பரஸ்மை மங்களாய நம:—மங்களம் பரம் - நித்ய கல்யாண பூர்ணர்.

ஈஶான: ப்ராணத:[3] ப்ராண: ஜ்யேஷ்ட:[2]

ஶ்ரேஷ்ட:[2] ப்ரஜாபதி: ।

ஹிரண்யகர்ப்போ[3] பூகர்ப்போ[4] மாதவோ[4][3] மதுஸூதந:[4][4][4][3] ॥ (8)

65. ஓம் ஈஶானாய நம:—ஈஶான: - எல்லோரையும் அடக்கி ஆள்பவர்.

66. ஓம் ப்ராணதாய நமः—ப்ராணதः - ஜீவித சக்தியைக் கொடுப்பவர்.

67. ஓம் ப்ராணாய நமः—ப்ராணः - பஞ்சப்ராணரூபி.

68. ஓம் ஜ்யேஷ்டாய நமः—ஜ்யேஷ்டः - எல்லோரிலும் முதிர்ந்தவர்.

69. ஓம் ஸ்ரேஷ்டாய நமः—ஸ்ரேஷ்டः - எல்லாவற்றிற்கும் மேற்பட்டவர்.

70. ஓம் ப்ரஜாபதயே நமः—ப்ரஜாபதிः - ப்ரஜைகளைப் பாதுகாப்பவர்.

71. ஓம் ஹிரண்யகர்பாய நமः—ஹிரண்யகர்ப்பः - வைகுண்டத்தில் பூமி நீளாசமேதர்.

72. ஓம் பூகர்பாய நமः—பூகர்ப்பः - பூமியைக் காப்பவர்.

73. ஓம் மாதவாய நமः—மாதவः - த்யானம், மௌனம், யோகம், மூன்றும் பொருந்தியவர்.

74. ஓம் மதுஸூதநாய நமः—மதுஸூதநः - மதுவென்னும் அசுரனைக் கொன்றவர்.

ஈஸ்வரோ விக்ரமீ[4] தந்வீ மேதாவீ[4] விக்ரமः க்ரமः ।
அநுத்தமோ[3] துராதர்ஷः[4] க்ருதக்ஞः க்ருதிராத்மவாந் ॥ (9)

75. ஓம் ஈஸ்வராய நமः— ஈஸ்வரः - ஸர்வ சக்தியுள்ளவர்.

76. ஓம் விக்ரமிணே நமः—விக்ரமீ - தன் பலத்தால் சத்துருக்களை வெருட்டுகிறவர்.

77. ஓம் தந்விநே நமः—தந்வீ - வில்லைத் தரித்தவர்.

78. ஓம் மேதாவிநே நமः—மேதாவீ - புத்திசாலி.

79. ஓம் விக்ரமாய நமः—விக்ரமः - கருடாரூடராய் சஞ்சரிப்பவர்.

80. ஓம் க்ரமாய நம:—க்ரம: - மூவடியாய் உலகத்தை அளந்தவர்.

81. ஓம் அநுத்தமாய நம:—அநுத்தம: - உத்தம புருஷர்களுள் முதல்வர்.

82. ஓம் துராதர்ஷாய நம:—துராதர்ஷ: - பிறரால் வெல்ல முடியாதவர்.

83. ஓம் க்ருதக்ஞாய நம:—க்ருதக்ஞ: - தனக்குச் செய்யும் உபசாரங்களை என்றும் மறவாதவர்.

84. ஓம் க்ருதயே நம:—க்ருதி: - எல்லாக் காரியங்களுக்கும் ஆதாரமானவர்.

85. ஓம் ஆத்மவதே நம:—ஆத்மவாந் - சகல ஜீவர்களையுந் தன் சரீரத்தில் தரிப்பவர்.

ஸுரேஶஶ்ஶரணம் ஶர்ம விஶ்வரேதா: ப்ரஜாபவ: । 4

அஹஸ்ஸம்வத்ஸரோ வ்யாள: ப்ரத்யயஸ் ஸர்வதர்ஶந: ॥ (10) 3

86. ஓம் ஸுரேஶாய நம:—ஸுரேஶ: - பிரமா முதலியவர்களுக்கேற்ற பதவியைத் தந்து ரக்ஷிப்பவர்.

87. ஓம் ஶரண்யாய நம:—ஶரணம் - எல்லோரும் சரண்புகுமிடமாயிருப்பவர்.

88. ஓம் ஶர்மணே நம:—ஶர்ம - சுகவடிவாயிருப்பவர்.

89. ஓம் விஶ்வரேதஸே நம:—விஶ்வரேதா: - ஜகத்காரணபூதர்.

90. ஓம் ப்ரஜாபவாய நம:—ப்ரஜாபவ: - கர்மாநுகுணமாய் பலமளிப்பவர்.

91. ஓம் அஹ்னே நம:—அஹ: - பகலாயிருப்பவர்.

92. ஓம் ஸம்வத்ஸராய நம:—ஸம்வத்ஸர: - வருஷஸ்வரூபி.

93. ஓம் வ்யாளாய நமः—வ்யாளः - ஞானிகளைத் தன்னவர்களாகச் செய்பவர்.

94. ஓம் ப்ரத்யயாய நமः—ப்ரத்யயः - நம்பிக்கையானவர்.

95. ஓம் ஸர்வதர்ஶநாய நமः—ஸர்வதர்ஶநः - புண்யாத்மாக்களுக்குத் தரிசனங் கொடுப்பவர்.

அஜஸ்ஸர்வேஶ்வரஸ்ஸித்தஸ்ஸித்திஸ்ஸர்வாதிரச்யுதः ।
வ்ருஷாகபிரமேயாத்மா ஸர்வயோகவிநிஸ்ஸ்ருதः ॥ (11)

96. ஓம் அஜாய நமः—அஜः - தன்னையடைய வருவோரின் இடையூறுகளை விலக்குகிறவர்.

97. ஓம் ஸர்வேஶ்வராய நமः—ஸர்வேஶ்வரः - எல்லோருக்கு மீசர்.

98. ஓம் ஸித்தாய நமः—ஸித்தः - பக்தர்களுக்கு முக்தியளிக்கச்சித்தமாயிருப்பவர்.

99. ஓம் ஸித்தயே நமः—ஸித்திः - அஷ்ட மஹாசித்தி ஸ்வரூபி.

100. ஓம் ஸர்வாதயே நமः—ஸர்வாதிः - எல்லாவற்றிற்கும் முதன்மையானவர்.

101. ஓம் அச்யுதாய நமः—அச்யுதः - முக்காலத்திலும் நீங்கா மகிமை யுடையவர்.

102. ஓம் வ்ருஷாகபயே நமः—வ்ருஷாகபிः - ஹரிஹரரூபி.

103. ஓம் அமேயாத்மநே நமः—அமேயாத்மா - பக்தர்களை அனுக்கிரகிப்பதில் எல்லையற்றவர்.

104. ஓம் ஸர்வயோகவிநிஸ்ஸ்ருதாய நமः—ஸர்வயோகவிநிஸ்ஸ்ருதः - சகலயோகங்களால் சுலபமா யடையக் கூடியவர்.

வஸுர்வஸுமநாஸ்ஸத்ய: ஸமாத்மா ஸம்மிதஸ்ஸம: ।

4 3

அமோக: புண்டரீகாக்ஷோ வ்ருஷகர்மா வ்ருஷாக்ருதி:॥ (12)

105. ஓம் வஸவே நம:—வஸு: - ஐசுவரிய ஸ்வரூபி.

106. ஓம் வஸுமநஸே நம:—வஸுமநா: - பக்தர்களைத் திரவ்யம்போல் காப்பவர்.

107. ஓம் ஸத்யாய நம:—ஸத்ய: - ஸத்யஸ்வரூபி.

108. ஓம் ஸமாத்மநே நம:—ஸமாத்மா - எல்லாரையும் சமமாய்ப் பார்ப்பவர்.

109. ஓம் அஸம்மிதாய நம:—அஸம்மித: - அளவிட முடியாதவர்.

110. ஓம் ஸமாய நம:—ஸம: - லக்ஷ்மீ சமேதராய் பக்த ரக்ஷணஞ் செய்பவர்.

111. ஓம் அமோகாய நம:—அமோக: - பக்தி முதலியவைகளை வியர்த்தமாகாமல் ஸபலமாகச் செய்பவர்.

112. ஓம் புண்டரீகாக்ஷாய நம:—புண்டரீகாக்ஷ: - முக்தர்களுக்குக் கண் போன்றவர்.

113. ஓம் வ்ருஷகர்மணே நம:—வ்ருஷகர்மா - தர்மகாரியஞ் செய்பவர்.

114. ஓம் வ்ருஷாக்ருதயே நம:—வ்ருஷாக்ருதி: - தர்மஸ்வரூபி.

3 3 4

ருத்ரோ பஹுஶிரா பப்ருர் விஶ்வயோநி: ஶுசிஶ்ரவா: ।

2

அம்ருதஶ்ஶாஶ்வதஸ் ஸ்தாணுர்வராரோஹோ மஹாதபா:॥13

115. ஓம் ருத்ராய நம:—ருத்ர: - குணானுபவாதிகளால் ப்ரலாபிக்கச் செய்பவர்.

116. ஓம் பஹுஶிரஸே நமः—பஹுஶிராः - அளவற்ற சிரமுடைய விராட்ரூபி.

117. ஓம் பப்ரவே நமः—பப்ருः - உலகங்களைத் தாங்குகிறவர்.

118. ஓம் விஶ்வயோநயே நமः—விஶ்வயோநிः - எல்லாவற்றிற்கும் உற்பத்தி ஸ்தானமானவர்.

119. ஓம் ஶுசிஶ்ரவஸே நமः—ஶுசிஶ்ரவாः - பக்தர்களின் துதிகளைச் செவிகொடுத்துக் கேட்பவர்.

120. ஓம் அம்ருதாய நமः—அம்ருதः - அம்ருத ஸ்வரூபி.

121. ஓம் சாஶ்வதஸ்தாணவே நமः—சாஶ்வதஸ்தாணுः - என்றும் நித்யர்.

122. ஓம் வராரோஹாய நமः—வராரோஹः - மோக்ஷமேற நல்ல ஏணியா யிருப்பவர்.

123. ஓம் மஹாதபஸே நமः—மஹாதபாः - எல்லாமறியும் விசேஷ ஞானி.

3 3 ,4 3
ஸர்வகஸ்ஸர்வவித்பாநுர் விஷ்வக்ஸேநோ ஜநார்தநः ।

3 3 3 3 3 3 3
வேதோ வேதவிதவ்யங்கோ வேதாங்கோ வேதவித் கபிः ॥(14)

124. ஓம் ஸர்வகாய நமः—ஸர்வகः - தடையில்லாமல் எங்கும் செல்பவர்.

125. ஓம் ஸர்வவிதே நமः—ஸர்வவித் - ஜீவராசிகளை அடிக்கடி விசாரிப்பவர்.

126. ஓம் பாநவே நமः—பாநுः - விகாரமின்றிப் பிரகாசிப்பவர்.

127. ஓம் விஷ்வக்ஸேநாய நமः—விஷ்வக்ஸேநः - நாற்புறமும் சேனைகளாற் சூழப்பட்ட விஷ்வக்ஸேநாவதாரி.

128. ஓம் ஜநார்த்தநாய நமஃ—ஜநார்த்தநः - பாபிகளை நரகத்தில் சிக்ஷிக்கும் மிருத்புஸ்வரூபி.

129. ஓம் வேதாய நமஃ—வேதः - வேதஸ்வரூபி.

130. ஓம் வேதவிதே நமஃ—வேதவித் - வேதார்த்தங்களைச் சந்தேகமற உபதேசிப்பவர்.

131. ஓம் அவ்யங்காய நமஃ—அவ்யங்கः - எங்கும் தன் சம்பந்தமுள்ளவர்.

132. ஓம் வேதாங்காய நமஃ—வேதாங்கः - வேதங்களைக் கருவியாயுடையவர்.

133. ஓம் வேதவிதே நமஃ—வேதவித் - வேதங்களைச் சாங்கமா யுணர்ந்தவர்.

134. ஓம் கவயே நமஃ—கவிः - ஜீவர்களின் முன் ஜன்மச் செயல்களை அறிகிறவர்.

லோகாத்யக்ஷஸ்ஸுராத்யக்ஷோ தர்மாத்யக்ஷः க்ருதாக்ருதः ।
சதுராத்மா சதுர்வ்யூஹஸ்சதுர்தம்ஷ்ட்ரஸ்சதுர்புஜः ॥ (15)

135. ஓம் லோகாத்யக்ஷயா நமஃ—லோகாத்யக்ஷः - லோகநாயகர்.

136. ஓம் ஸுராத்யக்ஷாய நமஃ—ஸுராத்யக்ஷः - தேவர்களை எப்போதும் கடாக்ஷிப்பவர்.

137. ஓம் தர்மாத்யக்ஷாய நமஃ—தர்மாத்யக்ஷः - தர்மவான்களுக்கும் தேவர்களுக்கும் அனுகூலஞானமுடைய அநிருத்தஸ்வரூபி.

138. ஓம் க்ருதாக்ருதாய நமஃ—க்ருதாக்ருதः - நித்யாநித்ய பலனைத் தருபவர்.

139. ஓம் சதுராத்மநே நமः—சதுராத்மா - ஸ்ருஷ்டிகர்த்ருத்வ ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமென்னும் நான்கு கருவிகளையுடையவர்.

140. ஓம் சதுர்வ்யூஹாய நமः—சதுர்வ்யூஹः - வாஸுதேவ, ஸங்கர்ஷண, பிரத்யும்ன, அநிருத்த முதலிய நான்கு வ்யூஹமூர்த்தி.

141. ஓம் சதுர்தம்ஷ்ட்ராய நமः—சதுர்தம்ஷ்ட்ரः - மகாபுருஷ லக்ஷணமான நான்கு பற்களுள்ளவர்.

142. ஓம் சதுர்புஜாய நமः—சதுர்புஜः - நான்கு திருக்கைகளையுடையவர்.

ப்ராஜிஷ்ணுர்போஜனம் போக்தா ஸஹிஷ்ணுர்ஜகதாதிஜः ।
அநகோ விஜயோ ஜேதா விஶ்வயோநிः புனர்வஸுः ॥ (16)

143. ஓம் ப்ராஜிஷ்ணவே நமः—ப்ராஜிஷ்ணுः - பிறரால் ஜயிக்க முடியாதவர்.

144. ஓம் போஜனாய நமः—போஜனம் - புஜிக்கத்தக்க வஸ்துவானவர்.

145. ஓம் போக்த்ரே நமः—போக்தா - புஜிப்பவர்.

146. ஓம் ஸஹிஷ்ணவே நமः—ஸஹிஷ்ணுः - எல்லாவற்றையும் சகிப்பவர்.

147. ஓம் ஜகதாதிஜாய நமः—ஜகதாதிஜः - உலக சிருஷ்டிக்கு முன்னுண்டானவர்.

148. ஓம் அநகாய நமः—அநகः - பாபமில்லாதவர்.

149. ஓம் விஜயாய நமः—விஜயः - ஸ்ருஷ்டியும் ஸம்ஹாரமும் செய்யும் மூர்த்திகளை எங்கும் ஜயம்பெற நடப்பிப்பவர்.

150. ஓம் ஜேத்ரே நமঃ—ஜேதா - தானே ஜயிப்பவர்.

151. ஓம் விஶ்வயோநயே நமঃ—விஶ்வயோநிঃ - ஜகதுற்பத்தி ஸ்தானமாயிருப்பவர்.

152. ஓம் புனர்வஸவே நமঃ—புனர்வஸுঃ - பிரமாதிகளிடத்திலும் அந்தர்யாமியானவர்.

உபேந்த்ரோ வாமநঃ ப்ராம்ஶுரமோகஶ்ஶுசிரூர்ஜிதঃ ।

அதீந்த்ரஸ்ஸங்க்ரஹஸ்ஸர்கோ த்ருதாத்மா நியமோ யமঃ (17)

153. ஓம் உபேந்த்ராய நமঃ—உபேந்த்ரঃ - உபேந்திரனென்கிற சூரியரூபி.

154. ஓம் வாமநாய நமঃ—வாமநঃ - வாமனவதாரம் செய்தவர்.

155. ஓம் ப்ராம்சவே நமঃ—ப்ராம்சுঃ - உன்னதசரீரமெடுத்தவர்.

156. ஓம் அமோகாய நமঃ—அமோகঃ - பழுதில்லாக் காரியம் முடிப்பவர்.

157. ஓம் ஶுசயே நமঃ—ஶுசிঃ - சுத்த ஸத்வரூபி.

158. ஓம் ஊர்ஜிதாய நமঃ—ஊர்ஜிதঃ - அதிக வலிமையுடையவர்.

159. ஓம் அதீந்த்ராய நமঃ—அதீந்த்ரঃ - இந்திரனுக்கு மேற்பட்டவர்.

160. ஓம் ஸங்க்ரஹாய நமঃ—ஸங்க்ரஹঃ - பக்தர்களை ஒவ்வொருவராய்த் தன்னிடம் சேர்த்துக்கொள்பவர்.

161. ஓம் ஸர்காய நமঃ—ஸர்கঃ - உண்டாக்கும் சக்தியுள்ளவர்.

162. ஓம் த்ருதாத்மநே நமঃ—த்ருதாத்மா - தான் ஏகரூபியாயிருப்பவர்.

163. ஓம் நியமாய நமஃ—நியமஃ - ஆசாரசீலர்.

164. ஓம் யமாய நமஃ—யமஃ - எல்லாவற்றையும் தன்னுள் ளடக்கிக்கொள்கிறவர்.

3 3 3 3 4 4
வேத்யோ வைத்யஸ்ஸதாயோகீ வீரஹா மாதவோ மதுஃ ।

3 3
அதீந்த்ரியோ மஹாமாயோ மஹோத்ஸாஹோ மஹாபலஃ ॥ 18

165. ஓம் வேத்யாய நமஃ—வேத்யஃ - சுலபமாயறியக் கூடிய வர்.

166. ஓம் வைத்யாய நமஃ—வைத்யஃ - பிறவிப் பிணியை யொழிக்கும்வைத்தியர்.

167. ஓம் ஸதாயோகிநே நமஃ—ஸதாயோகீ - எப்பொ தும் யோக நித்திரை செய்பவர்.

168. ஓம் வீரக்நே நமஃ—வீரஹா - யுத்தத்தில் வீரர் களை சம்ஹரிப்பவர்.

169. ஓம் மாதவாய நமஃ—மாதவஃ - ஞானத்தைக் கொடுப் பவர்.

170. ஓம் மதவே நமஃ —மதுஃ - தேன்போல் மதுரமான வர்.

171. ஓம் அதீந்த்ரியாய நமஃ—அதீந்த்ரியஃ - இந்திரியங் களுக்குத் தென்படாதவர்.

172. ஓம் மஹாமாயாய நமஃ—மஹாமாயஃ - மஹாமாயாவி.

173. ஓம் மஹோத்ஸாஹாய நமஃ—மஹோத்ஸாஹஃ - ஜகத் ரக்ஷணத்திலதிக ஊக்க முள்ளவர்.

174. ஓம் மஹாபலாய நமஃ—மஹாபலஃ - சிறந்த மகிமை உடையவர்.

3 3
மஹாபுத்திர்மஹாவீர்யோ மஹாஶக்திர்மஹாத்யுதிः ।

3 3 4
அநிர்தேஶ்யவபுः ஸ்ரீமாநமேயாத்மா மஹாத்ரித்ருத் ॥ (19)

175. ஓம் மஹாபுத்தயே நமः—மஹாபுத்திः - எல்லா வற்றையுமறியும் பேரறிவுடையவர்.

176. ஓம் மஹாவீர்யாய நமः—மஹாவீர்யः - அதிக வீரத் தன்மை பொருந்தியவர்.

177. ஓம் மஹாஶக்தயே நமः—மஹாசக்திः - நினைத்த மாத்திரத்தில் சிருஷ்டிக்கும் மஹாசக்தியுள்ளவர்.

178. ஓம் மஹாத்யுதயே நமः—மஹாத்யுதிः - அதிகமாய் ப்ரகாசிப்பவர்.

179. ஓம் அநிர்தேஶ்யவபுஷே நமः—அநிர்தேஶ்யவபுः - பகுத்தறிய முடியாத சரீரமுடையவர்.

180. ஓம் ஸ்ரீமதே நமः—ஸ்ரீமான் - லக்ஷ்மீ விலாசமுள்ள வர்.

181. ஓம் அமேயாத்மநே நமः—அமேயாத்மா - ஆழ்ந்த தைரிய முள்ளவர்.

182. ஓம் மஹாத்ரித்ருதே நமः—மஹாத்ரித்ருத் - சமுத் திரங்கடையும்போது அமிழ்ந்த மந்தர மலையைத் தூக்கிச் சுமந்தவர்.

4 3
மஹேஷ்வாஸோ மஹீபர்தா ஸ்ரீநிவாஸஸ்ஸதாங்கதிः ।

3 4 3 3 3 3 3
அநிருத்தஸ்ஸுராநந்தோ கோவிந்தோ கோவிதாம்பதிः ॥ 20

183. ஓம் மஹேஷ்வாஸாய நமः—மஹேஷ்வாஸः - சிறந்த பாணப்ரயோகஞ் செய்கிறவர்.

184. ஓம் மஹீபர்த்ரே நம:—மஹீபர்த்தா - ஸோமகாஸுரனைக் கொன்று மறுபடி பூமியைத் திரும்பக் கொண்டுவந்தவர்.

185. ஓம் ஸ்ரீநிவாஸாய நம:—ஸ்ரீநிவாஸ: - லக்ஷ்மியை மார்பிலணிந்தவர்.

186. ஓம் ஸதாம்கதயே நம:—ஸதாம்கதி: - ஸாதுக்களையும் முக்திக்கு காரணபூதர்.

187. ஓம் அநிருத்தாய நம:—அநிருத்த: - நான்கு வ்யூஹத்திலொன்றான அநிருத்த ரூபி.

188. ஓம் ஸுராநந்தாய நம:—ஸுராநந்த: - தேவர்களைத் திருப்தி செய்பவர்.

189. ஓம் கோவிந்தாய நம:—கோவிந்த: - பசுக்களான ஜீவர்களை விசாரிப்பவர்.

190. ஓம் கோவிதாம்பதயே நம:—கோவிதாம்பதி: - ஞானிகளுள் சிறந்தவர்.

3 4 3
மரீசிர்தமநோ ஹம்ஸ: ஸுபர்ணோ புஜகோத்தம: ।

4 3 4
ஹிரண்யநாபஸ்ஸுதபா: பத்மநாப: ப்ரஜாபதி: ॥ (21)

191. ஓம் மரீசயே நம:—மரீசி: - ஒளிக்கு ஒளியாயிருப்பவர்.

192. ஓம் தமநாய நம:—தமந: - துஷ்டநிக்ரஹஞ் செய்பவர்.

193. ஓம் ஹம்ஸாய நம:—ஹம்ஸ: - ஹம்ஸவடிவாய் உபதேசஞ் செய்தவர்.

194. ஓம் ஸுபர்ணாய நம:—ஸுபர்ண: - வேதரூபியான கருடபகவானானவர்.

195. ஓம் புஜகோத்தமாய நமஃ—புஜகோத்தமஃ - பன்னகசயனன்.

196. ஓம் ஹிரண்யநாபாய நமஃ—ஹிரண்யநாபஃ - ஸுவர்ணம் போன்ற நாபியை யுடையவர்.

197. ஓம் ஸுதபஸே நமஃ—ஸுதபாஃ - பதரிகாஸ்ரமத்தில் கடுந்தவம் புரிந்தவர்.

198. ஓம் பத்மநாபாய நமஃ—பத்மநாபஃ - தாமரை போன்ற நாபி யுடையவர்.

199. ஓம் ப்ரஜாபதயே நமஃ—ப்ரஜாபதிஃ - பிரஜைகளை ரக்ஷிப்பவர்.

3 4 4 2
அம்ருத்யுஸ்ஸர்வத்ருக் ஸிம்ஹஸ்ஸந்தாதா ஸந்திமாந்ஸ்திரஃ।

3
அஜோ துர்மர்ஷணச்சாஸ்தா விச்ருதாத்மா ஸுராரிஹா॥22

200. ஓம் அம்ருத்யவே நமஃ—அம்ருத்யுஃ - மரணமில்லாதவர்.

201. ஓம் ஸர்வத்ருசே நமஃ—ஸர்வத்ருக் - வித்தியாஸமில்லாமல் எல்லோரையும் பார்ப்பவர்.

202. ஓம் ஸிம்ஹாய நமஃ—ஸிம்ஹஃ - சரணமடைந்தோரைக் காப்பவர்.

203. ஓம் ஸந்தாத்ரே நமஃ—ஸந்தாதா - வினைப் பயனுக்கேற்றபடி தக்க சரீரத்தோடு ஜீவனைச் சேர்த்து வைப்பவர்.

204. ஓம் ஸந்திமதே நமஃ—ஸந்திமாந் - பக்தர்களோடு நித்ய ஸம்பந்தமுடையவர்.

205. ஓம் ஸ்திராய நமஃ—ஸ்திரஃ - மாறுதலில்லாதவர்.

206. ஓம் அஜாய நமஃ—அஜஃ - பிறப்பில்லாதவர்.

207. ஓம் துர்மர்ஷணாய நம:—துர்மர்ஷண: - சத்துருக்களுக்குப் பயங்கரர்.

208. ஓம் ஶாஸ்த்ரே நம:—ஶாஸ்தா - ஆக்ஞையிடுகிறவர்.

209. ஓம் விஶ்ருதாத்மநே நம:—விஶ்ருதாத்மா - வேதத்தில் சொல்லியபடி திவ்ய சரீரமுடையவர்.

210. ஓம் ஸுராரிக்நே நம:—ஸுராரிஹா - அசுரசம்ஹாரஞ் செய்தவர்.

3 3 4
குருர் குருதமோ தாம ஸத்யஸ்ஸத்யபராக்ரம: ।

3 3 4
நிமிஷோऽநிமிஷஸ்ஸ்ரக்வீ வாசஸ்பதிருதாரதீ: ॥ (23)

211. ஓம் குருதமாயகுரவே நம:—குருர்குருதம: - ஆசாரியர்களுக்கு முதலாசாரியர்.

212. ஓம் தாம்நே நம:—தாம - சோதிரூபி.

213. ஓம் ஸத்யாய நம:—ஸத்ய: - ஸாதுக்களுக்கு உபகாரஞ் செய்கிறவர்.

214. ஓம் ஸத்யபராக்ரமாய நம:—ஸத்யபராக்ரம: - ஸத்யத்தால் சத்துருக்களை நாசஞ் செய்பவர்.

215. ஓம் நிமிஷாய நம:—நிமிஷ: - யோகநித்திரையில் கண்களை மூடியிருப்பவர்.

216. ஓம் அநிமிஷாய நம:—அநிமிஷ: - எப்போதும் விழித்துக்கொண்டிருப்பவர்.

217. ஓம் ஸ்ரக்விணே நம:—ஸ்ரக்வீ - ஹாரமணிந்தவர்.

218. ஓம் வாசஸ்பதயே நம:—வாசஸ்பதி: - சரஸ்வதீபதியான பிரம்மஸ்வரூபி.

219. ஓம் உதாரதியே நம:—உதாரதீ: - ஸர்வார்த்த ஞானமுடையவர்.

3 3
அக்ரணீர் க்ராமணீஃஸ்ரீமாந் ந்யாயோ நேதா ஸமீரண:।

3 4
ஸஹஸ்ரமூர்த்தா விஸ்வாத்மா ஸஹஸ்ராக்ஷஸ்ஸஹஸ்ரபாத் ॥

220. ஓம் அக்ரண்யே நம:—அக்ரணீ: - ஸநகஸநந்தனுதி நித்ய ஸூரிகளுக்கு அதிபர்.

221. ஓம் க்ராமண்யே நம:—க்ராமணீ: - பக்தர்களை நித்யர்களோடு சேர்ப்பிக்கிறவர்.

222. ஓம் ஸ்ரீமதே நம:—ஸ்ரீமாந் - அதிக தேஜஸுடையவர்.

223. ஓம் ந்யாயாய நம:—ந்யாய: - நீதி சுவரூபி.

224. ஓம் நேத்ரே நம:—நேதா - சம்சாரத்திலிருந்து கரையேற்றுகிறவர்.

225. ஓம் ஸமீரணாய நம:—ஸமீரண: - ஸத்விஷயங்களில் ஏவுகிறவர்.

226. ஓம் ஸஹஸ்ரமூர்த்நே நம:—ஸஹஸ்ரமூர்த்தா அநேகம் சிரமுள்ள மூல புருஷர்.

227. ஓம் விஸ்வாத்மநே நம:—விஸ்வாத்மா - உலகவடிவானவர்.

228. ஓம் ஸஹஸ்ராக்ஷாய நம:—ஸஹஸ்ராக்ஷ: - அநேகங் கண்களுள்ளவர்.

229. ஓம் ஸஹஸ்ரபதே நம:—ஸஹஸ்ரபாத் - அநேக கால்களுடையவர்.

3
ஆவர்தநோ நிவ்ருத்தாத்மா ஸம்வ்ருதஸ்ஸம்ப்ரமர்தந: ।

4 4
அஹஸ்ஸம்வர்தகோ வஹ்நிரநிலோ தரணீதர: ॥ (25)

230. ஓம் ஆவர்த்தநாய நமঃ—ஆவர்த்தநঃ - பூசக்கரத்தைச் சுழற்றுகிறவர்.

231. ஓம் நிவ்ருத்தாத்மநே நமঃ—நிவ்ருத்தாத்மா - ப்ரகிருதி ஸம்பந்தத்தால் மயங்குவோருக்குத் தெளிவு வராமல் மறைப்பவர்.

232. ஓம் ஸம்வ்ருதாய நமঃ—ஸம்வ்ருதঃ - அஞ்ஞானிகள் கண்ணுக்கு மறைந்திருப்பவர்.

233. ஓம் ஸம்ப்ரமர்தநாய நமঃ—ஸம்ப்ரமர்த்தநঃ - மாயையைப் போக்குகிறவர்.

234. ஓம் அஹஸ்ஸம்வர்த்தகாய நமঃ—அஹஸ்ஸம்வர்த்தகঃ - பகலைப்பிரிக்கும் சூரியரூபி.

235. ஓம் வஹ்நயே நமঃ—வஹ்நிঃ - அக்னிரூபி.

236. ஓம் அநிலாய நமঃ—அநிலঃ - சகலரையும் ஜீவிக்கச் செய்பவர்.

237. ஓம் தரணீதராய நமঃ—தரணீதரঃ - பூமியைத் தாங்குகிறவர்.

ஸுப்ரஸாதঃ[3] ப்ரஸந்நாத்மா[3] விஶ்வஸ்ருக்[4]விஶ்வபுக்[3]விபுঃ[4] ।

ஸத்கர்தா ஸத்க்ருதঃ ஸாதுঃ ஜஹ்நுர்[4]நாராயணோ நரঃ ॥ (26)

238. ஓம் ஸுப்ரஸாதாய நமঃ—ஸுப்ரஸாதঃ - சத்ருவிடத்திலும் அனுக்ரகிப்பவர்.

239. ஓம் ப்ரஸந்நாத்மநே நமঃ—ப்ரஸந்நாத்மா - கலக்கமில்லா மனமுடையவர்.

240. ஓம் விஶ்வஸ்ருஜே நமঃ—விஶ்வஸ்ருக் - வேண்டியவற்றை அளிப்பவர்.

241. ஓம் விஸ்வபுக்விபவே நமः—விஸ்வபுக்விபुः - எங்கும் நிறைந்து உலகத்தை ரக்ஷிப்பவர்.

242. ஓம் ஸத்கர்த்ரே நமः—ஸத்கர்த்தா - முக்தர்களை நல்வரவோடு உபசரிப்பவர்.

243. ஓம் ஸத்க்ருதாய நமः—ஸத்க்ருதः - சக்திக்கேற்ற பூஜை முதலியவைகளை பெற்றுக்கொள்பவர்.

244. ஓம் ஸாதவே நமः—ஸாதுः - நியாயமாய் நடப்பவர்.

245. ஓம் ஜஹ்நவே நமः—ஜஹ்நுः - பாவிகளுக்குப் புலப்படாதவர்.

246. ஓம் நாராயணாய நமः—நாராயணः - ஜீவகோடிகளுள் பிரவேசித்து வசிப்பவர்.

247. ஓம் நராய நமः—நரः - நரனை அர்ச்சுனரூபி.

அஸங்க்யேயோ² ப்ரமேயாத்மா விஸிஷ்டஶ்ஶிஷ்டக்ருச்சுசிः²।

ஸித்தார்³⁴தஸ்ஸி²த்தஸங்³⁴கல்பஸ்ஸித்³³தி³தஸ்ஸித்³⁴திஸா⁴தநः॥ (27)

248. ஓம் அஸங்க்யேயாய நமः—அஸங்க்யேயः - அளவற்ற ஐஸ்வரியமுடையவர்.

249. ஓம் அப்ரமேயாத்மனே நமः—அப்ரமேயாத்மா - ப்ரத்யக்ஷம், அனுமானம், உபமானம், சப்தம் முதலிய பிரமாணங்களால் நிர்ணயிக்க முடியாதவர்.

250. ஓம் விஸிஷ்டாய நமः—விஸிஷ்டः - எல்லாம்லயித்துத் தானொருவனாயிருப்பவர்.

251. ஓம் ஶிஷ்டக்ருதே நமः—ஶிஷ்டக்ருத் - ஞானிகளைத் தன்னிடம் சேரத்தக்க குணமுள்ளவர்களாக்ச் செய்பவர்.

252. ஓம் ஶுசயே நமஃ—ஶுசிஃ - பரிசுத்தமானவர்.

253. ஓம் ஸித்தார்தாய நமஃ—ஸித்தார்தஃ - எல்லாம் நிறைந்திருப்பவர்.

254. ஓம் ஸித்தஸங்கல்பாய நமஃ—ஸித்தஸங்கல்பஃ முடிவான ஸங்கல்ப முடையவர்.

255. ஓம் ஸித்திதாய நமஃ—ஸித்திதஃ - மோக்ஷ சித்தியைக் கொடுப்பவர்.

256. ஓம் ஸித்திஸாதநாய நமஃ—ஸித்திஸாதநஃ - முக்திக்குச் சாதனமானவர்.

வ்ருஷாஹீ வ்ருஷபோ விஷ்ணுர் வ்ருஷபர்வா வ்ருஷோதரஃ

வர்த்தநோ வர்த்தமாநஶ்ச விவிக்தஶ்ஶ்ருதிஸாகரஃ ॥ (28)

257. ஓம் வ்ருஷாஹிணே நமஃ—வ்ருஷாஹீ - தர்மத்தால் தன்னை அடையச் செய்பவர்.

258. ஓம் வ்ருஷபாய நமஃ—வ்ருஷபஃ - தர்மத்தால் விளங்குகிறவர்.

259. ஓம் விஷ்ணவே நமஃ—விஷ்ணுஃ - எங்கும் வியாபித்தவர்.

260. ஓம் வ்ருஷபர்வணே நமஃ—வ்ருஷபர்வா - தர்மத்தை முக்திக்கு முதற்படியாயமைத் திருப்பவர்.

261. ஓம் வ்ருஷோதராய நமஃ—வ்ருஷோதரஃ - தர்மத்தையே உருவாயெடுத்துச் சஞ்சரிப்பவர்.

262. ஓம் வர்த்தநாய நமஃ—வர்த்தநஃ - பிராணிகளை வளர்ப்பவர்.

263. ஓம் வர்த்தமாநாய நமஃ—வர்த்தமாநஃ - வளரச்செய்பவர்.

264. ஓம் விவிக்தாய நமஃ—விவிக்தஃ - ஏகாந்தமாயிருப்பவர்.

265. ஓம் ஶ்ருதிஸாகராய நமஃ—ஶ்ருதிஸாகரஃ - ச்ருதிகளுக்குக் கடல்போன்றவர்.

ஸுபுஜோ துர்தரோ வாக்மீ மஹேந்த்ரோ வஸுதோ வஸுஃ।
அநேகரூபோ ப்ருஹத்ரூபஃ ஶிபிவிஷ்டஃ ப்ரகாஶநஃ ॥ (29)

266. ஓம் ஸுபுஜாய நமஃ—ஸுபுஜஃ - அபயமளிக்கும் திருக்கைகளையுடையவர்.

267. ஓம் துர்தராய நமஃ—துர்தரஃ - சிரமப்பட்டு இருதயத்தில் தரிக்கக்கூடியவர்.

268. ஓம் வாக்மிநே நமஃ—வாக்மீ- பேசுந்திறமையுள்ளவர்.

269. ஓம் மஹேந்த்ராய நமஃ—மஹேந்த்ரஃ - பரமைச்வரியவான்.

270. ஓம் வஸுதாய நமஃ—வஸுதஃ - பூமியில் வேண்டுந் திரவிய மளிப்பவர்.

271. ஓம் வஸவே நமஃ—வஸுஃ - மோக்ஷமாகிற தன் பரம ஐச்வரியத்தை யளிப்பவர்.

272. ஓம் அநேகரூபாய நமஃ—அநேகரூபஃ - பற்பல ரூபமெடுத்தவர்.

273. ஓம் ப்ருஹத்ரூபாய நமஃ—ப்ருஹத்ரூபஃ - எங்கும் வியாபித்த பெரிய உருவமெடுத்தவர்.

274. ஓம் ஶிபிவிஷ்டாய நமஃ—ஶிபிவிஷ்டஃ - சூரிய கிரணங்களுள் பிரவேசித்திருப்பவர்.

275. ஓம் ப்ரகாஶநாய நமஃ—ப்ரகாஶநஃ - பக்தர்களை ஞானத்தால் பிரகாசிக்கச் செய்பவர்.

3 4
ஓஜஸ்தேஜோ த்யுதிதர: ப்ரகாஶாத்மா ப்ரதாபந: ।

4 3 4 4 3
ருத்தஸ்ஸ்பஷ்டாக்ஷரோ மந்த்ர: சந்த்ராம் ஶுர்பாஸ்கரத்
யுதி: ॥ (30)

276. ஓம் ஓஜஸ்தேஜோத்யுதிதராய நம:—ஓஜஸ்தேஜோத்யுதிதர: - பலம், காந்தி, பராக்கிரமமிவைகளை உடையவர்.

277. ஓம் ப்ரகாஶாத்மனே நம:—ப்ரகாஶாத்மா - சோதி மண்டல மத்தியில் வசிப்பவர்.

278. ஓம் ப்ரதாபநாய நம:—ப்ரதாபந: - சத்துருக்களைத் தவிக்கச் செய்பவர்.

279. ஓம் ருத்தாய நம:—ருத்த: - பரிபூர்ணர்.

280. ஓம் ஸ்பஷ்டாக்ஷராய நம:—ஸ்பஷ்டாக்ஷர: - வேதங்களால் தன் மகிமையை வெளிப்படுத்தினவர்.

281. ஓம் மந்த்ராய நம:—மந்த்ர: - வேதமந்திர ஸ்வரூபி.

282. ஓம் சந்த்ராம்ஶவே நம:—சந்த்ராம்ஶு: - சந்திர கிரணம்போல் சந்தோஷப்படுத்துகிறவர்.

283. ஓம் பாஸ்கரத்யுதயே நம:—பாஸ்கரத்யுதி: - சூரிய காந்தி போன்ற ஒளியுடையவர்.

3 4 4 3 3
அம்ருதாம்ஶூத்பவோ பாநுஶ்ஶஶிபிந்துஸ்ஸுரேஶ்வர: ।

4 4
ஔஷதம் ஜகதஸ்ஸேதுஸ்ஸத்யதர்மபராக்ரம: ॥ (31)

284. ஓம் அம்ருதாம்ஶூத்பவாய நம:—அம்ருதாம்ஶூத்பவ: - சந்திரனுக்கு உத்பத்தி ஸ்தானமான சமுத்திரரூபி.

285. ஓம் பாநவே நம:—பாநு: - அதிக காந்தியுள்ள மேனியுடையவர்.

286. ஓம் ஶஶபிந்தவே நம:—ஶஶபிந்து: - துன்மார்க்கர்களை அழிப்பவர்.

287. ஓம் ஸுரேஶ்வராய நம:—ஸுரேஶ்வர: - தேவாதிதேவர்.

288. ஓம் ஔஷதாய நம:—ஔஷதம் - மூலிகை போன்றவர்.

289. ஓம் ஜகதஸ்ஸேதவே நம:—ஜகதஸ்ஸேது: - உலகத்திற்கு வரம்பாயிருப்பவர்.

290. ஓம் ஸத்யதர்மபராக்ரமாய நம:—ஸத்யதர்மபராக்ரம:-நிஜமான தர்மம் பராக்கிரம மிவைகளை யுடையவர்.

4 4 4 2
பூதபவ்யபவந்நாத: பவந: பாவநோ௨நல: ।

3 4
காமஹா காமக்ருத் காந்த: காம: காமப்ரத: ப்ரபு: ॥ (32)

291. ஓம் பூதபவ்யபவந்நாதாய நம:—பூதபவ்யபவந்நாத: - முக்காலத்தோர்க்கும் நாதர்.

292. ஓம் பவநாய நம:—பவந: - பாபிகளை பரிசுத்தஞ் செய்பவர்.

293. ஓம் பாவநாய நம:—பாவந: - காற்றை வீசச் செய்பவர்.

294. ஓம் அநலாய நம:—அநல: - பக்தியைத் தவிர மற்றவைகளில் வெறுப்புண்டாக்குபவர்.

295. ஓம் காமக்நே நம:—காமஹா - காமத்தை வேரோடொழிப்பவர்.

296. ஓம் காமக்ருதே நமஃ—காமக்ருத் - பக்தர் மனோ பீஷ்டத்தை அளிப்பவர்.

297. ஓம் காந்தாய நமஃ—காந்தஃ - உத்தம குணங்களால் விரும்பத்தக்கவர்.

298. ஓம் காமாய நமஃ—காமஃ - மன்மதரூபி.

299. ஓம் காமப்ரதாய நமஃ—காமப்ரதஃ - இஷ்டமான லோகங்களை அளிப்பவர்.

300. ஓம் ப்ரபவே நமஃ—ப்ரபுஃ - மஹா பிரபு.

யுகாதிக்ருத் யுகாவர்தோ நைகமாயோ மஹாஶநஃ ।
அத்ருஶ்யோ வ்யக்தரூபஶ்ச ஸஹஸ்ரஜிதநந்தஜித் ॥ (33)

301. ஓம் யுகாதிக்ருதே நமஃ—யுகாதிக்ருத் - யுகமுதலியவைகளை ஏற்படுத்தியவர்.

302. ஓம் யுகாவர்தாய நமஃ—யுகாவர்தஃ - யுகங்களை மாறி மாறி வரச்செய்பவர்.

303. ஓம் நைகமாயாய நமஃ—நைகமாயஃ - அளவற்ற மாயா சக்தியுள்ளவர்.

304. ஓம் மஹாஶநாய நமஃ—மஹாஶநஃ - வடவாக்னியாய் சமுத்திர ஜலத்தை வற்றச் செய்பவர்.

305. ஓம் அத்ருஶ்யாய நமஃ—அத்ருஶ்யஃ - தனது உருவத்தைப் பிறருக்குக் காட்டாதவர்.

306. ஓம் வ்யக்தரூபாய நமஃ—வ்யக்தரூபஃ - புண்யசாலிகளுக்குத் தரிசனமளிப்பவர்.

307. ஓம் ஸஹஸ்ரஜிதே நமஃ—ஸஹஸ்ரஜித் - அளவற்ற அசுரஜயஞ் செய்தவர்.

308. ஓம் அநந்தஜிதே நமஃ—அநந்தஜித் - ஒருவராலும் நிச்சயிக்க முடியாத மகிமை யுடையவர்.

2 3
இஷ்டோ²விஶிஷ்டஶ்ஶிஷ்டேஷ்டஃ ஶிகண்டீ நஹுஷோ
வ்ருஷஃ ।

4 4 3 4
க்ரோதஹா க்ரோதக்ருத்கர்த்தா விஶ்வபாஹுர்மஹீதரஃ ॥34

**309.** ஓம் இஷ்டோவிஶிஷ்டாய நமஃ—இஷ்டோவிஶிஷ்டஃ-எல்லோராலும் விருப்பத்துடன் பூஜிக்கப்பட்டவர்.

**310.** ஓம் ஶிஷ்டேஷ்டாய நமஃ—ஶிஷ்டேஷ்டஃ - ஞானிகளுக்கு இஷ்டர்.

**311.** ஓம் ஶிகண்டினே நமஃ—ஶிகண்டீ - மயில்தோகையாலலங்கரிக்கப்பட்ட கொண்டையை யுடையவர்.

**312.** ஓம் நஹுஷாய நமஃ—நஹுஷஃ - மாயையால் உலகத்தைக் கட்டுகிறவர்.

**313.** ஓம் வ்ருஷாய நமஃ—வ்ருஷஃ - ஸநாதன தர்மரூபி.

**314.** ஓம் க்ரோதக்னே நமஃ—க்ரோதஹா - பக்தர்களுக்குக் கோப மூட்டுவோரை நாசஞ்செய்பவர்.

**315.** ஓம் க்ரோதக்ருதே நமஃ—க்ரோதக்ருத் - கோபமென்னு முள்சத்துருவை ஸம்ஹரித்தவர்.

**316.** ஓம் கர்த்ரே நமஃ—கர்த்தா - துஷ்டர்களைத் தண்டிக்கிறவர்.

**317.** ஓம் விஶ்வபாஹவே நமஃ—விஶ்வபாஹுஃ - அளவில்லாத திருக்கைகளை யுடையவர்.

**318.** ஓம் மஹீதராய நமஃ—மஹீதரஃ - துஷ்டர்களைப் போக்கி பூமியை நிலைநிறுத்துபவர்..

2 3
அச்யுதஃ ப்ரதிதஃ ப்ராணஃ ப்ராணதோ வாஸவாநுஜஃ ।

4 4 2 2
அபாம்நிதிரதிஷ்டாநமப்ரமத்தஃ ப்ரதிஷ்டிதஃ ॥ (35)

319. ஓம் அச்யுதாய நமஃ—அச்யுதஃ - தன்னிடம் விட்டு வேறிடமாறுதவர்.

320. ஓம் ப்ரதிதாய நமஃ—ப்ரதிதஃ - எங்கும் பிரஸித்தி பெற்றவர்.

321. ஓம் ப்ராணாய நமஃ—ப்ராணஃ - ப்ராணனென்கிற பெயருடன் ஹ்ருதயத்தில் வசிப்பவர்.

322. ஓம் ப்ராணதாய நமஃ—ப்ராணதஃ - தேவர்களுக்கும் பலத்தைக் கொடுப்பவர்.

323. ஓம் வாஸவானுஜாய நமஃ—வாஸவானுஜஃ - அமுத மூட்ட இந்திரனுக்குத் தம்பியாய்ப் பிறந்தவர்.

324. ஓம் அபாம்நிதயே நமஃ—அபாம் நிதிஃ - ஜீவராசி களுக்கு நிதிபோன்றவர்.

325. ஓம் அதிஷ்டானாய நமஃ—அதிஷ்டானம் - எல்லாவற் றிற்கும் நிலையான இடமாயிருப்பவர்.

326. ஓம் அப்ரமத்தாய நமஃ—அப்ரமத்தஃ - ஜாக்கிரதை யாய் ரக்ஷிப்பவர்.

327. ஓம் ப்ரதிஷ்டிதாய நமஃ—ப்ரதிஷ்டிதஃ - ஸ்ரீவைகுண் டத்திலேயே ஸ்திரமாயிருப்பவர்.

3 3 4 4 3
ஸ்கந்தஸ்ஸ்கந்ததரோ துர்யோ வரதோ வாயுவாஹநஃ ।

3 3 3 4 3 3 3
வாஸுதேவோ ப்ருஹத்பானுராதிதேவஃ புரந்தரஃ ॥ (36)

328. ஓம் ஸ்கந்தாய நமஃ—ஸ்கந்தஃ - சத்துருக்களைச் சூழ்ந்துகொள்பவர்.

329. ஓம் ஸ்கந்ததராய நமஃ—ஸ்கந்ததரஃ - தர்மரக்ஷகன்.

330. ஓம் துர்யாய நமஃ—துர்யஃ - பக்தர்களின் யோக க்ஷேமபாரத்தை வஹிக்கிறவர்.

331. ஓம் வரதாய நமஃ—வரதஃ - வேண்டிய வரங்களை யளிப்பவர்.

332. ஓம் வாயுவாஹநாய நமஃ—வாயுவாஹநஃ - சப்த வாயுக்களுக்கும் எஜமானர்.

333. ஓம் வாஸுதேவாய நமஃ—வாஸுதேவஃ - பிரளயத்தில் ஆலிலைமேல் பாலகனாய் விளங்குகிறவர்.

334. ஓம் ப்ரஹத்பாநவே நமஃ—ப்ரஹத்பாநுஃ - சூரியன் முதலிய கிரகஸ்ரூபி.

335. ஓம் ஆதிதேவாய நமஃ—ஆதிதேவஃ - எல்லாவற்றிற்கும் முதல்வனாய் விளங்குகிறவர்.

336. ஓம் புரந்தராய நமஃ—புரந்தரஃ - அசுரர் பட்டணங்களை அழித்தவர்.

அஶோகஸ்தாரணஸ்தாரஃ ஶூரஶ்ஶௌரிர்ஜநேஶ்வரஃ ।

அநுகூலஶ்ஶதாவர்தஃ பத்மீ பத்மநிபேக்ஷணஃ ॥ (37)

337. ஓம் அஶோகாய நமஃ—அஶோகஃ - பசி முதலிய துன்பங்களற்றவர்.

338. ஓம் தாரணாய நமஃ—தாரணஃ - பந்தத்தினின்றும் கரையேறு முபாயமானவர்.

339. ஓம் தாராய நமஃ—தாரஃ - ஜனனாதிகளிலிருந்து கரையேற்றுபவர்.

340. ஓம் ஶூராய நமஃ—ஶூரஃ - சௌர்யவான்.

341. ஓம் ஶௌரயே நமஃ—ஶௌரிஃ - சூரவம்சத்தில் ஜனித்தவர்.

342. ஓம் ஜநேஶ்வராய நமஃ—ஜநேஶ்வரஃ - ஸர்வலோகேச்வரர்.

343. ஓம் அநுகூலாய நம:—அநுகூல: - ஸாதுக்களுக்கு ஒத்தாசையாயிருப்பவர்.

344. ஓம் ஶதாவர்தாய நம:—ஶதாவர்த: - தேகத்தி லுள்ள நாடிகளில் பிராணரூபியானவர்.

345. ஓம் பத்மிநே நம:—பத்மீ - திருவடிச்சோபையை யுடையவர்.

346. ஓம் பத்மநிபேக்ஷணாய நம:—பத்மநிபேக்ஷண: செந்தாமரைபோன்ற திருக்கண்களுள்ளவர்.

3 4 3 3 3 4 4
பத்மநாபோ²ரவிந்தாக்ஷ: பத்மகர்பஶ்ஶரீரப்ருத் ।

3 4 3 4 3 4 3 3 4
மஹர்த்திர்த்தோ வ்ருத்தாத்மா மஹாக்ஷோ கருடத்வஜ:॥38

347. ஓம் பத்மநாபாய நம:—பத்மநாப: - தாமரைபோன்ற நாபியை யுடையவர்.

348. ஓம் அரவிந்தாக்ஷாய நம:—அரவிந்தாக்ஷ: - தாமரை இதழ்போன்ற கண்களுள்ளவர்.

349. ஓம் பத்மகர்பாய நம:—பத்மகர்ப: - யோகிகளால் ஹ்ருதயகமல மத்தியில் நிறுத்தி த்யானம் செய்யப் படுகிறவர்.

350. ஓம் ஶரீரப்ருதே நம:—ஶரீரப்ருத் - உபாஸனை செய் பவர்களின் சரீரத்தைத் தன் சரீரம்போல் போஷிப்பவர்.

351. ஓம் மஹர்த்தயே நம:—மஹர்த்தி: - பக்தர்களைப் போஷிக்க அளவற்ற ஐசுவரியமுடையவர்.

352. ஓம் ரித்தாய நம:—ரித்த: - பக்தரக்ஷணத்தில் அதிக சந்தோஷமுள்ளவர்.

353. ஓம் வ்ருத்தாத்மனே நமஃ—வ்ருத்தாத்மா - புராண புருஷர்.

354. ஓம் மஹாக்ஷாய நமஃ—மஹாக்ஷஃ - சிறந்த இந்திரியங்களை யுடையவர்.

355. ஓம் கருடத்வஜாய நமஃ—கருடத்வஜஃ - கருடக் கொடியுடையவர்.

4 4

அதுலஶ்ஶரபோ பீமஃ ஸமயக்ஞோ ஹவிர்ஹரிஃ ।

ஸர்வலக்ஷணலக்ஷண்யோ லக்ஷ்மீவாந் ஸமிதிஞ்ஜயஃ ॥ (39)

356. ஓம் அதுலாய நமஃ—அதுலஃ - தனக்குச் சமானமாக வேறொருவரில்லாதவர்.

357. ஓம் ஶரபாய நமஃ—ஶரபஃ - மஹாப் பிரளயகாலத்தில் தானொருவனாகவே ஜலசாயியாய் விளங்குகிறவர்.

358. ஓம் பீமாய நமஃ—பீமஃ - தனது ஆக்ஞையை மீறியவர்களுக்குப் பயங்கர ரூபி.

359. ஓம் ஸமயக்ஞாய நமஃ—ஸமயக்ஞஃ - பக்தர்களின் ஆபத்கால மறிந்து காப்பவர்.

360. ஓம் ஹவிர்ஹரயே நமஃ—ஹவிர்ஹரிஃ - அவிர்ப் பாகத்தை தேவர்களுக் களிப்பவர்.

361. ஓம் ஸர்வலக்ஷணலக்ஷண்யாய நமஃ—ஸர்வலக்ஷண லக்ஷண்யஃ - எல்லா லக்ஷணங்களாலும் பரம புருஷனென்று அநுமானிக்கத்தக்கவர்.

362. ஓம் லக்ஷ்மீவதே நமஃ—லக்ஷ்மீவாந் - லக்ஷ்மீசமேதர்.

363. ஓம் ஸமிதிஞ்ஜயாய நமஃ—ஸமிதிஞ்ஜயஃ - சகலேந்திரிய வியாபாரங்களையும் ஜயித்தவர்.

3 3 3
விக்ஷரோ ரோஹிதோ மார்கோ ஹேதுர் தாமோதரஸ்ஸஹ: ।

4 4 3 3
மஹீதரோ மஹாபாகோ வேகவாநமிதாஶந: ॥ (40)

364. ஓம் விக்ஷராய நம:—விக்ஷர: - க்ஷீணதசை யடையாதவர்.

365. ஓம் ரோஹிதாய நம:—ரோஹித: - சிவந்த வர்ணமுடையவர்.

366. ஓம் மார்காய நம:—மார்க: - உபாசகர்களால் தேடத்தக்கவர்.

367. ஓம் ஹேதவே நம:—ஹேது: - இஷ்ட சித்திக்குக் காரணமானவர்.

368. ஓம் தாமோதராய நம:—தாமோதர: - பக்தர்களுக்காகக் கயிற்ருல் கட்டுப்பட்டவர்.

369. ஓம் ஸஹாய நம:—ஸஹ: - எல்லாவற்றையும் சகிப்பவர்.

370. ஓம் மஹீதராய நம:—மஹீதர: - ஆதிகூர்மம் முதலிய உருவங்களால் பூமியைத் தாங்குகிறவர்.

371. ஓம் மஹாபாகாய நம:—மஹாபாக: - மகா ஐஶ்வர்யவான்.

372. ஓம் வேகவதே நம:—வேகவாந் - தனது வாஸ்தவ சக்தியின் வேகம் எப்போதும் குறையாதவர்.

373. ஓம் அமிதாஶநாய நம:—அமிதாஶந: - பிரளயத்தில் உலகங்களை உண்டவர்.

4 4 3 3 4
உத்பவ: க்ஷோபணோ தேவ: ஸ்ரீகர்ப: பரமேஶ்வர: ।

3 3
கரணம் காரணம் கர்தா விகர்தா கஹநோ குஹ: ॥ (41)

374. ஓம் உத்பவாய நம:—உத்பவ: - ஸம்ஸாரப் பற்றில்லாதவர்.

375. ஓம் க்ஷோபணாய நம:—க்ஷோபண: - மகான்களின் மனதைக்கூட கலங்கச் செய்பவர்.

376. ஓம் தேவாய நம:—தேவ: - ஜீவர்களை மாயாபாசத்தால் கட்டி விளையாடுகிறவர்.

377. ஓம் ஸ்ரீகர்பாய நம:—ஸ்ரீகர்ப: - லக்ஷ்மியால் விரும்பப்பட்டவர்.

378. ஓம் பரமேஶ்வராய நம:—பரமேஶ்வர: - பரமபத நாதர்.

379. ஓம் கரணாய நம:—கரணம் - அஸாதாரணகாரணமானவர்.

380. ஓம் காரணாய நம:—காரணம் - நியதமாய் சிருஷ்டிக்கு முன்னிருப்பவர்.

381. ஓம் கர்த்ரே நம:—கர்த்தா - யதேச்சாகாரி.

382. ஓம் விகர்த்ரே நம:—விகர்த்தா - பக்தர்களுக் கேற்படும் துக்கங்களை நினைத்து வருந்துகிறவர்.

383. ஓம் கஹநாய நம:—கஹந: - கஷ்டப்பட்டு அறியக் கூடியவர்.

384. ஓம் குஹாய நம:—குஹ: - யோகமாயையால் மூடிக் கொண்டிருப்பவர்.

வ்யவஸாயோ வ்யவஸ்தா[2]நஸ்ஸம்ஸ்தா[2]நஸ்ஸ்தா[2]நதோ[3] த்ருவ:[4] ।

பரர்த்[3]தி[4]: பரமஸ்பஷ்டஸ்துஷ்ட: புஷ்டஶ்ஶுபே[4]க்ஷண: ॥ 42

385. ஓம் வ்யவஸாயாய நம:—வ்யவஸாய: - ஜ்யோதி சக்கரங்களுக்கு ஆதாரமானவர்.

386. ஓம் வ்யவஸ்தாநாய நமஃ—வ்யவஸ்தாநஃ - தேவாதி களுக்கு இடங்களைத் திட்டப்படுத்தினவர்.

387. ஓம் ஸம்ஸ்தாநாய நமஃ—ஸம்ஸ்தாநஃ - ஜீவர்கள் நெருக்கமில்லாமல் சுகமாய் தன்னிடம் வஸிக்க இடமுள்ளவர்.

388. ஓம் ஸ்தாநதாய நமஃ—ஸ்தாநதஃ - கர்மானுகுணமான பதவியை யளிப்பவர்.

389. ஓம் த்ருவாய நமஃ—த்ருவஃ - த்ருவமண்டல ரூபி.

390. ஓம் பரர்த்தயே நமஃ—பரர்த்திஃ - ஐசுவரிய மதமின்றி சாமான்யனுயிருப்பவர்.

391. ஓம் பரமஸ்பஷ்டாய நமஃ—பரமஸ்பஷ்டஃ - பரமபதத்தில் வியக்தமாய்ப் புலப்படுகிறவர்.

392. ஓம் துஷ்டாய நமஃ—துஷ்டஃ - நித்யசந்தோஷமுடையவர்.

393. ஓம் புஷ்டாய நமஃ—புஷ்டஃ - எல்லாம் நிறைந்தவர்.

394. ஓம் சுபேக்ஷணாய நமஃ—சுபேக்ஷணஃ - குளிர்ந்த கடாக்ஷமுள்ள திருக்கண்களுள்ளவர்.

ராமோ விராமோ விரதோ மார்கோ நேயோ நயோ²நயஃ ।
வீரஶ்ஶக்திமதாம் ஶ்ரேஷ்டோ தர்மோ தர்மவிதுத்தமஃ ॥(43)

395. ஓம் ராமாய நமஃ—ராமஃ - ரூபம் முதலியவைகளால் பிறரை வசீகரிப்பவர்.

396. ஓம் விராமாய நமஃ—விராமஃ - உலகத்தின் முடிவைச் செய்பவர்.

397. ஓம் விரதாய நமஃ—விரதஃ - ஆசையை யொழித்தவர்.

398. ஓம் மார்காய நமः—மார்கः - யோகிகளால் தேடக் கூடியவர்.

399. ஓம் நேயாய நமः—நேயः - தன்னடியில் பக்தர்களை அமரச் செய்பவர்.

400. ஓம் நயாய நமः—நயः - பக்தர்களைத் தன்னிடமழைத் துச் செல்பவர்.

401. ஓம் அநயாய நமः—அநயः - தனக்குமேல் வேறு எவரு மில்லாதவர்.

402. ஓம் வீராய நமः—வீரः - சத்ருக்களை நடுங்கச் செய்ப வர்.

403. ஓம் ஶக்திமதாம்ஶ்ரேஷ்டாய நமः—ஶக்திமதாம்ஶ்ரே ஷ்டः - சக்தியுள்ளவர்களுள் சிறந்தவர்.

404. ஓம் தர்மாய நமः—தர்மः - பெரியோர்கள் சிலாகிக்கக் கூடிய தர்மஸ்வரூபி.

405. ஓம் தர்மவிதுத்தமாய நமः—தர்மவிதுத்தமः - தர்மோ பதேசஞ் செய்வோருள் சிரேஷ்டர்

வைகுண்டः[2] புருஷः ப்ராணः[3] ப்ராணதः ப்ரணமः[2] ப்ருதுः ।
ஹிரண்யகர்பஶ்[3] ஶத்ருக்[4]னோ வ்யாப்[4]தோ வாயுரதோக்ஷஜः[4] ॥

(44)

406. ஓம் வைகுண்டாய நமः—வைகுண்டः - பஞ்ச பூதங் களை ஒன்று சேர்த்து தேக ஸ்ருஷ்டிசெய்பவர்.

407. ஓம் புருஷாய நமः—புருஷः - சரீரத்துள் ஜீவ ரூபியா யிருப்பவர்.

408. ஓம் ப்ராணாய நமः—ப்ராணः - வாயு ரூபமாய் எங் கும் வீசுகிறவர்.

409. ஓம் ப்ராணதாய நமः—ப்ராணதः - பிரளயத்திற்குப் பிறகு முன்னிருந்தது போலவே எல்லாவற்றிற்கும் உயிருண்டாக்குகிறவர்.

410. ஓம் ப்ரணமாய நமः—ப்ரணமः - எல்லோரையும் வணங்கச் செய்பவர்.

411. ஓம் ப்ருதவே நமः—ப்ருதுः - விஸ்தாரமான பிரபஞ்ச ரூபி.

412. ஓம் ஹிரண்யகர்பாய நமः—ஹிரண்யகர்பः ஸுவர்ணமயமான அண்டத்தை வயிற்றில் தரிப்பவர்.

413. ஓம் சத்ருக்நாய நமः—சத்ருக்நः - காமம் முதலிய உள் சத்துருக்களைக் கொல்கிறவர்.

414. ஓம் வ்யாப்தாய நமः—வ்யாப்தः - எங்கும் நிறைந்தவர்.

415. ஓம் வாயவே நமः—வாயுः - பக்தரைத் தேடிச் செல்பவர்.

416. ஓம் அதோக்ஷஜாய நமः—அதோக்ஷஜः - குறைவற்ற மகிமையுடன் அவதரிப்பவர்.

ருதுஸ்ஸுதர்ஶநः[3] காலः பரமேஷ்டீ[2] பரிக்ரஹः[3] ।
உக்ரஸ்[3]ஸம்வத்ஸரோ தக்ஷோ[3] விஶ்ராமோ விஶ்வதக்ஷிணः[3] ॥
(45)

417. ஓம் ருதவே நமः—ருதுः - வஸந்தம் முதலிய ருது ஸ்வரூபி.

418. ஓம் ஸுதர்ஶநாய நமः—ஸுதர்ஶநः - பக்தர்களுக்குச் சுமுகமாய்த் தோன்றுகிறவர்.

419. ஓம் காலாய நமः—காலः - காலரூபி.

420. ஓம் பரமேஷ்டிநே நம:—பரமேஷ்டீ - ஸ்ரீ வைகுண்டவாசி.

421. ஓம் பரிக்ரஹாய நம:—பரிக்ரஹ: - துஷ்டராயிருந்தாலும் தன்னைச் சரணமடைந்தவர்களைச் சேர்த்துக் கொள்பவர்.

422. ஓம் உக்ராய நம:—உக்ர: - கடுங்கோபி.

423. ஓம் ஸம்வத்ஸராய நம:—ஸம்வத்ஸர: - சக்கரம் முதலிய பரிஜனங்களுடன் ஆதிசேஷன்மீது சுகமாய் நித்திரை செய்பவர்.

424. ஓம் தக்ஷாய நம:—தக்ஷ: - புத்திகூர்மையாய் காரியஞ் செய்பவர்.

425. ஓம் விஶ்ராமாய நம:—விஶ்ராம: - தாபத்ரயத்தால் பீடிக்கப்பட்டவர்களுக்கு இளைப்பாறுமிடம்.

426. ஓம் விஶ்வதக்ஷிணாய நம:—விஶ்வதக்ஷிண: - காசியபருக்குப் பூமியை தக்ஷிணையாய்க் கொடுத்தவர்.

விஸ்தார: ஸ்தாவர: ஸ்தாணு: ப்ரமாணம் பீஜமவ்யயம் ।
அர்தோऽநர்தோ மஹாகோஶோ மஹாபோகோ மஹாதந: ॥
(46)

427. ஓம் விஸ்தாராய நம:—விஸ்தார: - அதர்மத்தை ஒழித்து தர்மத்தை எங்கும் விஸ்தாரப் படுத்துகிறவர்.

428. ஓம் ஸ்தாவராய நம:—ஸ்தாவர: - ஸ்தாவர ஸ்வரூபி.

429. ஓம் ஸ்தாணவே நம:—ஸ்தாணு: - நிலையாய்ப் பூமியைத் தரிப்பவர்.

430. ஓம் ப்ரமாணாய நம:—ப்ரமாணம் - தன் பரத்வத்தை வெளியிடும் வேதாதி ப்ரமாண ஸ்வரூபி.

431. ஓம் பீஜாய அவ்யயாய நமஃ—அவ்யயம் - பீஜம்-உலக சிருஷ்டிக்கு பழுதில்லாத் தான்யம் போன்றவர்.

432. ஓம் அர்தாய நமஃ—அர்தஃ - முக்தர்களுக்குத் தாமே முக்கிய பயனாயிருப்பவர்.

433. ஓம் அநர்தாய நமஃ—அநர்தஃ - தனக்கு விரும்பத் தக்கவை ஒன்றுமில்லாதவர்.

434. ஓம் மஹாகோசாய நமஃ—மஹாகோசஃ - பிரமாண்டமாகிற தாமரையின் மொட்டுப் போன்றவர்.

435. ஓம் மஹாபோகாய நமஃ—மஹாபோகஃ - சிறந்த போகத்தை அனுபவிப்பவர்.

436. ஓம் மஹாதநாய நமஃ—மஹாதநஃ - குறைவற்ற செல்வர்.

2 2 4 4 2
அநிர்விண்ணஸ்ஸ்தவிஷ்டோ பூர்தர்மயூபோ மஹாமகஃ ।
நக்ஷத்ரநேமிர்நக்ஷத்ரீ க்ஷமஃ க்ஷாமஸ்ஸமீஹநஃ ॥ (47)

437. ஓம் அநிர்விண்ணாய நமஃ—அநிர்விண்ணஃ - பக்தர்களுக்குப் பலம் கொடுப்பதில் சோர்வடையாதவர்.

438. ஓம் ஸ்தவிஷ்டாய நமஃ—ஸ்தவிஷ்டஃ - விஸ்தாரமான நட்சத்திரமண்டலரூபி.

439. ஓம் புவே நமஃ—பூஃ - சர்வத்திற்கும் ஆதாரமாயிருப்பவர்.

440. ஓம் தர்மயூபாய நமஃ—தர்ம யூபஃ - தர்மமாகிறயாகத்தின் யூபஸ்தம்பம் போன்றவர்.

441. ஓம் மஹாமகாய நமஃ—மஹாமகஃ - அசுவமேதம் முதலிய மஹாயாகரூபி.

442. ஓம் நக்ஷத்ரநேமயே நமః—நக்ஷத்ரநேமிః - ஜோதி சக்கரத்திற்கு வட்டைபோன்றவர்.

443. ஓம் நக்ஷத்ரிணே நமః—நக்ஷத்ரீ - நக்ஷத்திரங்களு க்கு ஆதாரமானவர்.

444. ஓம் க்ஷமாய நமః—க்ஷமః - உலகபாரத்தைச் சுலப மாய்த் தாங்கும் சாமர்த்திய முடையவர்.

445. ஓம் க்ஷாமாய நமః—க்ஷாமః - பிரளயசமயத்தில் எங் கும் பஞ்சத்தை யுண்டுபண்ணுபவர்.

446. ஓம் ஸமீஹநாய நமః—ஸமீஹநః - தம் ஸங்கல்பத்தால் ஸ்ருஷ்டியில் முன்னிருந்ததுபோலதிகாரிகளை நிய மிப்பவர்.

யக்ஞ இஜ்யோ மஹேஜ்யச்ச க்ரதுஸ்ஸத்ரம் ஸதாம் கதிః [3] ।

ஸர்வதர்சீ [3] விமுக்தாத்மா ஸர்வக்ஞோ ஞானமுத்தமம் ॥ (48)

447. ஓம் யக்ஞாய நமః—யக்ஞః - வேதியர் தினந்தோறு மனுஷ்டிக்கும் பஞ்சயக்ஞரூபி.

448. ஓம் இஜ்யாய நமః—இஜ்யః - இவ்வுலகில் செய்யும் பூஜைகளை இந்திராதிதேவர்கள் மூலமாய்ப் பெற் றுக்கொள்பவர்.

449. ஓம் மஹேஜ்யாய நமః—மஹேஜ்யః - உத்ஸவாதி களால் விசேஷமாய் ஆராதிக்கப்படுகிறவர்.

450. ஓம் க்ரதவே நமః—க்ரதுః - ஏழுவித யாகங்களா யிருப்பவர்.

451. ஓம் ஸத்ராய நமః—ஸத்ரம் - வெகுபேர்களால் செய் யக்கூடிய ஸத்ரமென்கிற யாகரூபி.

452. ஓம் ஸதாம்கதயே நமः—ஸதாம்கதிः - யோகிகள் நித்யவாஸஞ் செய்யுமிடமானவர்.

453. ஓம் ஸர்வதர்ஶினே நமः—ஸர்வதர்ஶீ - சேதனர்கள் செய்யும் புண்யபாவங்களை நேரில் கவனிப்பவர்.

454. ஓம் விமுக்தாத்மனே நமः—விமுக்தாத்மா - விஷய சுகங்களை ஒழித்தவர்.

455. ஓம் ஸர்வக்ஞாய நமः—ஸர்வக்ஞः - பிராணிகளின் மனோபாவாதிகளை யறிந்தவர்.

456. ஓம் க்ஞாநாயஉத்தமாய நமः—உத்தமம் ஞானம் - சிறந்த ஞானவடிவாயிருப்பவர்.

ஸுவ்ரதஸ்ஸுமுகஸ்ஸூக்ஷ்மः ஸுகோஷஸ்ஸுகதஸ் ஸுஹ்ருத் ।

மனோஹரோ ஜிதக்ரோதோ வீரபாஹுர்விதாரணः ॥ (49)

457. ஓம் ஸுவ்ரதாய நமः—ஸுவ்ரதः - சரணமடைந்தோர்க்கு அபயமளிக்கும் வ்ரதமுடையவர்.

458. ஓம் ஸுமுகாய நமः—ஸுமுகः - எப்போதும் முக மலர்ச்சியுள்ளவர்.

459. ஓம் ஸூக்ஷ்மாய நமः—ஸூக்ஷ்மः - அணுவிலும் அணுரூபமாயிருப்பவர்.

460. ஓம் ஸுகோஷாய நமः—ஸுகோஷः - வேத கோஷத்துடன் நாற்புறமும் சூழ்ந்திருக்கும் நித்ய ஸூரிகளை உடையவர்.

461. ஓம் ஸுகதாய நமः—ஸுகதः - பரமாநந்த சுகமளிப்பவர்.

462. ஓம் ஸுஹ்ருதே நம:—ஸுஹ்ருத் - எதிர்பாராமல் மித்திரன்போல் உதவி செய்பவர்.

463. ஓம் மநோஹராய நம:—மநோஹர: - பிறர் மனத்தைக் கவரும் சக்தியுடையவர்.

464. ஓம் ஜிதக்ரோதாய நம:—ஜிதக்ரோத: - கோபத்தை அடக்கினவர்.

465. ஓம் வீரபாஹவே நம:—வீரபாஹு: - வலிவுடைய திருக்கைகளை யுடையவர்.

466. ஓம் விதாரணாய நம:—விதாரண: - அமிருதம் கொடுக்கும்போது மாறுவேஷம் பூண்ட ராகுவின் சிரத்தைத் துண்டித்தவர்.

ஸ்வாபநஸ்ஸ்வவஶோ வ்யாபீ நைகாத்மா நைககர்மக்ருத் ।

வத்ஸரோ வத்ஸலோ வத்ஸீ ரத்நகர்போ[3] தநேஶ்வர:[4] ॥ (50)[4]

467. ஓம் ஸ்வாபநாய நம:—ஸ்வாபந: - யோகமகிமையால் உலகத்தைத் தூங்கச்செய்பவர்.

468. ஓம் ஸ்வவஶாய நம:—ஸ்வவஶ: - சுயேச்சையாயிருப்பவர்.

469. ஓம் வ்யாபிநே நம:—வ்யாபீ - எல்லா ஜீவர்களுள்ளும் வியாபித்திருப்பவர்.

470. ஓம் நைகாத்மநே நம:—நைகாத்மா - சமயோசிதமான பலவடிவ மெடுப்பவர்.

471. ஓம் நைககர்மக்ருதே நம:—நைககர்மக்ருத் - அபூர்வமாயும் விசித்திரமுமான பல செயல்களைச் செய்பவர்.

472. ஓம் வத்ஸராய நம:—வத்ஸர: - எல்லாவற்றிற்கும் ஆதாரமானவர்.

473. ஓம் வத்ஸலாய நமः—வத்ஸலः - பக்தர்களிடம் அதிக் வாத்ஸல்யமுள்ளவர்.

474. ஓம் வத்ஸிநே நமः—வத்ஸீ - ஜீவர்களாகிற கன்று களுடையவர்.

475. ஓம் ரத்நகர்பாய நமः—ரத்னகர்பः - பூமி, ரத்தினத்தை வைத்திருப்பதுபோல் பக்தர்களுக்கு வேண்டியவற்றைச் சித்தமாய்ச் சேர்த்து வைத்திருப்பவர்.

476. ஓம் தநேஶ்வராய நமः—தநேஶ்வரः - குபேரசம்பத்திலு மதிகசம்பத்துள்ளவர்.

4 3 4 3 4 3
தர்மகுப்தர்மக்ருத்தர்மீ ஸதஸத்க்ஷரமக்ஷரம் ।
4
அவிக்ஞாதா ஸஹஸ்ராம்ஶுர்விதாதா க்ருதலக்ஷண: ॥ (51)

477. ஓம் தர்மகுபே நமः—தர்மகுப் - தர்மரக்ஷணஞ் செய்பவர்.

478. ஓம் தர்மக்ருதே நமः—தர்மக்ருத் - தானே தர்மத்தை அநுஷ்டித்துக் காண்பிப்பவர்.

479. ஓம் தர்மிணே நமः—தர்மீ - தர்மமூர்த்தி.

480. ஓம் ஸதே அக்ஷராய நமः—அக்ஷரம் ஸத் - சுத்தப் பிரம்மஸ்வரூபி.

481. ஓம் அஸதேக்ஷராய நமः—க்ஷரம் அஸத் - பஞ்ச மஹாபாதகர்களை நரகவாஸிகளாகச் செய்பவர்.

482. ஓம் அவிக்ஞாத்ரே நமः—அவிக்ஞாதா - எல்லாமறிந்து மறியாதவர்போலிருப்பவர்.

483. ஓம் ஸஹஸ்ராம்ஶவே நமः—ஸஹஸ்ராம்ஶுः - அளவற்ற ஞானமுள்ளவர்.

484. ஓம் விதாத்ரே நமஃ—விதாதா - தேவர்களுக்குக் காரியங்களைத் திட்டப்படுத்துகிறவர்.

485. ஓம் க்ருதலக்ஷணாய நமஃ—க்ருதலக்ஷணஃ - முக்திக்கு வருவோரைத் தமக்குச் சமமாய்ச் சங்கு சக்கரதாரிகளாகச் செய்பவர்.

3 4 2 4
கபஸ்திநேமிஃ ஸத்வஸ்தஃ ஸிம்ஹோ பூதமஹேஶ்வரஃ ।

3 3 3 3 3 4 3 3
ஆதிதேவோ மஹாதேவோ தேவேஶோ தேவப்ருத்குருஃ ॥52

486. ஓம் கபஸ்திநேமயே நமஃ—கபஸ்திநேமிஃ - ஆயிரங் கிரணங்களுடைய சூரியநாராயணமூர்த்தி.

487. ஓம் ஸத்வஸ்தாய நமஃ—ஸத்வஸ்தஃ - ஸத்வகுணம் மேலிட்டிருப்பவர்.

488. ஓம் ஸிம்ஹாய நமஃ—ஸிம்ஹஃ - ஸிம்ஹம்போல் கம்பீரமானவர்.

489. ஓம் பூதமஹேஶ்வராய நமஃ—பூதமஹேஶ்வரஃ - பிரம்மாதிரூபியாய் ஜகத்ஸ்ருஷ்டி செய்யும் ஏற்பாடு செய்துவைத்தவர்.

490. ஓம் ஆதிதேவாய நமஃ—ஆதிதேவஃ - சிருஷ்டியின் ஆரம்பத்தில் தாமொருவனாகவே விளங்கிக்கொண்டிருப்பவர்.

491. ஓம் மஹாதேவாய நமஃ—மஹாதேவஃ - தன்மகிமையால் விளங்குபவர்.

492. ஓம் தேவேஶாய நமஃ—தேவேஶஃ - தேவர்களுக்கு நாயகர்.

493. ஓம் தேவப்ருதே நமஃ—தேவப்ருத் - தேவர்களைக் காப்பாற்றுபவர்.

494. ஓம் குரவே நமঃ—குருঃ - மந்திரோபதேசஞ் செய்யும் ஆதிகுரு.

உத்தரோ கோபதிர்கோப்தா ஞாநகம்யঃ புராதநঃ ।

ஶரீரபூதப்ருத்போக்தா கபீந்த்ரோ பூரிதக்ஷிணঃ ॥ (53)

495. ஓம் உத்தராய நமঃ—உத்தரঃ - சம்ஸாரத்திலிருந்து கரையேற்றுகிறவர்.

496. ஓம் கோபதயே நமঃ—கோபதিঃ - பசுக்களுள் சிரேஷ்டமான காமதேனுஸ்வரூபி.

497. ஓம் கோப்த்ரே நமঃ—கோப்தா - ஸர்வ ரக்ஷகர்.

498. ஓம் ஞாநகம்யாய நமঃ—ஞாநகம்யঃ - ஞாநயோகத்தாலடையக்கூடியவர்.

499. ஓம் புராதநாய நமঃ—புராதநঃ - வெகுகாலமாயிருப்பவர்.

500. ஓம் ஶரீரபூதப்ருதே நமঃ—ஶரீரபூதப்ருத் - தம் சரீரமான அறுபத்துநான்கு தத்துவங்களை வகிப்பவர்.

501. ஓம் போக்த்ரே நமঃ—போக்தா - நித்யானந்தத்தை அனுபவிப்பவர்.

502. ஓம் கபீந்த்ராய நமঃ—கபீந்த்ரঃ - மேகங்களுக்கு அதிபர்.

503. ஓம் பூரிதக்ஷிணாய நமঃ—பூரிதக்ஷிணঃ - யாகத்தில் கொடுக்கும் தக்ஷிணாஸ்வரூபி.

ஸோமபோऽம்ருதபஸ்ஸோமঃ புருஜித் புருஸத்தமঃ ।

விநயோ ஜயஸ்ஸத்யஸந்தோ தாஶார்ஹஸ்ஸாத்வதாம்பதিঃ ॥ 54

504. ஓம் ஸோமபாய நமः—ஸோமபः - யாகத்தில் எஜமானுயிருந்து ஸோமபானஞ் செய்பவர்.

505. ஓம் அம்ருதபாய நமः—அம்ருதபः - தேவர்களுக்கு அமிருத மூட்டுவித்தவர்.

506. ஓம் ஸோமாய நமः—ஸோமः - சந்திரனுய், செடிகளை வளர்ப்பவர்.

507. ஓம் புருஜிதே நமः—புருஜித் - காமாதிகளை ஜயித்தவர்.

508. ஓம் புருஸத்தமாய நமः—புருஸத்தமः - எப்போதும் ஸாதுக்களால் சூழப்பட்டிருப்பவர்.

509. ஓம் விநயாய நமः—விநயः - துஷ்டநிக்ரஹஞ் செய்பவர்.

510. ஓம் ஜயாய நமः—ஜயः - மகான்களுக்கு ஏவல் செய்பவர்.

511. ஓம் ஸத்யஸந்தாய நமः—ஸத்யஸந்தः - பிரதிக்ஞை தவருதவர்.

512. ஓம் தாஶார்ஹாய நமः—தாஶார்ஹः - பக்தர்களுக்கு ஸாரூப்ய மளிப்பவர்.

513. ஓம் ஸாத்வதாம்பதயே நமः—ஸாத்வதாம்பதிः - பிரமதேவனுக்கு பாஞ்சராத்ராகமத்தை உபதேசித்து அதன்படி அனுஷ்டிப்போரை ரக்ஷிப்பவர்.

ஜீவோ விநயிதா ஸாக்ஷீ முகுந்தோ²மிதவிக்ரமः[3] ।
அம்போநிதிரநந்தாத்மா மஹோததிஶயோ²ந்தகः[4][4][3][4] ॥ (55)

514. ஓம் ஜீவாய நமः—ஜீவः - ஜீவஸ்வரூபி.

515. ஓம் விநயித்ரே நமः—விநயிதா - பக்தர்களை ஆதரவுடன் வரவேற்பவர்.

516. ஓம் ஸாக்ஷிணே நமঃ—ஸாக்ஷீ - எல்லாவற்றையும் நேரில் பார்ப்பவர்.

517. ஓம் முகுந்தாய நமঃ—முகுந்தঃ - மோக்ஷத்தை அளிப்பவர்.

518. ஓம் அமிதவிக்ரமாய நமঃ—அமிதவிக்ரமঃ - அளவில்லாத பராக்ரம முடையவர்.

519. ஓம் அம்போநிதயே நமঃ—அம்போநிதிঃ - சமுத்ர ஸ்வரூபி.

520. ஓம் அநந்தாத்மனே நமঃ—அநந்தாத்மா - அனந்த பிராணிகளுள் ஆத்மாவாய் வசிப்பவர்.

521. ஓம் மஹோததிஶயாய நமঃ—மஹோததிஶயঃ - பிரளயத்தில் தானொருவனாய் சமுத்திரத்தில் வடபத்ர சாயியாயிருப்பவர்.

522. ஓம் அந்தகாய நமঃ—அந்தகঃ - ஸம்ஹாரரூபி.

அஜோமஹார்ஹஸ்ஸ்வாபாவ்யோ[4] ஜிதாமித்ரঃ ப்ரமோதநঃ[3] ।
ஆநந்தோ[3] நந்தநோ[3] நந்தஸ்[3]ஸத்யதர்மா[4] த்ரிவிக்ரமঃ ॥ (56)

523. ஓம் அஜாய நமঃ—அஜঃ - அகாரத்தின் பொருளாயுண்டான விஷ்ணு.

524. ஓம் மஹார்ஹாய நமঃ—மஹார்ஹঃ - குருமுகமாய் ப்ரபத்தி செய்பவர்களைத் தம்மிடம் சேர்த்துக் கொள்பவர்.

525. ஓம் ஸ்வாபாவ்யாய நமঃ—ஸ்வாபாவ்யঃ - யோகிகளால் இருதயத்தில் நிறுத்தி தியானம் செய்யப்படுகிறவர்.

526. ஓம் ஜிதாமித்ராய நமஃ—ஜிதாமித்ரஃ - தமக்கு சத்ருவென்கிற பெயரேயில்லாத ஜயசீலர்.

527. ஓம் ப்ரமோதநாய நமஃ—ப்ரமோதநஃ - பக்தி பரவசமாய் மனமகிழச் செய்பவர்.

528. ஓம் ஆநந்தாய நமஃ—ஆநந்தஃ - பேரானந்த பிரம்ம ஸ்வரூபி.

529. ஓம் நந்தநாய நமஃ—நந்தநஃ - இவ்வுலகில் பக்தர்களை சந்தோஷப்படுத்தி வைப்பவர்.

530. ஓம் நந்தாய நமஃ—நந்தஃ - முக்திக்கு வருவோரை ஆநந்தப்படுத்துகிறவர்.

531. ஓம் ஸத்யதர்மணே நமஃ—ஸத்யதர்மா - ஸத்யம்தர்மமிவைகளைப் பரிபாலிப்பவர்.

532. ஓம் த்ரிவிக்ரமாய நமஃ—த்ரிவிக்ரமஃ - த்ரிவிக்ரமனுய் மூன்றடி அளந்தவர்.

மஹர்ஷிஃ கபிலாசார்யஃ க்ருதக்ஞோ மேதிநீபதிஃ[3] ।

த்ரிபதஸ்த்ரிதஶாத்யக்ஷஃ[3] [3] [4] மஹாஶ்ருங்கஃ க்ருதாந்தக்ருத்[3] ॥ (57)

533. ஓம் மஹர்ஷயே நமஃ—மஹர்ஷிஃ - மகாமுனிவர்.

534. ஓம் கபிலாசார்யாய நமஃ—கபிலாசார்யஃ - கபிலருக்கு ஸாங்கிய சாஸ்திரத்தை உபதேசித்தவர்.

535. ஓம் க்ருதக்ஞாய நமஃ—க்ருதக்ஞஃ - பிறர் செய்த உபகாரத்தை எப்போதும் மறக்காதவர்.

536. ஓம் மேதிநீபதயே நமஃ—மேதிநீபதிஃ - கபிலவாசுதேவனுய் பூமியைச் சுமப்பவர்.

537. ஓம் த்ரிபதாய நமஃ—த்ரிபதஃ - ப்ரகிருதி புருஷன் ஈசுவரனென்கிற மூன்று தத்துவங்களாலறியத்தக்கவர்.

538. ஓம் த்ரிதஸாத்யக்ஷாய நமஃ—த்ரிதஸாத்யக்ஷஃ - தேவர்களை ஆபத்தினின்றும் ரக்ஷிப்பவர்.

539. ஓம் மஹாஸ்ருங்காய நமஃ—மஹாஸ்ருங்கஃ - வராக மூர்த்தியாய்ப் பற்களால் பூமியைத் தூக்கிக் கொண்டு வந்தவர்.

540. ஓம் க்ருதாந்தக்ருதே நமஃ—க்ருதாந்தக்ருத் - கல்ப முடிவில் ஜீவர்களை நாசஞ் செய்பவர்.

3 3 3 3
மஹாவராஹோ கோவிந்தஃ ஸுஷேணஃ கநகாங்கதீ ।

3 3 4 3 3 3 3 4
குஹ்யோ கபீரோ கஹநோ குப்தஸ்சக்ரகதாதரஃ ॥ (58)

541. ஓம் மஹாவராஹாய நமஃ—மஹாவராஹஃ - யக்ஞ வராஹமூர்த்தி.

542. ஓம் கோவிந்தாய நமஃ—கோவிந்தஃ - கோலோகத்தில் பசுக்களால் பட்டாபிஷேகம் செய்து கொடுக்கப் பட்ட கோவிந்தனென்னும் பெயருடையவர்.

543. ஓம் ஸுஷேணாய நமஃ—ஸுஷேணஃ - முக்தர்கள் நாற்புறமும் சேனைபோல் சூழ்ந்து உபநிஷத் முதலிய பாராயணங்கள் செய்ய அதைக் கேட்டுத் தாம் நடுவில் நாயகனாய்வீற்றிருந்து ஆநந்திப்பவர்.

544. ஓம் கநகாங்கதிநே நமஃ—கநகாங்கதீ - தன்னோடு எப்போதும் உள்ள தோள்வளை முதலிய ஆபரணாலங்கிருதர்.

545. ஓம் குஹ்யாய நமஃ—குஹ்யஃ - சுவர்க்கத்தின் மேலுள்ள குகையில் மறைந்திருப்பவர்.

546. ஓம் கபீராய நமஃ—கபீரஃ - ஞானம் முதலியவைகளால் அளவிடக்கூடாதவர்.

547. ஓம் கஹநாய நமஃ—கஹநஃ - முள் முதலியவைகளால் பிரவேசிக்கமுடியாத காடுபோல் கஷ்டப்பட்டும் அறிய முடியாதவர்.

548. ஓம் குப்தாய நமஃ—குப்தஃ - ரக்ஷணகர்த்தா.

549. ஓம் சக்ரகதாதராய நமஃ—சக்ரகதாதரஃ - சக்கரம் கதை முதலிய ஆயுதம் பூண்டவர்.

வேதாஃ ஸ்வாங்கோ[4]ஜிதஃ[3] க்ருஷ்ணோ த்ருடஸ்ஸங்கர்ஷணோ[3]ச்யுதஃ[4] ।
வருணோ வாருணோ வ்ருக்ஷஃ புஷ்கராக்ஷோ மஹாமநாஃ ॥ (59)

550. ஓம் வேதஸே நமஃ—வேதாஃ - பிரமனைச் சிருஷ்டிப்பவர்.

551. ஓம் ஸ்வாங்காய நமஃ—ஸ்வாங்கஃ - காரியகாரணங்களைத் தந்தம் தன்மைகளுடன் சிருஷ்டிப்பவர்.

552. ஓம் அஜிதாய நமஃ—அஜிதஃ - ஒருகாலும் சத்துருக்களால் ஜயிக்கமுடியாதவர்.

553. ஓம் க்ருஷ்ணாய நமஃ—க்ருஷ்ணஃ - நீலமேகசியாமளர்.

554. ஓம் த்ருடாய நமஃ—த்ருடஃ - உறுதியானவர்.

555. ஓம் ஸங்கர்ஷணாய நமஃ—ஸங்கர்ஷணஃ - சேதனாசேதனர்களை ஆகர்ஷித்துத் தம்மிடம் ஒன்று சேரும்படி செய்கிறவர்.

556. ஓம் அச்யுதாய நமஃ—அச்யுதஃ - தன்னிடத்திலேயே நிலையாயிருப்பவர்.

557. ஓம் வருணாய நமஃ—வருணஃ - பூமி முதலியவற்றைக் கவர்ந்திருப்பவர்.

558. ஓம் வாருணாய நமஃ—வாருணஃ - தன்னையே உபாஸிக்கும் பக்தர்களிடம் நித்யவாஸம் செய்பவர்.

559. ஓம் வ்ருக்ஷாய நமஃ—வ்ருக்ஷஃ - ஸாதுக்கள் வசிக்கும் நிழலுள்ள வ்ருக்ஷம் போன்றவர்.

560. ஓம் புஷ்கராக்ஷாய நமஃ—புஷ்கராக்ஷஃ - பக்தர்கள் தாபத்தைப் போக்கும் குளிர்ந்த கடாக்ஷமுள்ள திருக்கண்களுள்ளவர்.

561. ஓம் மஹாமநஸே நமஃ—மஹாமநாஃ - பெருந்தன்மையுள்ள மனமுடையவர்.

43 43 3 4
பகவாந் பகஹாநந்தீ வநமாலீ ஹலாயுதஃ ।

3 3 3
ஆதித்யோ ஜ்யோதிராதித்யஸ்ஸஹிஷ்ணுர்கதிஸத்தமஃ ॥ (60)

562. ஓம் பகவதே நமஃ—பகவாந் - ஷாட்குண்ய பரிபூர்ணர்.

563. ஓம் பகக்நே நமஃ—பகஹா - ஐசுவரிய மதம் பிடித்தவர்களை நாசஞ் செய்பவர்.

564. ஓம் நந்திநே நமஃ—நந்தீ - எல்லோரையும் சகலாபீஷ்ட பூரிதர்களாய்ச் செய்பவர்.

565. ஓம் வநமாலிநே நமஃ—வநமாலீ - வைஜயந்தி மாலையை யணிந்தவர்.

566. ஓம் ஹலாயுதாய நமஃ—ஹலாயுதஃ - கலப்பையை ஆயுதமாயுடைய பலராமாவதாரி.

567. ஓம் ஆதித்யாய நமஃ—ஆதித்யஃ - தன் நாமோச்சாரணத்தால் அடையத்தக்கவர்.

568. ஓம் ஜ்யோதிராதித்யாய நமஃ—ஜ்யோதிராதித்யஃ - ஜ்யோதிரூபியாய் புது சூரியன் போன்றவர்.

569. ஓம் ஸஹிஷ்ணவே நமஃ—ஸஹிஷ்ணுஃ - பக்தாபராதத்தை சகிப்பவர்.

570. ஓம் கதிஸத்தமாய நமஃ—கதிஸத்தமஃ - நற்கதிக்குரிய தர்மோபதேசம் செய்பவர்.

4 2 3 3 3 3
ஸுதந்வா கண்டபரஶுர்தாருணோ த்ரவிணப்ரதஃ ।
3 3 3
திவிஸ்ப்ருக்ஸர்வத்ருக் வ்யாஸோ வாசஸ்பதிரயோநிஜஃ ॥ (61

571. ஓம் ஸுதந்வனே நமஃ—ஸுதந்வா - தேவாசுர யுத்தத்தில் சம்ஹார தனுஸை எடுத்தவர்.

572. ஓம் கண்டபரஶவே நமஃ—கண்டபரஶுஃ - க்ஷத்திரியர்களைக் கண்டித்த கோடாலியை யுடைய பரசுராமர்.

573. ஓம் தாருணாய நமஃ—தாருணஃ - சத்துருக்களுக்குப் பயங்கரரூபி.

574. ஓம் த்ரவிணப்ரதாய நமஃ—த்ரவிணப்ரதஃ - சமஸ்த திரவியங்களுமளிப்பவர்.

575. ஓம் திவிஸ்ப்ருஶே நமஃ—திவிஸ்ப்ருக் - ஆகாயத்தை அளாவும் சரீரமெடுத்தவர்.

576. ஸர்வத்ருஶே நமஃ—ஸர்வத்ருக் - எங்கும் கடாக்ஷிப்பவர்.

577. ஓம் வ்யாஸாய நமஃ—வ்யாஸஃ - வேதங்களைப் பிரித்த வியாஸ பகவான்.

578. ஓம் வாசஸ்பதயே நமஃ—வாசஸ்பதிஃ - ஸகல வித்தைக்கும் அதிபன்.

579. ஓம் அயோநிஜாய நமஃ—அயோநிஜஃ - கர்ப்பவாசமில்லாமல் ஜநிப்பவர்.

3 4 4
த்ரிஸாமா ஸாமகஸ்ஸாம நிர்வாணம் பேஷஜம் பிஷக் ।
2 2
ஸந்யாஸக்ருச் சமஶ்ஶாந்தோ நிஷ்டா ஶாந்திஃ பராயணம் ॥62

580. ஓம் த்ரிஸாம்நே நமஃ—த்ரிஸாமா - ஸாமவேதத்தின் மூன்று பிரிவுகளால் துதிக்கப்படுகிறவர்.

581. ஓம் ஸாமகாய நமஃ—ஸாமகஃ - ஸாமகானப்ரியர்.

582. ஓம் ஸாம்நே நமஃ—ஸாம - ஸாமவேதரூபி.

583. ஓம் நிர்வாணாய நமஃ—நிர்வாணம் - முக்தியில் சார்ந்தர்களாய்ச் செய்பவர்.

584. ஓம் பேஷஜாய நமஃ—பேஷஜம் - ஸம்ஸாரமாகிற வியாதிக்கு மருந்து போன்றவர்.

585. ஓம் பிஷஜே நமஃ—பிஷக் - வைத்ய சிரேஷ்டரான தன்வந்திரியாய் அவதரித்தவர்.

586. ஓம் ஸந்யாஸக்ருதே நமஃ—ஸந்யாஸக்ருத் - வேதாந்த ஞானத்தால் நிச்சயிக்கப்பட்ட ஸந்யாஸ யோகத்தை முக்திக்குக் காரணமாகச் செய்தவர்.

587. ஓம் ஶமாய நமஃ—ஶமஃ - சாந்தசீலர்.

588. ஓம் ஶாந்தாய நமஃ—ஶாந்தஃ - தம் மகிமைகளை வெளிக்காட்டாமல் உள்ளடக்கி வைத்திருப்பவர்.

589. ஓம் நிஷ்டாயை நமஃ—நிஷ்டா - யோகிகளைத் தம்மிடம் நிலை நிறுத்திய மனதை யுடையவர்களாய்ச் செய்பவர்.

590. ஓம் ஶாந்தயே நமஃ—ஶாந்திஃ - இந்திரியங்களை அடக்கி ஏகாந்தமாயிருக்கச் செய்பவர்.

591. ஓம் பராயணாய நமஃ—பராயணம் - மோக்ஷசாதனமான பரமபக்தியைக் கொடுப்பவர்.

ஶுபாங்கஶ்ஶாந்திதஸ்ஸ்ரஷ்டா குமுதஃ குவலேஶயஃ ।

கோஹிதோ கோபதிர்கோப்தா வ்ருஷபாக்ஷோ வ்ருஷப்ரியஃ ॥

592. ஓம் ஶுபாங்காய நம:—ஶுபாங்க: - அழகிய சரீராவயவ முடையவர்.

593. ஓம் ஶாந்திதாய நம:—ஶாந்தித: - சகல கர்மங்களுக்கும் சாந்தியை அளிப்பவர்.

594. ஓம் ஸ்ரஷ்ட்ரே நம:—ஸ்ரஷ்டா - கீழுலக வாழ்க்கை விரும்பும் சேதனர்களைக் கர்மத்திற்கேற்பப் புனர் ஜன்மத்தை யளிப்பவர்.

595. ஓம் குமுதாய நம:—குமுத: - பூபாரத்தை நீக்கி பூமியை சந்தோஷப்படுத்துகிறவர்.

596. ஓம் குவலேசயாய நம:—குவலேசய: - சமுத்திரத்தில் சயனித்திருப்பவர்.

597. ஓம் கோஹிதாய நம:—கோஹித: - பசுக்களான ஜீவர்களுக்கு ஹிதமானவர்.

598. ஓம் கோபதயே நம:—கோபதி: - மோக்ஷபூமிக்கு பர்த்தா.

599. ஓம் கோப்த்ரே நம:—கோப்தா - கர்மபலன்களை ரக்ஷிப்பவர்.

600. ஓம் வ்ருஷபாக்ஷாய நம:—வ்ருஷபாக்ஷ: - தர்மகாரிய பலனளிப்பவர்.

601. ஓம் வ்ருஷப்ரியாய நம:—வ்ருஷப்ரிய: - புண்யசாலிகளிடம் பிரியமுள்ளவர்.

அநிவர்தீ நிவ்ருத்தாத்மா ஸம்க்ஷேப்தா க்ஷேமக்ருச்சிவ: [2] ।
ஸ்ரீவத்ஸவக்ஷாஃஸ்ரீவாஸ: ஸ்ரீபதி: ஸ்ரீமதாம் வர: ॥ (64)

602. ஓம் அநிவர்திநே நம:—அநிவர்தீ - தர்மமார்க்கத்திலிருந்து விலகாதவர்.

603. ஓம் நிவ்ருத்தாத்மநே நமஃ—நிவ்ருத்தாத்மா - ஞானி களைத் தாம் வஹித்திருப்பவர்.

604. ஓம் ஸம்க்ஷேப்த்ரே நமஃ—ஸம்க்ஷேப்தா - காம்ய கர்மங்களில் நிஷ்ப்ரயோஜன ஞானத்தை உண்டு பண்ணுபவர்.

605. ஓம் க்ஷேமக்ருதே நமஃ—க்ஷேமக்ருத் - பத்த முக்தர் களுக்கு க்ஷேமத்தை அளிப்பவர்.

606. ஓம் ஶிவாய நமஃ—ஶிவஃ - மங்களமூர்த்தி.

607. ஓம் ஸ்ரீவத்ஸவக்ஷஸே நமஃ—ஸ்ரீவத்ஸவக்ஷாஃ - ஸ்ரீவத்ஸ மென்னும் மறுவை மார்பில் தரித்தவர்.

608. ஓம் ஸ்ரீவாஸாய நமஃ—ஸ்ரீவாஸஃ - லக்ஷ்மி விலாஸத் திற்கு சிங்காரத்தோட்டமானவர்.

609. ஓம் ஸ்ரீபதயே நமஃ—ஸ்ரீபதிஃ - லக்ஷ்மீபதி.

610. ஓம் ஸ்ரீமதாம்வராய நமஃ—ஸ்ரீமதாம்வரஃ - தேவர்க ளெல்லாம் பார்த்திருக்கையில் லக்ஷ்மீதேவியால் ஸ்வயம்வரிக்கப்பட்டவர்.

ஸ்ரீதஃ[3] ஸ்ரீஶஃ ஸ்ரீநிவாஸஃ[4] ஸ்ரீநிதிஃ[4] ஸ்ரீவிபாவநஃ ।

ஸ்ரீதரஃ[4] ஸ்ரீகரஃ ஶ்ரேயஃ ஸ்ரீமாந் லோகத்ரயாஶ்ரயஃ । (65)

611. ஓம் ஸ்ரீதாய நமஃ—ஸ்ரீதஃ - லக்ஷ்மிக்கு அழிவற்ற தமதனுபவத்தைத் தருகிறவர்.

612. ஓம் ஸ்ரீஶாய நமஃ—ஸ்ரீஶஃ - எப்போதும் தம்மைவிட் டுப் பிரியாத லக்ஷ்மியோடு கூடினவர்.

613. ஓம் ஸ்ரீநிவாஸாய நமஃ—ஸ்ரீநிவாஸஃ - லக்ஷ்மீதேவி யின் நித்யவாசஸ்தலமானவர்.

614. ஓம் ஸ்ரீநிதயே நம:—ஸ்ரீநிதி: - அஷ்டை சுவரியங்கள் நிறைந்த பெட்டிபோன்றவர்.

615. ஓம் ஸ்ரீவிபாவநாய நம:—ஸ்ரீவிபாவந: - லக்ஷ்மீ தேவியால் விசேஷ மகிமையுள்ளவர்.

616. ஓம் ஸ்ரீதராய நம:—ஸ்ரீதர: - இயற்கைசம்பந்தமுள்ள லக்ஷ்மியைத் தரிப்பவர்.

617. ஓம் ஸ்ரீகராய நம:—ஸ்ரீகர: - ஒவ்வொரு அவதாரத்திலும் லக்ஷ்மியைப் பத்னியாய் அவதரிக்கச் செய்பவர்.

618. ஓம் ஸ்ரேயஸே ஸ்ரீமதே நம:—ஸ்ரீமான் ஸ்ரேய: - நான்குவித புருஷார்த்தத்திற்கும் உபாய்பூதையான லக்ஷ்மியின் நித்யஸம்பந்தமுள்ளவர்.

619. ஓம் லோகத்ரயாஸ்ரயாய நம:—லோகத்ரயாஸ்ரய: - மூவுலகத்தையும் தந்தை தாய்போல் ரக்ஷிப்பவர்.

ஸ்வக்ஷஸ்ஸ்வங்க[3]ஸ்[3]தாநந்தோ நந்தீ[3] ஜ்யோதிர்கணேஸ்[3]வர: ।
விஜிதாத்மா[4] விதேயாத்மா ஸத்கீர்த்திச்சி[2]ந்நஸம்ஸய: ॥ (66)

620. ஓம் ஸ்வக்ஷாய நம:—ஸ்வக்ஷ: - குளிர்ந்த கடாக்ஷமுள்ள திருக்கண்களுள்ளவர்.

621. ஓம் ஸ்வங்காய நம:—ஸ்வங்க: - சாமுத்ரிக சாஸ்திரப்படி திவ்யாவயவமுடையவர்.

622. ஓம் ஸதாநந்தாய நம:—ஸதாநந்த: - எப்போதும் ஸாதுக்களுக்கு அளவற்ற பரமானந்த மளிப்பவர்.

623. ஓம் நந்திநே நம:—நந்தீ - சகலமும் பூர்ணமாயுடையவர்.

624. ஓம் ஜ்யோதிர்கணேஶ்வராய நமஃ—ஜ்யோதிர்கணேஶ்வரஃ - முக்தர்களுக்கு வாஸஸ்தானம் போன்றவர்.

625. ஓம் விஜிதாத்மநே நமஃ—விஜிதாத்மா - தம்மை வணங்கும் பக்தர்களிடம் தயாளுவாயிருப்பவர்.

626. ஓம் விதேயாத்மநே நமஃ—விதேயாத்மா - பக்தர்களின் சகல கைங்கர்யத்தையும் பெற்றுக்கொள்பவர்.

627. ஓம் ஸத்கீர்தயே நமஃ—ஸத்கீர்திஃ - வாஸ்தவமான புகழ் பெற்றவர்.

628. ஓம் சிந்நஸம்ஶயாய நமஃ—சிந்நஸம்ஶயஃ - சகல சந்தேகங்களையும் போக்கடிப்பவர்.

3 2
உதீர்ணஸ்ஸர்வதஶ்சக்ஷுரநீஶஶ்ஶாஶ்வதஃ ஸ்திரஃ ।
4 4 4
பூஶயோ பூஷணோ பூதிர் விஶோகஶ்ஶோகநாஶநஃ ॥ (67)

629. ஓம் உதீர்ணாய நமஃ—உதீர்ணஃ - அவதாரங்கள் தோறும் மானிடர் கண்களுக்குக்கூட தம் ஸ்வரூபத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறவர்.

630. ஓம் ஸர்வதஶ்சக்ஷுஷே நமஃ—ஸர்வதஶ்சக்ஷுஃ - அநந்தமான கண்களுள்ளவராகையால் எங்கும் கடாக்ஷிப்பவர்.

631. ஓம் அநீஶாய நமஃ—அநீஶஃ - தனக்கு மேலதிகாரியில்லாதிருப்பவர்.

632. ஓம் ஶாஶ்வதஸ்திராய நமஃ—ஶாஶ்வதஃ ஸ்திரஃ - என்றும் அழிவில்லாமல் ஸ்திரமாயிருப்பவர்.

633. ஓம் பூஶயாய நமஃ—பூஶயஃ - ஸ்ரீராமராய் சமுத்திரக் கரையில் தர்ப்பங்களின்மேல் பூமியில் சயனித்தவர்.

634. ஓம் பூஷணாய நமஃ—பூஷணஃ - அலங்கார ப்ரியர்.

635. ஓம் பூதயே நமஃ—பூதிஃ - பக்தர்களுக்கு அஷ்டை சுவரியமளிப்பவர்.

636. ஓம் விஶோகாய நமஃ—விஶோகஃ - துக்கமில்லாதவர்.

637. ஓம் ஶோகநாஶநாய நமஃ—ஶோகநாஶநஃ - சகல துக்கத்தையும் நாசஞ் செய்பவர்.

அர்சிஷ்மாநர்சிதஃ கும்பஃ விஶுத்தாத்மா விஶோதநஃ ।
அநிருத்தோ(அ)ப்ரதிரதஃ ப்ரத்யும்நோ(அ)மிதவிக்ரமஃ ॥ (68)

638. ஓம் அர்சிஷ்மதே நமஃ—அர்சிஷ்மாந் - திவ்ய தேஜஸுடையவர்.

639. ஓம் அர்சிதாய நமஃ—அர்சிதஃ - எல்லோராலும் அர்ச்சிக்கப்படுகிறவர்.

640. ஓம் கும்பாய நமஃ—கும்பஃ - பக்தர்கள் எவ்வித ரூபமாய் த்யானிக்கிறார்களோ அவ்விதம் ஸேவை ஸாதிப்பவர்.

641. ஓம் விஶுத்தாத்மநே நமஃ—விஶுத்தாத்மா - சுத்த ஸ்வரூபி.

642. ஓம் விஶோதநாய நமஃ—விஶோதநஃ - பாபிகளை ப்ராயச்சித்தாதிகள்போல் சுத்தப்படுத்துகிறவர்.

643. ஓம் அநிருத்தாய நமஃ—அநிருத்தஃ - அநிருத்த னென்கிற வியூஹாவதாரத்திலொன்றானவர்.

644. ஓம் அப்ரதிரதாய நமஃ—அப்ரதிரதஃ - தனக்கு எதிரிகளில்லாதவர்.

645. ஓம் ப்ரத்யும்நாய நமஃ—ப்ரத்யும்நஃ - ப்ரத்யும்னவதாரி.

646. ஓம் அமிதவிக்ரமாய நம:—அமிதவிக்ரம: - அளவிடக் கூடாத பராக்கிரமமுடையவர்.

காலநேமிநிஹா ஶௌரிஶ்ஶூர: ஶூரஜநேஶ்வர: ।
த்ரிலோகாத்மா த்ரிலோகேஶ: கேஶவ: கேஶிஹா ஹரி:॥ (69)

647. ஓம் காலநேமிநிக்நே நம:—காலநேமிநிஹா - காலநேமி என்னும் அசுரனைக்கொன்றவர்.

648. ஓம் ஶௌரயே நம:—ஶௌரி: - வசுதேவபுத்ரன்.

649. ஓம் ஶூராய நம:—ஶூர: - சௌர்யவான்.

650. ஓம் ஶூரஜநேஶ்வராய நம:—ஶூரஜநேஶ்வர: - சூரர்களை அடக்கி ஆள்பவர்.

651. ஓம் த்ரிலோகாத்மநே நம:—த்ரிலோகாத்மா - பக்தர்களைக்காக்க மூவுலகு சஞ்சாரஞ்செய்பவர்.

652. ஓம் த்ரிலோகேஶாய நம:—த்ரிலோகேஶ: - திரிலோகநாதர்.

653. ஓம் கேஶவாய நம:—கேஶவ: - பிர்ம்மருத்திரர்களுக்கு உத்பத்திஸ்தானர்.

654. ஓம் கேஶிக்நே நம:—கேஶிஹா - கேசி என்னும் அசுரனை வதைத்தவர்.

655. ஓம் ஹரயே நம:—ஹரி: - மோகினிவடிவாய் அமிருதத்தை அபகரித்தளித்தவர்.

காமதே[3]வ: காமபால: காமீ கா[3]ந்த: க்ருதாகம: ।
அநிர்தே[3]ஶ்யவபுர்விஷ்ணுர்வீரோऽநந்தோ த[4]நஞ்ஜய: ॥ (70)

656. ஓம் காமதேவாய நம:—காமதேவ: - மன்மதனைவிட அதிக அழகுபொருந்தினவர்.

657. ஓம் காமபாலாய நமஃ—காமபாலஃ - பக்தாபீஷ்டங்களைக் காத்துக்கொடுப்பவர்.

658. ஓம் காமிநே நமஃ—காமீ- இஷ்டத்தை அளிப்பவர்.

659. ஓம் காந்தாய நமஃ—காந்தஃ - வடிவழகு பொருந்திய திவ்யசரீரமுள்ளவர்.

660. ஓம் க்ருதாகமாய நமஃ—க்ருதாகமஃ - ஆகமசாஸ்திரங்களை உண்டுபண்ணினவர்.

661. ஓம் அநிர்தேஶ்யவபுஷே நமஃ—அநிர்தேஶ்யவபுஃ - குறிப்பிட்ட உருவமெடுப்பவரென்று சொல்லமுடியாதவர்.

662. ஓம் விஷ்ணவே நமஃ—விஷ்ணுஃ - உள்ளிலும் வெளியிலும் எங்கும் வியாபித்திருப்பவர்.

663. ஓம் வீராய நமஃ—வீரஃ - வீர்யவான்.

664. ஓம் அநந்தாய நமஃ—அநந்தஃ - தேசகாலாதி நியமமில்லாதவர்.

665. ஓம் தநஞ்ஜயாய நமஃ—தநஞ்ஜயஃ - சத்துருக்களை ஜயித்து அவர்கள் திரவியங்களைக் கொண்டுவந்தவர்.

ப்ரஹ்மண்யோ ப்ரஹ்மக்ருத் ப்ரஹ்மா ப்ரஹ்ம ப்ரஹ்ம
விவர்த்தநঃ ।
(3 3 3 3 3 / 3 4)

ப்ரஹ்மவித் ப்ராஹ்மணோ ப்ரஹ்மீ ப்ரஹ்மஜ்ஞோ ப்ராஹ்
மணப்ரியঃ ॥ (71)
(3 3 3 3 3)

666. ஓம் ப்ரஹ்மண்யாயநமঃ—ப்ரஹ்மண்யঃ - எப்போதும் சேதனசேதனர்களினிருப்புக்குக் காரணபூதர்.

667. ஓம் ப்ரஹ்மக்ருத்ப்ரஹ்மணே நம:—ப்ரஹ்மக்ருத் ப்ரம்மா - உலகசிருஷ்டிகர்த்தாவாய் பிரமனை யுண்டாக்கி அவன் மூலமாய் ஸ்ருஷ்டிப்பவர்.

668. ஓம் ப்ரஹ்மணே நம:—ப்ரஹ்ம - சுத்தபரப்பிரம்மம்.

669. ஓம் ப்ரஹ்மவிவர்த்தநாய நம:—ப்ரஹ்மவிவர்த்தந: - தவம், தர்மமிவைகளை விருத்திசெய்பவர்.

670. ஓம் ப்ரஹ்மவிதே நம:—ப்ரஹ்மவித் - வேதாங்கத்தை ஸாங்கமாயறிந்தவர்.

671. ஓம் ப்ராஹ்மணாய நம:—ப்ராஹ்மண: - தத்தாத்ரேயாவதாரம் செய்தவர்.

672. ஓம் ப்ரஹ்மிணே நம:—ப்ரஹ்மீ - ப்ரமாண ப்ரமேய ஸ்வரூபி.

673. ஓம் ப்ரஹ்மஜ்ஞாய நம:—ப்ரமஜ்ஞ: - வேதத்தை அங்கங்களோடு முழுதுமுணர்ந்தவர்.

674. ஓம் ப்ராஹ்மணப்ரியாய நம:—ப்ராஹ்மணப்ரிய: - வேதம் ஓதும் வேதியரிடம் அதிகப் பிரீதியுள்ளவர்.

3

மஹாக்ரமோ மஹாகர்மா மஹாதேஜா மஹோரக: ।
மஹாக்ரதுர் மஹாயஜ்வா மஹாயக்ஞோ மஹாஹவி: ॥ (72)

675. ஓம் மஹாக்ரமாய நம:—மஹாக்ரம: - உபாஸனை செய்து படிப்படியாய்த் தன்னிடம் வரும்படி செய்பவர்.

676. ஓம் மஹாகர்மணே நம:—மஹாகர்மா - மானிட ஜன்மத்தில் செய்யக்கூடிய ஸத்கர்ம ஸ்வரூபி.

677. ஓம் மஹாதேஜஸே நம:—மஹாதேஜா: - சுடரொளியானவர்.

678. ஓம் மஹோரகாய நமஃ—மஹோரகஃ - ஹ்ருதயத்துள் உபாஸிக்கத்தக்கவர்.

679. ஓம் மஹாக்ரதவே நமஃ—மஹாக்ரதுஃ - அச்வமேத யாகஸ்வரூபி.

680. ஓம் மஹாயஜ்வநே நமஃ—மஹாயஜ்வா - யக்ஞத்தைச் செய்துவைக்கும் புரோகிதர்.

681. ஓம் மஹாயக்ஞாய நமஃ—மஹாயக்ஞஃ - யக்ஞங்களுள் சிரேஷ்டமான ஜபயக்ஞஸ்வரூபி.

682. ஓம் மஹாஹவிஷே நமஃ—மஹாஹவிஃ - சாஸ்திரோக்தமாய் ஓமஞ்செய்யும் ஹவிஸ் ரூபமாகயிருப்பவர்

ஸ்தவ்யஃ ஸ்தவப்ரியஸ்ஸ்தோத்ரம் ஸ்துதஃ ஸ்தோதா ரண ப்ரியஃ ·

பூர்ணஃ பூரயிதா புண்யஃ புண்யகீர்த்திரநாமயஃ ॥ (73)

683. ஓம் ஸ்தவ்யாய நமஃ—ஸ்தவ்யஃ - எல்லோராலும் ஸ்தோத்ரம் பண்ணத்தக்கவர்.

684. ஓம் ஸ்தவப்ரியாய நமஃ—ஸ்தவப்ரியஃ - ஸ்தோத்ரப்ரியர்.

685. ஓம் ஸ்தோத்ராய நமஃ—ஸ்தோத்ரம் - ஸ்தோத்ரரூபி.

686. ஓம் ஸ்துதாய நமஃ—ஸ்துதஃ - தியானரூபமாய் துதிக்கப்படுகிறவர்.

687. ஓம் ஸ்தோத்ரே நமஃ—ஸ்தோதா - ஸ்தோத்திரம் செய்பவர்.

688. ஓம் ரணப்ரியாய நமஃ—ரணப்ரியஃ - யுத்தப்ரியர்.

689. ஓம் பூர்ணாய நமஃ—பூர்ணஃ - குறைவில்லாதவர்.

690. ஓம் பூரயித்ரே நமஃ—பூரயிதா - பக்தாபீஷ்டத்தைப் பூரணஞ்செய்பவர்.

691. ஓம் புண்யாய நமஃ—புண்யஃ - பாபிகளை புண்யராக்கும் மகாபுருஷர்.

692. ஓம் புண்யகீர்தயே நமஃ—புண்யகீர்திஃ - பரிசுத்தமான கீர்த்தியுள்ளவர்.

693. ஓம் அநாமயாய நமஃ—அநாமயஃ - பிணியில்லாதவர்.

மநோஜவஸ்தீர்தகரோ வஸுரேதா வஸுப்ரியஃ।

வஸுப்ரதோ வாஸுதேவோ வஸுர்வஸுமநா ஹவிஃ ॥ (74)

694. ஓம் மநோஜவாய நமஃ—மநோஜவஃ - மனதைவிட அதிவேகமுடன் வந்து ரக்ஷித்தவர்.

695. ஓம் தீர்த்தகராய நமஃ—தீர்தகரஃ - புண்ய தீர்த்தங்களை உண்டுபண்ணினவர்.

696. ஓம் வஸுரேதஸே நமஃ—வஸுரேதாஃ - முதல் ஸ்ருஷ்டியான ஜலத்தில் தன் வீரியத்தால் ஜகத் சிருஷ்டி செய்ய ஆரம்பித்தவர்.

697. ஓம் வஸுப்ரியாய நமஃ—வஸுப்ரியஃ - சங்கநிதி முதலிய ஐசுவரிய பூர்ணர்.

698. ஓம் வஸுப்ரதாய நமஃ—வஸுப்ரதஃ - பக்தர்களுக்கு ஐசுவரியமான முக்தியை யளிப்பவர்.

699. ஓம் வாஸுதேவாய நமஃ—வாஸுதேவஃ - ஜீவராசிகளாகிற குழந்தைகளோடு விளையாடுகிறவர்.

700. ஓம் வஸவே நமஃ—வஸுஃ - எப்போதும் வைகுண்டத்தில் நித்யவாஸம் செய்பவர்.

701. ஓம் வஸுமநஸே நமஃ—வஸுமநாஃ - மனப்பூர்வமாய்ப் பக்தர்களுக்கு வேண்டிய திரவியங்களை யளிப்பவர்.

702. ஓம் ஹவிஷே நமः—ஹவிः - அக்நியில் மந்திரத்தோடு ஆஹுதி செய்யப்படும் அவிஸ்ரூபி.

3 3 3 4
ஸத்கதிஸ்ஸத்க்ருதிஸ்ஸத்தா ஸத்பூதிஸ்ஸத்பராயணः ।

3 2
ஶூரஸேநோ யதுஶ்ரேஷ்டஸ்ஸந்நிவாஸஸ்ஸுயாமுநः ॥ 75

703. ஓம் ஸத்கதயே நமः—ஸத்கதிः - சாதுக்கள் முடிவிலடையக்கூடிய பரமபதரூபி.

704. ஓம் ஸத்க்ருதயே நமः—ஸத்க்ருதிः - முக்திக்கு வருபவர்களை உபசரிப்பவர்.

705. ஓம் ஸத்தாயை நமः—ஸத்தா - பரமாத்மஸ்வரூபி.

706. ஓம் ஸத்பூதயே நமः—ஸத்பூதிः - சாதுக்களுக்கு அழிவில்லாத ஐசுவரியமளிப்பவர்.

707. ஓம் ஸத்பராயணாய நமः—ஸத்பராயணः - சாதுக்கள் மோக்ஷத்திற்கு வர ராஜபாட்டை போன்றவர்.

708. ஓம் ஶூரஸேநாய நமः—ஶூரஸேநः - அனுமான் போன்ற சூரர்களான சேனையை யுடையவர்.

709. ஓம் யதுஶ்ரேஷ்டாய நமः—யதுஶ்ரேஷ்டः - யதுகுலச்ரேஷ்டர்.

710. ஓம் ஸந்நிவாஸாய நமः—ஸந்நிவாஸः - சாதுக்கள் சுகமாய் வசிக்க இடமளிப்பவர்.

711. ஓம் ஸுயாமுநாய நமः—ஸுயாமுநः - யமுனைக் கரையில் விளையாடினவர்.

4 3
பூதாவாஸோ வாஸுதேவஸ்ஸர்வாஸுநிலயோऽநலः ।

3 3 3 3 3 3 4 2
தர்பஹா தர்பதோऽத்ருப்தः துர்த்தரோऽதாऽபராஜிதः॥(76)

712. ஓம் பூதாவாஸாய நமः—பூதாவாஸः - தன் பார்வையிலேயே ஜீவர்களை வசிக்கச் செய்பவர்.

713. ஓம் வாஸுதேவாய நமः—வாஸுதேவः - பிரமனுக்கு வேதோபதேசஞ்செய்தவர்.

714. ஓம் ஸர்வாஸுநிலயாய நமः—ஸர்வாஸுநிலயः எல்லா ஜீவர்களையும் பிரளயத்தில் லயஞ்செய்பவர்.

715. ஓம் அநலாய நமः—அநலः - பிறரால் பக்தர்களுக்கேற்படும் தீங்கை, சகிக்காதவர்.

716. ஓம் தர்பக்நே நமः—தர்பஹா - துஷ்டர்களின் கர்வத்தை அடக்குகிறவர்.

717. ஓம் தர்பதாய நமः—தர்பதः - தேவாதிகளை அம்ருதபானத்தால் செருக்குள்ளவர்களாகச் செய்பவர்.

718. ஓம் அத்ருப்தாய நமः—அத்ருப்தः - கர்வமில்லாதவர்.

719. ஓம் துர்த்தராய நமः—துர்த்தரः - பிறரால் லகுவாய் எடுக்கமுடியாதவர்.

720. ஓம் அபராஜிதாய நமः—அபராஜிதः - உலகத்திற்கு மாறுபாடாயிருப்பதால் ஜயிக்க முடியாதவர்.

3

விஶ்வமூர்திர் மஹாமூர்திர் தீப்தமூர்திரமூர்திமாந்

அநேகமூர்திரவ்யக்தஶ்ஶதமூர்திஶ்ஶதாநநः ॥ (77)

721. ஓம் விஶ்வமூர்தயே நமः—விஶ்வமூர்திः - எல்லா உலகசம்பந்தமுள்ளவர்.

722. ஓம் மஹாமூர்தயே நமः—மஹாமூர்திः - விராட்புருஷர்.

723. ஓம் தீப்தமூர்தயே நமः—தீப்தமூர்திः - பரஞ்சோதிரூபி.

724. ஓம் அமூர்திமதே நமஃ—அமூர்திமான் - உருவமில்லாதவர்.

725. ஓம் அநேகமூர்தயே நமஃ—அநேகமூர்திஃ - அநேக ஸ்திரீகளுக்கேற்ப அனேக வுருவமெடுத்தவர்.

726. ஓம் அவ்யக்தாய நமஃ—அவ்யக்தஃ - கண்ணுக்குப் புலப்படாதவர்.

727. ஓம் ஶதமூர்தயே நமஃ—ஶதமூர்திஃ - கணக்கில்லாத அவதாரம் எடுத்தவர்.

728. ஓம் ஶதாநநாய நமஃ—ஶதாநநஃ - அளவற்ற முகங்களுள்ளவர்.

ஏகோ நைகஃ ஸ வஃ கஃ கிம் யத்தத்பதமநுத்தமம்[3] ।
லோகபந்துர்[4]லோகநாதோ[2] மாதவோ[4] பக்தவத்ஸலஃ[4] ॥ (78)

729. ஓம் ஏகாய நமஃ—ஏகஃ - தம்மைத்தவிர இரண்டாவது வேறில்லாதவர்.

730. ஓம் நைகாய நமஃ—நைகஃ - முடிவில்லாத திவ்ய ஐஶ்வர்யமுடையவர்.

731. ஓம் ஸாய நமஃ—ஸஃ - அஞ்ஞானத்தைப் போக்கடிப்பவர்.

732. ஓம் வாய நமஃ—வஃ - ஜீவர்களிடத்தில் தாமும் தம்மிடம் ஜீவர்களுமாயிருப்பவர்.

733. ஓம் காய நமஃ—கஃ - எல்லாவற்றிலும் ஜ்வலிப்பவர்.

734. ஓம் கிமே நமஃ—கிம் - சுவதந்திர பலப்ரதர்.

735. ஓம் யதே நமஃ—யத் - பக்தர்களை ஆதரிக்க முயற்சிப்பவர்.

736. ஓம் ததே நமஃ—தத் - ஸ்வக்ஞான பக்தியையளிப்பவர்.

737. ஓம் பதாய அநுத்தமாய நமஃ—பதம் அநுத்தமம் முக்தி முடிவானவர்.

738. ஓம் லோகபந்தவே நமஃ—லோகபந்துஃ - லோகபந்து.

739. ஓம் லோகநாதாய நமஃ—லோகநாதஃ - உலகங்களை ஆசீர்வதிப்பவர்.

740. ஓம் மாதவாய நமஃ—மாதவஃ - மாதவனென்கிற திருநாமம் பூண்டவர்.

741. ஓம் பக்தவத்ஸலாய நமஃ—பக்தவத்ஸலஃ - பக்தர்களிடத்தில் அன்பு பாராட்டுபவர்.

ஸுவர்ணவர்ணோ ஹேமாங்கஃ வராங்கஸ்சந்தநாங்கதீ ।
வீரஹா விஷமஸ்ஸூந்யோ க்ருதாசீரசலஸ்சலஃ ॥ (79)

742. ஓம் ஸுவர்ணவர்ணாய நமஃ—ஸுவர்ணவர்ணஃ - பத்தரைமாற்றுத் தங்கம்போன்ற மேனியை யுடையவர்.

743. ஓம் ஹேமாங்காய நமஃ—ஹேமாங்கஃ - நித்ய திவ்ய சத்வ மங்களங்களான சரீரத்தை யுடையவர்.

744. ஓம் வராங்காய நமஃ—வராங்கஃ - உபநிஷத்துக்களில் சொல்லியபடி ச்ரேஷ்டமான சரீரமுடையவர்.

745. ஓம் சந்தநாங்கதிநே நமஃ—சந்தநாங்கதீ - சந்தனம், தோள்வளை இவைகளாலலங்கிருதர்.

746. ஓம் வீரக்நே நமஃ—வீரஹா - உலக வீரர்களான அசுரர்களை வதைத்தவர்.

747. ஓம் விஷமாய நமஃ—விஷமஃ - தனக்கு வேறு நிகரில்லாதவர்.

748. ஓம் ஸௌம்யாய நமः—ஸௌம்யः - குற்றமற்றிருப்பவர்.

749. ஓம் க்ருதாஸிஷே நமः—க்ருதாஸீः - அக்னியில் நெய்யினால் ஹோமஞ் செய்வதைப் புசிப்பவர்.

750. ஓம் அசலாய நமः—அசலः - எக்காலத்திலும் அசையாப்பொருளாயுள்ளவர்.

751. ஓம் சலாய நமः—சலः - அசையும்பொருளாயிருப்பவர்.

அமாநீ மாநதோ மாந்யோ லோகஸ்வாமீ த்ரிலோகத்ருத் ।

ஸுமேதா மேதஜோ தந்யஸ்ஸத்யமேதா தராதரः ॥ (80)

752. ஓம் அமாநிநே நமः—அமாநீ - பக்தர்கள் விஷயத்தில் லஜ்ஜை யில்லாதவர்.

753. ஓம் மாநதாய நமः—மாநதः - வித்யாஸமின்றிப் பக்த பூஜை செய்பவர்.

754. ஓம் மாந்யாய நமः—மாந்யः - கௌரவம்பொருந்தினவர்.

755. ஓம் லோகஸ்வாமிநே நமः—லோகஸ்வாமீ - உலகத்திற்கு அதிபர்.

756. ஓம் த்ரிலோகத்ருதே நமः—த்ரிலோகத்ருத் - மூவுலகங்களையும் தரிப்பவர்.

757. ஓம் ஸுமேதஸே நமः—ஸுமேதாः - எல்லாவற்றையும் ஸூக்ஷ்மபுத்தியோடு செய்யும் திறமையுடையவர்.

758. ஓம் மேதஜாய நமः—மேதஜः - யாகத்திலிருந்துண்டான மஹாபுருஷர்.

759. ஓம் தந்யாய நமः—தந்யः - தமதவதாரத்தால் ஜகத்திற்கு க்ஷேமத்தைச் செய்பவர்.

760. ஓம் ஸத்யமேதஸே நம:—ஸத்யமேதா: - ஸத்யமே பேசுபவர்.

761. ஓம் தராதராய நம:—தராதர: - எட்டு குலபர்வதங் களாய் பூமியைத் தாங்குபவர்.

3 4 4
தேஜோவ்ருஷோ த்யுதிதரஸ்ஸர்வஶஸ்த்ரப்ருதாம் வர: ।

3 3 3 3 3 3 3
ப்ரக்ரஹோ நிக்ரஹோ வ்யக்ரோ நைகஶ்ருங்கோ கதாக்ரஜ: ॥

762. ஓம் தேஜோவ்ருஷாய நம:—தேஜோவ்ருஷ: - தேஜோரூபியாய் ஒளியை வீசச் செய்பவர்.

763. ஓம் த்யுதிதராய நம:—த்யுதிதர: - ஒளியைத் தரிப்பவர்.

764. ஓம் ஸர்வஶஸ்த்ரப்ருதாம்வராய நம:—ஸர்வஶஸ்த்ர ப்ருதாம்வர: - சகல வில்லாளிகளுள் சிரேஷ்டர்.

765. ஓம் ப்ரக்ரஹாய நம:—ப்ரக்ரஹ: - விஷயங்களிலிருந்து மனதைக் கடிவாளம்போலத் திருப்புகிறவர்.

766. ஓம் நிக்ரஹாய நம:—நிக்ரஹ: - பக்தி செய்யாதவர்களை நிக்ரஹிப்பவர்.

767. ஓம் வ்யக்ராய நம:—வ்யக்ர: - ஸதா விழித்துக் கொண்டு ஜாக்கிரதையாயிருப்பவர்.

768. ஓம் நைகஶ்ருங்காய நம:—நைகஶ்ருங்க: - அநேகங் கிளைகளுள்ள மஹா விருக்ஷரூபி.

769. ஓம் கதாக்ரஜாய நம:—கதாக்ரஜ: - கதனென்னும் யாதவனுக்கு முன் பிறந்தவர்.

சதுர்மூர்திஃ சதுர்பாஹுஃ சதுர்வ்யூஹஃ சதுர்கதிஃ ।

சதுராத்மா சதுர்பாவஃ சதுர்வேதவிதேகபாத் ॥ (82)

770. ஓம் சதுர்மூர்தயே நமஃ—சதுர்மூர்திஃ - வ்யூகாவதாரத்தில் நான்குவிதமான சரீரமுள்ளவர்.

771. ஓம் சதுர்பாஹவே நமஃ—சதுர்பாஹுஃ - நான்கு திருக்கைகளுள்ளவர்.

772. ஓம் சதுரவ்யூஹாய நமஃ—சதுர்வ்யூஹஃ - நான்கு வ்யூஹசரீரத்தில் ஷாட்குண்யமும் சமமாய்ப் பொருந்தியுள்ளவர்.

773. ஓம் சதுர்கதயே நமஃ—சதுர்கதிஃ - நான்குவிதமான புருஷார்த்தத்திற்கும் ஆதாரமானவர்.

774. ஓம் சதுராத்மநே நமஃ—சதுராத்மா - மனோபுத்தி அஹங்கார சித்தமென்னும் நான்கு ஸ்வரூபங்களாயிருப்பவர்.

775. ஓம் சதுர்பாவாய நமஃ—சதுர்பாவஃ - ஸ்ருஷ்டி முதலிய நான்கு வியாபாரங்களை யுடையவர்.

776. ஓம் சதுர்வேதவிதேகபதே நமஃ—சதுர்வேதவிதேகபாத் - நான்கு வேத மோதினவர்களைக் கடைசியில் தனது திருவடியை யடையும்படி செய்பவர்.

ஸமாவர்தோ நிவ்ருத்தாத்மா துர்ஜயோ துரதிக்ரமஃ ।

துர்லபோ துர்கமோ துர்கோ துராவாஸோ துராரிஹா ॥ (83)

777. ஓம் ஸமாவர்தாய நமஃ—ஸமாவர்தஃ - வைகுண்டத்திலிருந்து அடிக்கடி பூமியிலவதார மெடுப்பவர்.

778. ஓம் நிவ்ருத்தாத்மநே நம:—நிவ்ருத்தாத்மா - மஹா யோகீசுவரரானதால் வசீகரிக்க முடியாதவர்.

779. ஓம் துர்ஜயாய நம:—துர்ஜய: - பிறர் சக்தியால் சிரமப் பட்டும் தேடமுடியாத வைகுண்டவாசி.

780. ஓம் துரதிக்ரமாய நம:—துரதிக்ரம: - தம்மைவிட்டு வேறிடம் போக இடங் கொடாதவர்.

781. ஓம் துர்லபாய நம:—துர்லப: - யோகிகளாலும் சிரமப்பட்டு அடையக்கூடியவர்.

782. ஓம் துர்கமாய நம:—துர்கம: - தமது காந்தி விசேஷத்தால் சமீபத்தில் வரவொட்டாதவர்.

783. ஓம் துர்காய நம:—துர்க: - மாயை கோட்டைபோல் மறைத்திருப்பதால் பிரவேசிக்க முடியாதவர்.

784. ஓம் துராவாஸாய நம:—துராவாஸ: - பாபிகள் தம் சமீபத்தில் வர இடமளிக்காதவர்.

785. ஓம் துராரிக்நே நம:—துராரிஹா - வேதமார்க்கத்துக்கு விரோதியானவர்களை சம்ஹாரஞ் செய்தவர்.

4 3 3 3 4
ஶுபாங்கோ லோகஸாரங்க: ஸுதந்துஸ்தந்துவர்த்தந: ।
3 3
இந்த்ரகர்மா மஹாகர்மா க்ருதகர்மா க்ருதாகம: ॥ (84)

786. ஓம் ஶுபாங்காய நம:—ஶுபாங்க: - எல்லாரும் மயங்கும்படியான திவ்யசரீரமுள்ளவர்.

787. ஓம் லோகஸாரங்காய நம:—லோகஸாரங்க: - உலகத்தோருள் மகா பலிஷ்டர்.

788. ஓம் ஸுதந்தவே நம:—ஸுதந்து: - தமது மாயா வலைக்கு நூல் போன்றவர்.

789. ஓம் தந்துவர்த்தநாய நமஃ—தந்துவர்த்தநஃ - ஸம்ஸாரமாகிற தறியில் நூல் நூற்கும் சேணியர்.

790. ஓம் இந்த்ரகர்மணே நமஃ—இந்த்ரகர்மா - இந்திரனுக்கு சகாயம் செய்தவர்.

791. ஓம் மஹாகர்மணே நமஃ—மஹாகர்மா - பிறரால் செய்யமுடியாததும் விநோதமுமான காரியங்களைச் செய்கிறவர்.

792. ஓம் க்ருதகர்மணே நமஃ—க்ருதகர்மா - எல்லா ஸ்ருஷ்டிகளையும் செய்து விசாரமற்றிருப்பவர்.

793. ஓம் க்ருதாகமாய நமஃ—க்ருதாகமஃ - வேதத்தை நிலைநிறுத்தும் சமய நூல்களை இயற்றியவர்.

3 4 3 3 4
உத்பவஸ்ஸுந்தரஸ்ஸுந்தஃ ரத்நநாபஃ ஸுலோசநஃ ।

3
அர்கோ வாஜஸநிஃ ஶ்ருங்கீ ஜயந்தஸ்ஸர்வவிஜ்ஜயீ ॥ (85)

794. ஓம் உத்பவாய நமஃ—உத்பவஃ - ஸம்ஸார பாசச் சிக்கற்றவர்.

795. ஓம் ஸுந்தராய நமஃ—ஸுந்தரஃ - வேதத்தால்கூட வர்ணிக்க முடியாத வடிவழகு பொருந்தியவர்.

796. ஓம் ஸுந்தாய நமஃ—ஸுந்தஃ - ஜீவர்களைப் பிறவிக்குட்படுத்துபவர்.

797. ஓம் ரத்நநாபாய நமஃ—ரத்நநாபஃ - ரத்தின கர்ப்பமாகிய ஸாளக்கிராம மத்யவாஸி.

798. ஓம் ஸுலோசநாய நமஃ—ஸுலோசநஃ - மலர்ந்த செந்தாமரை போன்ற கண்களுடையவர்.

799. ஓம் அர்காய நமஃ—அர்கஃ - தேவாதிகளால் துதிக்கப்பட்டவர்.

800. ஓம் வாஜஸநயே நம:—வாஜஸநி: - நாஸ்திகர்களின் ஐஹிக வாழ்வான அன்னம் முதலியவற்றை யுகந் தனுபவிப்பவர்.

801. ஓம் ஶ்ருங்கிணே நம:—ஶ்ருங்கீ - வராஹ அவதாரத் தில் கொம்புபோன்ற ஈற்றுப் பற்களுள்ளவர்.

802. ஓம் ஜயந்தாய நம:—ஜயந்த: - தேவர்களுக்கு ஜயத் தை உண்டுபண்ணுகிறவர்.

803. ஓம் ஸர்வவிஜ்ஜயிநே நம:—ஸர்வவிஜ்ஜயீ - மாயா வாதஞ் செய்வோரைக் கண்டித்து ஸந்மார்க்கத்தை ஸ்தாபித்தவர்.

ஸுவர்ணபிந்துரக்ஷோப்யஸ்ஸர்வவாகீஶ்வரேஶ்வர: ।
மஹாஹ்ரதோ மஹாகர்தோ மஹாபூதோ மஹாநிதி: ॥ (86)

804. ஓம் ஸுவர்ணபிந்தவே நம:—ஸுவர்ணபிந்து: - அகார உகார மகாரரூபமான ப்ரணவரூபி.

805. ஓம் அக்ஷோப்யாய நம:—அக்ஷோப்ய: - பிறரால் கலக்கமுடியாத மனமுடையவர்.

806. ஓம் ஸர்வவாகீஶ்வரேஶ்வராய நம:—ஸர்வவாகீஶ்வ ரேஶ்வர: - பேசும் திறமையில் நிகரற்றவர்.

807. ஓம் மஹாஹ்ரதாய நம:—மஹாஹ்ரத: - ஸாதுக்க ளுக்கு தெளிந்த ஆழமுள்ள மடுவைப்போன்றவர்.

808. ஓம் மஹாகர்தாய நம:—மஹாகர்த: - பெரும் பள் ளம் போன்ற நரகாதி யாதனையால் பாபிகளை சிக்ஷிப்பவர்.

809. ஓம் மஹாபூதாய நம:—மஹாபூத: - நாற்புறமும் சாதுக்களால் துதிக்கப்படுகிறவர்.

810. ஓம் மஹாநிதயே நமஃ—மஹாநிதிஃ - மகான்களுக்கு நிதிபோன்றவர்.

குமுதஃ குந்தரஃ குந்தஃ பர்ஜந்யஃ பவநோऽநிலஃ ।

அம்ருதாஶோऽம்ருதவபுஃ ஸர்வஜ்ஞஸ்ஸர்வதோமுகஃ ॥ (87)

811. ஓம் குமுதாய நமஃ—குமுதஃ - பூமியை மேலே கொண்டுவந்தவர்.

812. ஓம் குந்தராய நமஃ—குந்தரஃ - மதுகைடப மர்த்தனர்.

813. ஓம் குந்தாய நமஃ—குந்தஃ - குருக்கத்தி மலர் போன்ற சுத்த வெண்மையான ஞானமுடையவர்களாய் செய்பவர்.

814. ஓம் பர்ஜந்யாய நமஃ—பர்ஜந்யஃ - மேகம்போல் கடாக்ஷத்தை வர்ஷிப்பவர்.

815. ஓம் பவநாய நமஃ—பவநஃ - பரிசுத்தப்படுத்துபவர்.

816. ஓம் அநிலாய நமஃ—அநிலஃ - எப்போதும் பிரகாசிக்கும் ஞான ஒளியாயிருப்பவர்.

817. ஓம் அம்ருதாஶாய நமஃ—அம்ருதாஶஃ - பக்தர்களுக்குத் தம்குணானுபவமாகிய அம்ருதத்தை ஊட்டுகிறவர்.

818. ஓம் அம்ருதவபுஷே நமஃ—அம்ருதவபுஃ - மரணமில்லாச் சரீரமுடையவர்.

819. ஓம் ஸர்வஜ்ஞாய நமஃ—ஸர்வஜ்ஞஃ - எல்லாமறிந்தவர்.

820. ஓம் ஸர்வதோமுகாய நமஃ—ஸர்வதோமுகஃ - எவ்வளவோ கணக்கில்லாத மார்க்கங்கள் மூலமாய்த் தம்மை யடையச் செய்பவர்.

4 3 4 2
ஸுலப: ஸுவ்ரதஸ்ஸித்த: ஶத்ருஜிச்சத்ருதாபந: ।

3 4 3 2 4 3
ந்யக்ரோதோதும்பரோஶ்வத்த: சாணூராந்த்ரநிஷூதந: ॥

821. ஓம் ஸுலபாய நம:—ஸுலப: - லகுவான உபாயங்களாலுமடையக்கூடியவர்.

822. ஓம் ஸுவ்ரதாய நம:—ஸுவ்ரத: - தம்மைச் சரணுகதி யடைந்தவனைக் கைவிடா விரதமுடையவர்.

823. ஓம் ஸித்தாய நம:—ஸித்த: - தன்னை உள்ளபடி யறிந்தோர்க்கு ஸித்தமாயிருப்பவர்.

824. ஓம் ஶத்ருஜிச்சத்ருதாபநாய நம:—ஶத்ருஜிச்சத்ருதாபந: - சத்துருக்களைத் துன்புறுத்தி ஜயம் பெற்றவர்.

825. ஓம் ந்யக்ரோதாய நம:—ந்யக்ரோத: - சரணுகதரை ஆசாரியன் மூலமாயவன் அபராதங்களைப் பொறுத்துத் தம்மிடமழைப்பவர்.

826. ஓம் உதும்பராய நம:—உதும்பர: - விருக்ஷச்ரேஷ்டமான அத்திமர ஸ்வரூபி.

827. ஓம் அஶ்வத்தாய நம:—அஶ்வத்த: - மும்மூர்த்திரூபமான அரசமரமானவர்.

828. ஓம் சாணூராந்த்ரநிஷூதநாய நம:—சாணூராந்த்ரநிஷூதந: - சாணூரன், அந்தரன் என்னுமசுரர்களை அழித்தவர்.

4
ஸஹஸ்ரார்சிஸ்ஸப்தஜிஹ்வஸ்ஸப்தைதாஸ்ஸப்தவாஹந: ।

4 4 3 4
அமூர்திரநகோ²சிந்த்யோ பயக்ருத்பயநாஶந: ॥ (89)

829. ஓம் ஸஹஸ்ரார்சிஷே நமஃ—*ஸஹஸ்ரார்சிஃ - தேஜோமூர்த்தியாய் ஜ்வலிக்கும் சக்கிராயுதஸ்வரூபி.*

830. ஓம் ஸப்தஜிஹ்வாய நமஃ—*ஸப்தஜிஹ்வஃ - ஏழுஜ்வாலைகளுடைய அக்னிரூபி.*

831. ஓம் ஸப்தைதஸே நமஃ—*ஸப்தைதாஃ - ஜடாமண்டலதாரிகளான ரிஷிகளால் தினந்தோறும் ஸமித்துக்களால் யக்ஞம் செய்யப்படுகிறவர்.*

832. ஓம் ஸப்தவாஹநாய நமஃ—*ஸப்தவாஹநஃ - ஏழு குதிரைகள் பூட்டின ஒரே சக்கரமுள்ள ரதமத்தியில் சூரியனாய் ப்ரகாசிப்பவர்.*

833. ஓம் அமூர்தயே நமஃ—*அமூர்திஃ - பஞ்சபூதவிகாரமில்லாத சரீரமுள்ளவர்.*

834. ஓம் அநகாய நமஃ—*அநகஃ - ஜீவாத்மாவைவிட விலக்ஷணமானவர்.*

835. ஓம் அசிந்த்யாய நமஃ—*அசிந்த்யஃ - பிரமாணங்களால் ஊஹித்தும் நிர்ணயம் பண்ண முடியாதவர்.*

836. ஓம் பயக்ருதே நமஃ—*பயக்ருத் - அபக்தர்களுக்குப் பயத்தைக் காண்பிப்பவர்.*

837. ஓம் பயநாஶநாய நமஃ—*பயநாஶநஃ - பக்தர்களுக்கு ஜனன மரண பயத்தைப் போக்குபவர்.*

*அணுர்ப்ருஹத்க்ருஶஸ்ஸ்தூலோ குணப்ருந்நிர்குணோ மஹாந் ।*
(3 2 3 4 3)

*அத்ருதஃஸ்வத்ருதஸ்ஸ்வாஸ்யஃ ப்ராக்வம்ஶோவம்ஶவர்தநஃ ॥*
(4 4 3 4)

838. ஓம் அணவே நமஃ—*அணுஃ - அணுவிலும் அணுவுருவாயிருப்பவர்.*

839. ஓம் ப்ருஹதே நமஃ—ப்ருஹத் - பெரியவைகளுள் பெரிதாய்த் தோன்றுபவர்.

840. ஓம் க்ருஶாய நமஃ—க்ருஶஃ - மெலிந்த சரீரமுடையவர்.

841. ஓம் ஸ்தூலாய நமஃ—ஸ்தூலஃ - ப்ராப்தி என்னும் ஐச்வரியத்தால் ஸ்தூலரூபியா யிருப்பவர்.

842. ஓம் குணப்ருதே நமஃ—குணப்ருத் - வாத்சல்யமுதலிய குணங்களுக்கிருப்பிடமானவர்.

843. ஓம் நிர்குணாய நமஃ—நிர்குணஃ - ஒருகுணமுமில்லாதவர்.

844. ஓம் மஹதே நமஃ—மஹாந் - எல்லோராலும் பூஜிக்கப்படுகிறவர்.

845. ஓம் அத்ருதாய நமஃ—அத்ருதஃ - பிறரால் தாங்கமுடியாதவர்.

846. ஓம் ஸ்வத்ருதாய நமஃ—ஸ்வத்ருதஃ - தேவதைகளால் புகழப்படுகிறவர்.

847. ஓம் ஸ்வாஸ்யாய நமஃ—ஸ்வாஸ்யஃ - வைகுண்டத்தில் பரமபதநாதனாய் திவ்யாஸனத்தில் வீற்றிருப்பவர்.

848. ஓம் ப்ராக்வம்ஶாய நமஃ—ப்ராக்வம்ஶஃ - யாகத்தின் ப்ராக்வம்சமென்கிற மேடைரூபமானவர்.

849. ஓம் வம்சவர்தநாய நமஃ—வம்சவர்தநஃ - பக்தர்கள் வம்சத்தை விருத்தி பண்ணுகிறவர்.

4 4 2 3 3 3
பாரப்ருத்கதிதோ யோகீ யோகீஶஸ்ஸர்வகாமதஃ ।

ஆஶ்ரமஃ ஶ்ரமணஃ க்ஷாமஸ்ஸுபர்ணோ வாயுவாஹநஃ ॥ (91)

850. ஓம் பாரப்ருதே நமः—பாரப்ருத் - சகல ரக்ஷா பாரத்தையும் வகிப்பவர்.

851. ஓம் கதிதாய நமः—கதிதः - கதாரூபமாய் எல்லாராலும் துதிக்கப்படுகிறவர்.

852. ஓம் யோகினே நமः—யோகீ - யோகாப்பியாசஞ் செய்பவர்.

853. ஓம் யோகீஸாய நமः—யோகீஸः - யோகிகளுள் ச்ரேஷ்டர்.

854. ஓம் ஸர்வகாமதாய நமः—ஸர்வகாமதः - சர்வாபீஷ்டப்ரதர்.

855. ஓம் ஆஶ்ரமாய நமः—ஆஶ்ரமः - சம்சார சிரமத்தை போக்கடிப்பவர்.

856. ஓம் ஶ்ரமணாய நமः—ஶ்ரமணः - யோகத்தின் சுலப வழி காட்டுகிறவர்.

857. ஓம் க்ஷாமாய நமः—க்ஷாமः - ஹடம் முதலிய யோகத்தால் காயக்லேசஞ்செய்து கடைசியில் தம்மிடம் வர அனுமதிப்பவர்.

858. ஓம் ஸுவர்ணாய நமः—ஸுவர்ணः - மகான்களால் மோக்ஷத்தையே விரும்பி த்யானம் பண்ணச் செய்பவர்.

859. ஓம் வாயுவாஹநாய நமः—வாயுவாஹநः - வஸு என்னுமரசனுக்குச் சாப நிவர்த்தி செய்து கருடனால் மேலேற்றினவர்.

4 4 4 3 3 3 3 3
தநுர்தரோ தநுர்வேதோ தண்டோ தமயிதா² தமः ।

அபராஜிதஸ்ஸர்வஸஹோ நியந்தா நியமோ யமः ॥ (92)

860. ஓம் தநுர்தராய நமஃ—*தநுர்தரஃ* - கையும் வில்லுமாய் ரக்ஷிப்பவர்.

861. ஓம் தநுர்வேதாய நமஃ—*தநுர்வேதஃ* - தனுர்வேத ரூபி.

862. ஓம் தண்டாய நமஃ—*தண்டஃ* - நீதிசாஸ்திரரூபி.

863. ஓம் தமயித்ரே நமஃ—*தமயிதா* - பாபத்திற்குத் தக்க சிக்ஷை விதிப்பவர்.

864. ஓம் அதமாய நமஃ—*அதமஃ* - ஒருவராலும் இகழப் படாதவர்.

865. ஓம் அபராஜிதாய நமஃ—*அபராஜிதஃ*- கல்பம் முடியும் வரையில் மாருத ஆக்ஞையை ஏற்படுத்தியிருப்ப வர்.

866. ஓம் ஸர்வஸஹாய நமஃ—*ஸர்வஸஹஃ* - பக்தர்கள் தமக்குச் செய்யும் தீங்குகளைப் பாவிக்காதவர்.

867. ஓம் நியந்த்ரே நமஃ—*நியந்தா* - குற்றத்துக்குத்தக்க படி தண்டிப்பவர்.

868. ஓம் நியமாய நமஃ—*நியமஃ* - பூஜாபலத்தை யளிப்பவர்.

869. ஓம் யமாய நமஃ—*யமஃ* - தேவரூபியாய் காம்யபல னளிப்பவர்.

4
*ஸத்வவாந் ஸாத்விகஸ்ஸத்யஸ்ஸத்ய தர்மபராயணஃ ।* (93)

4 4
*அபிப்ராயஃ ப்ரியார்ஹோர்ஹஃ ப்ரியக்ருத் ப்ரீதிவர்தநஃ ।*

870. ஓம் ஸத்வவதே நமஃ—*ஸத்வவாந்* - ஸாத்விகுணவுரு வுடையவர்.

871. ஓம் ஸாத்விகாய நமஃ—*ஸாத்விகஃ* - உறுதியான மனோ நிஷ்டையையுடையவர்.

872. ஓம் ஸத்யாய நம:—ஸத்ய: - தமதனுக்கிரகத்தால் ஸத்யலோகமளிப்பவர்.

873. ஓம் ஸத்யதர்மபராயணாய நம:—ஸத்யதர்மபராயண: - ஸத்யம், தர்மமிவ்விரண்டு குணங்களால் சத்ரு ஸம்ஹாரம் செய்பவர்.

874. ஓம் அபிப்ராயாய நம:—அபிப்ராய: - எவ்விதத்தாலும் தம்மிடம் வந்து சேரும் உபாயத்தை உபதேசிப்பவர்.

875. ஓம் ப்ரியார்ஹாய நம:—ப்ரியார்ஹ: - சுலபமான பூஜையையும் பிரியமாய் ஸ்வீகரிப்பவர்.

876. ஓம் அர்ஹாய நம:—அர்ஹ: - எல்லா குணமும் பொருந்திய முதல்வர்.

877. ஓம் ப்ரியக்ருதே நம:—ப்ரியக்ருத் - பிரியவார்த்தையால் பக்தர்களை ரஞ்சிப்பிப்பவர்.

878. ஓம் ப்ரீதிவர்தநாய நம:—ப்ரீதிவர்தந: - தம்மிடத்து மேன்மேல் விருத்தியடையும் ப்ரீதியை யுண்டாக்குகிறவர்.

3 4 3 4
விஹாயஸகதி: ஜ்யோதிஸ்ஸுருசிர்ஹுதபுக்விபு: ।
ரவிர்விரோசநஸ்ஸூர்யஸ்ஸவிதா ரவிலோசந: ॥ (94)

879. ஓம் விஹாயஸகதயே நம:—விஹாயஸகதி: - பக்தர்கள் முக்தியடையத் தடையில்லாத மார்க்கம் போன்றவர்.

880. ஓம் ஜ்யோதிஷே நம:—ஜ்யோதி: - மோக்ஷத்திற்கு வருவோருக்கு திவ்ய வெளிச்சங் காண்பிக்கும் ஜோதி.

881. ஓம் ஸுருசயே நமஃ—ஸுருசிஃ - சாதுக்களுக்கு இனிய ருசிபோன்றவர்.

882. ஓம் ஹுதபுக்விபவே நமஃ—ஹுதபுக்விபுஃ - யாகத்தில் மூவுருவாய் ஓமத்தை வாங்கிப் புசிக்கும் அக்னிரூபி.

883. ஓம் ரவயே நமஃ—ரவிஃ - கிரணங்களால் ஜலங்களை ஆகர்ஷிக்குந் தன்மையுள்ள சூரியரூபி.

884. ஓம் விரோசநாய நமஃ—விரோசநஃ - தமது கதியால் தக்ஷிணாயன உத்தராயணங்களைப் பிரிப்பவர்.

885. ஓம் ஸூர்யாய நமஃ—ஸூர்யஃ - பிராணிகளை உயிர்ப்பிப்பவர்.

886. ஓம் ஸவித்ரே நமஃ—ஸவிதா - கர்ப்பவாஸக்லேசத்திலிருந்து ஜனிக்கச் செய்பவர்.

887. ஓம் ரவிலோசநாய நமஃ—ரவிலோசநஃ - சூரியனை நேத்ரமாக வுடைய விராட்ரூபி.

4 3 4 2 3 3 3
அநந்தஹுதபுக்போக்தா ஸுகதோ நைகதோऽக்ரஜஃ ।

3 4 2 3 4
அநிர்விண்ணஸ்ஸதாமர்ஷீ லோகாதிஷ்டாநமத்புதஃ ॥ (95)

888. ஓம் அநந்தஹுதபுக்போக்த்ரே நமஃ—அநந்தஹுதபுக்போக்தா - சகல யாகங்களிலும் மந்திரபூர்வமாய்ச் செய்யும் ஆகுதிகளைத் தமது ஜ்வாலையால் வகித்து புஜிப்பவர்.

889. ஓம் ஸுகதாய நமஃ—ஸுகதஃ - சாதுக்களுக்கு நித்ய சுகமளிப்பவர்.

890. ஓம் நைகதாய நமஃ—நைகதஃ - பக்தர்களைத் தேவரூபியாய்த் தம்மிடம் வந்து சேரும்படி ஆக்ஞாபிப்பவர்.

891. ஓம் அக்ரஜாய நமঃ—அக்ரஜঃ - தம்மிடம் வருவோரைப் பிராமணர்போல் உபசரிப்பவர்.

892. ஓம் அநிர்விண்ணாய நமঃ—அநிர்விண்ணঃ - விசாரமில்லாதவர்.

893. ஓம் ஸதாமர்ஷிணே நமঃ—ஸதாமர்ஷீ - பக்தர்களிடம் விசுவாசமுள்ளவர்.

894. ஓம் லோகாதிஷ்டாநாய நமঃ—லோகாதிஷ்டாநம் - உலகங்களுக்கு மூலாதாரமானவர்.

895. ஓம் அத்புதாய நமঃ—அத்புதঃ - ஆச்சரியமான காரியத்தைச் செய்பவர்.

ஸநாத் ஸநாதநதமঃ கபிலঃ கபிரவ்யயঃ ।

ஸ்வஸ்திதஸ்ஸ்வஸ்திக்ருத்ஸ்வஸ்தீ ஸ்வஸ்திபுக்ஸ்வஸ்தி தக்ஷிணঃ ॥ (96)

896. ஓம் ஸநாதே நமঃ—ஸநாத் - பக்தர்களால் போட்டி போட்டு அனுபவிக்கப்படுகிறவர்.

897. ஓம் ஸநாதநதமாய நமঃ—ஸநாதநதமঃ - புதிதாக வந்த மனிதர்போல் ஆசையாயனுபவிக்கத்தக்கவர்.

898. ஓம் கபிலாய நமঃ—கபிலঃ - நித்யவிபூதி மத்தியில் வசிப்பவர்.

899. ஓம் கபயே அவ்யயாய நமঃ—கபிঃ அவ்யயঃ - மாறுபாடில்லாச் சுகானுபவ ஸ்வரூபி.

900. ஓம் ஸ்வஸ்திதாய நமঃ—ஸ்வஸ்திதঃ - பக்தர்களுக்கு க்ஷேமமளிப்பவர்.

901. ஓம் ஸ்வஸ்திக்ருதே நமஃ—ஸ்வஸ்திக்ருத் - க்ஷேம காரியத்தைச் செய்ய அனுகூலம் பண்ணுபவர்.

902. ஓம் ஸ்வஸ்திநே நமஃ—ஸ்வஸ்தி - நித்ய மங்கள ஸ்வரூபி.

903. ஓம் ஸ்வஸ்திபுஜே நமஃ—ஸ்வஸ்திபுக் - மங்கள காரியங்களை இடையூறின்றிக் காப்பவர்.

904. ஓம் ஸ்வஸ்திதக்ஷிணாய நமஃ—ஸ்வஸ்திதக்ஷிணஃ - தீர்க்க ஸத்ரயாகத்தில் ரித்விக்களுக்கு க்ஷேமதக்ஷிணையளித்தவர்.

3 3
அரௌத்ரஃ குண்டலீ சக்ரீ விக்ரம்யூர்ஜிதஶாஸநஃ ।

3 3 3 3 3 3
ஶப்தாதிகஶ்ஶப்தஸஹஶ்ஶிஶிரஶ்ஶர்வரீகரஃ ॥ (97)

905. ஓம் அரௌத்ராய நமஃ—அரௌத்ரஃ - உக்கிரஸ்வரூபமில்லாதவர்.

906. ஓம் குண்டலிநே நமஃ—குண்டலீ - ஆதிசேஷனைப் படுக்கையாயுடையவர்.

907. ஓம் சக்ரிணே நமஃ—சக்ரீ - பகதர்களால் புடை சூழப்பட்டவர்.

908. ஓம் விக்ரமிணே நமஃ—விக்ரமீ - சத்துருக்களை ஜயிக்கும் பராக்கிரமமுடையவர்.

909. ஓம் ஊர்ஜிதஶாஸநாய நமஃ—ஊர்ஜிதஶாஸநஃ - சிலாலிகிதம்போல் ஆக்ஞை செய்பவர்.

910. ஓம் ஶப்தாதிகாய நமஃ—ஶப்தாதிகஃ - சப்தப்ரம்மஸ்வரூபி.

911. ஓம் ஶப்தஸஹாய நமஃ—ஶப்தஸஹஃ - வேதங்களால் துதிக்கப்படுகிறவர்.

912. ஓம் ஶிஶிராய நம:—ஶிஶிர: - குளிர்ந்த மனமுடையவர்.

913. ஓம் ஶர்வரீகராய நம:—ஶர்வரீகர: - இராத்திரிக்கு தேவதையான சந்திரரூபி.

அக்ரூர: பேஶலோ தக்ஷோ தக்ஷிண: க்ஷமிணாம்வர: ।
வித்வத்தமோ வீதபய: புண்யஶ்ரவணகீர்தந: ॥ (98)

914. ஓம் அக்ரூராய நம:—அக்ரூர: - கொடுமை யில்லாதவர்.

915. ஓம் பேஶலாய நம:—பேஶல: - மிருதுவான சரீரமுடையவர்.

916. ஓம் தக்ஷாய நம:—தக்ஷ: - எல்லாரிடத்திலும் சமத்வ புத்தியுடன் ரக்ஷிப்பவர்.

917. ஓம் தக்ஷிணாய நம:—தக்ஷிண: - பக்தர்களைச் சமமாய் ஆதரிப்பவர்.

918. ஓம் க்ஷமிணாம்வராய நம:—க்ஷமிணாம்வர: - பூமி முதலான பொறுமைசாலிகளுள் சிரேஷ்டர்.

919. ஓம் வித்வத்தமாய நம:—வித்வத்தம: - எல்லாவற்றையும் விசாரிப்பவர்.

920. ஓம் வீதபயாய நம:—வீதபய: - பக்தர்களின் பயத்தைப் போக்கடிப்பவர்.

921. ஓம் புண்யஶ்ரவணகீர்தநாய நம:—புண்யஶ்ரவணகீர்தந: - பகவந்நாமத்தை ச்ரவணஞ் செய்வதாலும் பாடுவதினாலும் புண்யமளிப்பவர்.

3 3
உத்தாரணோ துஷ்க்ருதிஹா புண்யோ துஸ்வப்நநாஶநः ।

2
வீரஹா ரக்ஷணஸ்ஸந்தோ ஜீவநः பர்யவஸ்திதः ॥ (99)

922. ஓம் உத்தாரணாய நமः—உத்தாரணः - கஜேந்திரனை ரக்ஷித்தவர்.

923. ஓம் துஷ்க்ருதிக்நே நமः—துஷ்க்ருதிஹா - துஷ்காரியம் செய்பவர்களை வெருட்டுபவர்.

924. ஓம் புண்யாய நமः—புண்யः - புண்யமூர்த்தி.

925. ஓம் துஸ்வப்நநாஶநாய நமः—துஸ்வப்நநாஶநः - தன்னை ஸ்மரித்தவர்களுக்கு ஹீனஜன்மங்களைப் போக்கடிப்பவர்.

926. ஓம் வீரக்நே நமः—வீரஹா - பலிஷ்டர்களான காமாதிகளை வதஞ்செய்பவர்.

927. ஓம் ரக்ஷணாய நமः—ரக்ஷணः - விஷ்ணுரூபியாய் ரக்ஷிப்பவர்.

928. ஓம் ஸந்தாய நமः—ஸந்தः - எப்போதும் பக்தர்களின் யோகக்ஷேமத்தை நிர்வகிப்பவர்.

929. ஓம் ஜீவநாய நமः—ஜீவநः - ஜலஸ்வரூபி.

930. ஓம் பர்யவஸ்திதாய நமः—பர்யவஸ்திதः - ஸர்வ வியாபியாயிருப்பவர்.

4
அநந்தரூபோऽநந்தஶ்ரீர்ஜிதமன்யுர் பயாபஹः ।

3 4 3 3 3
சதுரஸ்ரோ கபீராத்மா விதிஶோ வ்யாதிஶோ திஶः ॥ (100)

931. ஓம் அநந்தரூபாய நமः—அநந்தரூபः - பற்பலசாஸ்திரங்களால் பலவிதரூபியாய் நிரூபிக்கப்படுகிறவர்.

932. ஓம் அநந்தஶ்ரியே நமः—அநந்தஶ்ரீः - எல்லோராலும் ஸேவிக்கப்பட்டவர்.

933. ஓம் ஜிதமந்யவே நமः—ஜிதமந்யுः - கோபமற்றவர்

934. ஓம் பயாபஹாய நமः—பயாபஹः - சத்ரு பயத்தைப் போக்கடிப்பவர்.

935. ஓம் சதுரஶ்ராய நமः—சதுரஶ்ரः - நித்யர்களால் ஸேவிக்கப்பட்டிருப்பவர்.

936. ஓம் கபீராத்மநே நமः—கபீராத்மா - கம்பீரமான மனமுடையவர்.

937. ஓம் விதிஶாய நமः—விதிஶः - வேதவாக்கியங்களுக்கு எட்டாதமகிமையுடையவர்.

938. ஓம் வ்யாதிஶாய நமः—வ்யாதிஶः - பக்தர்கள் வசிக்க விரும்பும் ஸ்தானங்களை அளிப்பவர்.

939. ஓம் திஶாய நமः—திஶः - பக்தர்விஷயத்தில் தம் பிராணனைக்கூடக் கொடுப்பவர்.

அநாதிர்பூர்புவோலக்ஷ்மீஸ்ஸுவீரோ ருசிராங்கதः ।

ஜநநோ ஜநஜந்மாதிः பீமோபீமபராக்ரமः ॥ (101)

940. ஓம் அநாதயே நமः—அநாதிः - அனாதிகாலமாயுள்ளவர்.

941. ஓம் புவே நமः—பூः - பூலோகமானவர்.

942. ஓம் புவாய நமः—புவः - புவர்லோகமானவர்.

943. ஓம் லக்ஷ்ம்யை நமः—லக்ஷ்மீः - மார்பில் லக்ஷ்மியை தரித்தவர்.

944. ஓம் ஸுவீராய நமः—ஸுவீரः - அதிவேகமுள்ள கருடன்மீதேறிச் சஞ்சரிப்பவர்.

945. ஓம் ருசிராங்கதாய நமஃ—ருசிராங்கதஃ - முக்தர்களுக்குத் திவ்யசரீரமளிப்பவர்.

946. ஓம் ஜநநாய நமஃ—ஜநநஃ - பக்தர்களைத் தம்மிடம் சேர்த்துக்கொள்பவர்.

947. ஓம் ஜநஜந்மாதயே நமஃ—ஜநஜந்மாதிஃ - உலகோத்பத்திக்கு ஆதிகாரணமானவர்.

948. ஓம் பீமாய நமஃ—பீமஃ - பாபிகளுக்குப் பயங்கரரூபமானவர்.

949. ஓம் பீமபராக்ரமாய நமஃ—பீமபராக்ரமஃ - ஸாதுக்களைப் பயமுறுத்தும் துஷ்டர்களைச் சிக்ஷிப்பவர்.

4 4 3
ஆதாரநிலயோ தாதா புஷ்பஹாஸஃ ப்ரஜாகரஃ ।

4 3 2 3
ஊர்த்வகஸ்ஸத்பதாசாரஃ ப்ராணதஃ ப்ரணவஃ பணஃ ॥ (102)

950. ஓம் ஆதாரநிலயாய நமஃ—ஆதாரநிலயஃ - ஜீவர்கள் வசிக்கும் ஆதாரமான வீடுபோன்றவர்.

951. ஓம் தாத்ரே நமஃ—தாதா - தாமே உலகங்களைப் பிரளயத்திற்கு முன்னிருந்தவைபோலச் சிருஷ்டி செய்பவர்.

952. ஓம் புஷ்பஹாஸாய நமஃ—புஷ்பஹாஸஃ - புஷ்பராகம்போன்ற புன்சிரிப்புடையவர்.

953. ஓம் ப்ரஜாகராய நமஃ—ப்ரஜாகரஃ - எப்போதும் விழித்துக்கொண்டிருப்பவர்.

954. ஓம் ஊர்த்வகாய நமஃ—ஊர்த்வகஃ - மேலேழுலோகத்தில் செல்பவர்.

955. ஓம் ஸத்பதாசாராய நமஃ—ஸத்பதாசாரஃ - ஆகாசமார்க்கத்தில் சூரியன் முதலிய கிரகங்களை சஞ்சரிக்கச் செய்பவர்.

956. ஓம் ப்ராணதாய நமஃ—ப்ராணதஃ - சரணடைந் தோருக்கு அபயப்ரதானஞ் செய்பவர்.

957. ஓம் ப்ரணவாய நமஃ—ப்ரணவஃ - பிரணவஸ்வரூபி.

958. ஓம் பணாய நமஃ—பணஃ - எல்லோராலும் துதிக்கப் படுகிறவர்.

4
ப்ரமாணம் ப்ராணநிலயஃ ப்ராணத்ருத் ப்ராணஜீவநஃ ।

3 3
தத்வம் தத்வவிதேகாத்மா ஜந்மம்ருத்யுஜராதிகஃ ॥ (103)

959. ஓம் ப்ரமாணாய நமஃ—ப்ரமாணம் - ரகஸ்யார்த்தங்களுள்ள வேதத்தின் பரமார்த்தத்தை ப்ரமாணமாய் வெளிப்படுத்தியவர்.

960. ஓம் ப்ராணநிலயாய நமஃ—ப்ராணநிலயஃ - ஜீவராசிகள் வசிக்கப் பக்ஷிகூண்டு போன்றவர்.

961. ஓம் ப்ராணத்ருதே நமஃ—ப்ராணத்ருத் - ஜீவராசிகளுக்கு ஆகாரமூட்டி வளர்ப்பவர்.

962. ஓம் ப்ராணஜீவநாய நமஃ—ப்ராணஜீவநஃ - முக்கிய பிராணனுயிருந்து ஜீவிக்கச் செய்பவர்.

963. ஓம் தத்வாய நமஃ—தத்வம் - பரதத்வஸ்வரூபி.

964. ஓம் தத்வவிதே நமஃ—தத்வவித் - தத்துவ ஞானத்தாலறியக்கூடியவர்.

965. ஓம் ஏகாத்மநே நமஃ—ஏகாத்மா - தன்னைத்தவிர வேறொன்றில்லாதவர்.

966. ஓம் ஜந்மமிருத்யுஜராதிகாய நமஃ—ஜந்மமிருத்யு ஜராதிகஃ - ஜனனமரண மூப்பு முதலியவை இல்லாமலிருப்பவர்.

4 4
பூர்புவஸ்வஸ்தருஸ்தாரஸ்ஸவிதா ப்ரபிதாமஹ: ।
3
யக்ஞோ யக்ஞபதிர்யஜ்வா யக்ஞாங்கோ யக்ஞவாஹந:॥(104)

967. ஓம் பூர்புவஸ்வஸ்தரவே நம:—பூர்புவஸ்வஸ்தரு: - பூலோக புவர்லொக சுவர்லோகங்களிலுள்ள ஜீவ ராசிகளாகிற பக்ஷிகள் வசிக்கத்தங்கும் மரம் போன்றவர்.

968. ஓம் தாராய நம:—தார: - சம்சார சமுத்திரங்கடக்கும் ஓடம்போன்றவர்.

969. ஓம் ஸவித்ரே நம:—ஸவிதா - சகல ஜீவர்களையும் தாமாகவே உண்டுபண்ணுபவர்.

970. ஓம் ப்ரபிதாமஹாய நம:—ப்ரபிதாமஹ: - பிரமாவுக்கும் தகப்பன்.

971. ஓம் யக்ஞாய நம:—யக்ஞ: - பஞ்ச மஹாயக்ஞரூபி.

972. ஓம் யக்ஞபதயே நம:—யக்ஞபதி: - இடையூறின்றி யக்ஞரக்ஷணஞ்செய்பவர்.

973. ஓம் யஜ்வநே நம:—யஜ்வா - தானே யாகத்தைச் செய்துவைப்பவர்.

974. ஓம் யக்ஞாங்காய நம:—யக்ஞாங்க: - யக்ஞத்தைச் சரீரமாயுடையவர்.

975. ஓம் யக்ஞவாஹநாய நம:—யக்ஞவாஹந: - அக்னி ரூபியாய் ஹவிஸ் முதலிய ஓமத்திரவியங்களை தேவர்களிடம் சேர்ப்பிப்பவர்.

4 4 4
யக்ஞப்ருத் யக்ஞக்ருத் யக்ஞீ யக்ஞபுக் யக்ஞஸாதந: ।
3 3
யக்ஞாந்தக்ருத் யக்ஞகுஹ்யமந்நமந்நாதஏவ ச ॥ (105)

976. ஓம் யக்ஞக்ருதே நமः—யக்ஞக்ருத் - எல்லா யக்ஞ காரியங்களையும் தமக்கு அர்ப்பணம் செய்வதால் குறைவின்றி அங்கீகரிப்பவர்.

977. ஓம் யக்ஞக்ருதே நமः—யக்ஞக்ருத் - யக்ஞம் செய்யும் ஹோதாவென்னும் பிரதிநிதி.

978. ஓம் யக்ஞிநே நமः—யக்ஞீ - யாக கர்த்தர்.

979. ஓம் யக்ஞபுஜே நமः—யக்ஞபுக் - யக்ஞத்தில் அவிர்ப்பாகத்தை புசிப்பவர்.

980. ஓம் யக்ஞஸாதநாய நமः—யக்ஞஸாதநः - யக்ஞத்திற்கு ஸாதனமான ஞானத்தால் தம்மை யடையவழி காண்பிப்பவர்.

981. ஓம் யக்ஞாந்தக்ருதே நமः—யக்ஞாந்தக்ருத் - யக்ஞத்தை குறைவின்றி பூர்ணாஹுதி வரையில் நடத்தி நிறைவேற்றி வைப்பவர்.

982. ஓம் யக்ஞகுஹ்யாய நமः—யக்ஞகுஹ்யம் - யக்ஞம் செய்வதாலுண்டாகும் ரகசியபலரூபி.

983. ஓம் அந்நாய நமः—அந்நம் - ஸாமவேதத்தில் நான் அன்னமென்று சொல்லியபடி அன்னஸ்வரூபி.

984. ஓம் அந்நாதாய நமः—அந்நாதः - முன்சொன்ன அன்னத்தைப் புசிப்பவர்.

ஆத்மயோநிஸ்ஸ்வயஞ்ஜாதோ[2] வைகாநஸ்ஸாமகாயநः[3] ।

தேவகீநந்தனஸ்ஸ்ரஷ்டா[3] க்ஷிதீஸः பாபநாஸநः ॥ (106)

985. ஓம் ஆத்மயோநயே நமः—ஆத்மயோநிः - ஜீவர்களுண்டாவதற்கு ஆதிகாரணர்.

HE MADURA TAMIL SAN

986. ஓம் ஸ்வயஞ்ஜாதாய நம:—ஸ்வயஞ்ஜாத: - தன் இஷ்டப்படி நியமமின்றி பிறப்பவர்.

987. ஓம் வைகாநாய நம:—வைகாந: - பக்தர்களின் துக்கங்களை வேருடன் களைபவர்.

988. ஓம் ஸாமகாயநாய நம:—ஸாமகாயந: - நித்ய ஸூரிகளால் ஓதப்படும் ஹாவ் என்னும் ஸாமகானத்தைக் கேட்டு ஆனந்திப்பவர்.

989. ஓம் தேவகீநந்தநாய நம:—தேவகீநந்தந: - தேவகீ தேவியின் புதல்வராய் அவளை சந்தோஷப் படுத்தியவர்.

990. ஓம் ஸ்ரஷ்ட்ரே நம:—ஸ்ரஷ்டா - உலக சிருஷ்டி செய்பவர்.

991. ஓம் க்ஷிதீஶாய நம:—க்ஷிதீஶ: - பூமிதேவிக்கு பர்த்தா.

992. ஓம் பாபநாஶநாய நம:—பாபநாஶந: - சகல பாப நிவாரணர்.

2 4 3 4 3 3 4
ஶங்கப்ருந்நந்தகீ சக்ரீ ஶார்ங்கதந்வா கதாதர: ।

2 3 4 4
ரதாங்கபாணிரக்ஷோப்யஸ்ஸர்வப்ரஹரணாயுத: ॥ ஓம். (107)

993. ஓம் ஶங்கப்ருதே நம:—ஶங்கப்ருத் - பாஞ்சஜன்யமென்னும் சங்கை தரித்தவர்.

994. ஓம் நந்தகிநே நம:—நந்தகீ - நந்தகமென்னும் கத்தியை யுடையவர்.

995. ஓம் சக்ரிணே நம:—சக்ரீ - ஆயிரம் முனைகளுள்ள சுதர்சனம் என்னும் சக்கரத்தின் நடுவில் ஜ்வலிக்கும் விஷ்ணு ரூபியாயிருப்பவர்.

996. ஓம் ஶார்ங்கதந்வநே நம:—ஶார்ங்கதந்வா - சார்ங்கமென்கிற வில்லைப் பிடித்திருப்பவர்.

997. ஓம் கதாதராய நமஃ—கதாதரஃ - கௌமோதகீ என்னும் கதாபாணி.

998. ஓம் ரதாங்கபாணயே நமஃ—ரதாங்கபாணிஃ - பிரயோக சக்கரந்தரித்தவர்.

999. ஓம் அக்ஷோப்யாய நமஃ—அக்ஷோப்யஃ - கலங்காத மனமுடையவர்.

1000. ஓம் ஸர்வப்ரஹரணாயுதாய நமஃ—ஸர்வப்ரஹரணாயுதஃ - பகவதாக்ஞையை எதிர்பார்த்து நிற்கும் சகலாயுத பரிபூர்ணனுமான பகவானை ஸேவிக்கிறேன்.

ஸ்ரீ ஸர்வப்ரஹரணாயுதாய ஓம் நமஃ இதி.

3 3 3 3 3
வநமாலீகதீ சார்ங்கீ ஶங்கீ சக்ரீச நந்தகீ ।

3 4
ஸ்ரீமாந்நாராயணோவிஷ்ணுர்வாஸுதேவோ பிரக்ஷது ॥

வனமாலை, கதை, சார்ங்கம், சங்கு, சக்கரம், நந்தகம் இவைகளை யுடையவரும் வசுதேவ புத்ரனும் செல்வவானுமான ஸ்ரீமந்நாராயணன் எப்போதும்ரக்ஷிக்கட்டும்.

வாஸுதேவோ பிரக்ஷதவிதி. ஓம் நம இதி.

ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம்

முற்றிற்று.

# பலஸ்ருதி.

3
இதீதம் கீர்தநம் யஸ்ய கேஶவஸ்ய மஹாத்மந: ।

3
நாம்நாம் ஸஹஸ்ரம் திவ்யாநாமஶேஷேண ப்ரகீர்திதம் । (1)

இவ்விதம் மஹாபுருஷனான ஸ்ரீமந்நாராயணனின் திவ்யமான ஆயிரம் நாமங்களை விஸ்தாரமாகச் சொன்னேன்.

3
ய இதம் ஶ்ருணுயாந்நித்யம் யஶ்சாபி பரிகீர்தயேத் ।

4
நாஶுபம் ப்ராப்நுயாத் கிஞ்சித் ஸோமுத்ரேஹச
மாநவ: ॥ (2)

எவனிந்த ஆயிர நாமங்களை தினந்தோறும் படிக்கிறானோ, அல்லது கேட்கிறானோ அவனிவ்வுலகிலும் மேலுலகிலும் துக்கமடையமாட்டான்.

3 3 3
வேதாந்தகோப்ராஹ்மணஸ்ஸ்யாத் க்ஷத்ரியோ விஜயீ
4
பவேத் ।

4 3 4 3
வைஶ்யோ தநஸம்ருத்தஶ்ச ஶூத்ரஸ்ஸுகமாப்நு
யாத் ॥ (3)

பிராமணன் வேதத்தில் தேர்ச்சியையும் க்ஷத்திரியன் ஜயத்தையும் வைசியன் தனலாபத்தையும் சூத்திரன் புண்யத்தையுமடைவார்கள்.

4 . 2 3 4 2 2 2
தர்மார்தீப்ராப்நுயாத்தர்மமர்தார்தீசார்தமாப்நுயாத் ।
2
காமாநவாப்நுயாத் காமீ ப்ரஜார்தீசாப்நுயாத் ப்ரஜா: ॥ (4)

தர்மத்தை விரும்புவோன் தர்மத்தையும், அர்த்தத்தை விரும்புவோன் அர்த்தத்தையும், காமத்தை விரும்புவோன் காமத்தையும், ஸந்ததியை விரும்புவோன் ஸந்ததியையுமடைவான்.

4 3 2 3 3 3
பக்திமாந் யஸ்ஸதோத்தாய ஶுசிஸ்தத்கதமாநஸ: ।
3
ஸஹஸ்ரம் வாஸுதேவஸ்ய நாம்நாமேதத்ப்ரகீர்தயேத் ॥ (5)

4
யஶ:ப்ராப்நோதி விபுலம் யாதி ப்ராதாந்யமேவச ।
அசலாம் ஶ்ரியமாப்நோதி ஶ்ரேய: ப்ராப்நோத்யநுத்தமம் ॥ (6)

ஒருவன் பிரதிதினமும் காலையிலெழுந்து வேறு விஷயங்களில் மனஞ்செலுத்தாமல் சுத்தனாய் ஸ்ரீமந்நாராயணனின் ஆயிர நாமங்களைக் கீர்த்தனம் பண்ணினால் யசஸ், முக்தி, நித்யமான பகவத்ஸேவை, பகவத்ஸாந்நித்யமிவைகளை அடைவான்.

4 3 3
நபயம் க்வசிதாப்நோதி வீர்யம் தேஜஶ்ச விந்ததி ।
4 3 3 3 3
பவத்யரோகோ த்யுதிமாந் பலரூபகுணாந்வித: ॥ (7)

ஒரு இடத்திலும் பயமுண்டாகாமலும் வீர்யம், காந்தி, சோகமில்லாமை, பலம், ரூபம், நற்குண மிவைகளுமுண்டாகும்.

3 3 333 4 3 4
ரோகார்தோ முச்யதே ரோகாத்பத்தோ முச்யேத பந்தநாத் ।

4 4 ○ 3
பயாந்முச்யேத பீதஸ்து முச்யேதாபந்ந ஆபத: ॥ (8)

வியாதிஸ்தனுக்கு ரோக நிவாரணமும், சிறையிலடைப்பட்டவனுக்கு விடுதலையும், பயந்தவனுக்குப் பயமில்லாமையும், ஆபத்திலகப்பட்டவனுக்கு அதின் நிவாரணமுமுண்டாகும்.

3 3
துர்காண்யதிதரத்யாஶு புருஷ: புருஷோத்தம: ।

4
ஸ்துவந்நாமஸஹஸ்ரேண நித்யம் பக்திஸமந்வித: ॥ (9)

தினந்தோறும் பக்தி சிரத்தையுடன் ஆயிர நாமங்களையும் ஸ்தோத்ரம் செய்பவன் தாங்கமுடியாத கஷ்டங்களிலிருந்தாலும் சீக்கிரம் நிவர்த்தி யடைகிறான்.

3 3
வாஸுதேவாஶ்ரயோ மர்த்யோ வாஸுதேவபராயண: ।

3 4 3
ஸர்வபாபவிஶுத்தாத்மா யாதி ப்ரஹ்ம ஸநாதந: ॥ (10)

எவன் ஸ்ரீமந்நாராயணனைத் தவிர வேறு தெய்வமில்லையென்கிற திடபுத்தியோடு பாராயணஞ் செய்வானோ அவன் சகல பாபங்களும் விலகி நித்யமான மோக்ஷ பதவியை அடைகிறான்.

3 4 4 3
ந வாஸுதேவபக்தாநாமஶுபம் வித்யதே க்வசித் ।

4 4
ஜந்மம்ருத்யுஜராவ்யாதிபயம்வாப்யுபஜாயதே ॥ (11)

வாஸுதேவனைப் பஜிப்போர் இறப்பு, மூப்பு, பிணி முதலிய பயமில்லாமல் நித்யமங்களத்தோடு வாழ்வார்கள்.

4 3 4 4
இமம் ஸ்தவமதீயாநஃ ஶ்ரத்தாபக்திஸமந்விதஃ ।

2 4 4
யுஜ்யேதாத்மாஸுகக்ஷாந்தி ஸ்ரீத்ருதிஸ்ம்ருதிகீர்திபிஃ ॥ (12)

எவன் சிரத்தை பக்தி யிவைகளுடன் இந்த ஸ்தோத்ரத்தைப் பாராயணம் செய்கின்றானோ அவன் சுகம், பெருமை, தைர்யம், ஐசுவரியம், சிந்தனை, கீர்த்தி இவைகளைச் சுலபமாயடைவான்.

4 4 4
ந க்ரோதோ ந ச மாத்ஸர்யோ ந லோபோ நாஶுபா மதிஃ ।

4 4
பவந்தி க்ருதபுண்யாநாம் பக்தாநாம் புருஷோத்தமே ॥ (13)

பகவத்பக்தி பண்ணுவது புண்யவிசேஷத்தால் கிடைக்கக் கூடியதாகையால் கோபம், அசூயை, லோபம், கெட்ட எண்ணம் முதலியவைகளை முதலிலொழித்து பஜிக்க வேண்டும்.

3 2 3 4 3 4
த்யௌஸ்ஸசந்த்ரார்கநக்ஷத்ரகந்திஶோபூர்மஹோததிஃ ।

3 4
வாஸுதேவஸ்ய வீர்யேண வித்ருதாநி மஹாத்மநஃ ॥ (14)

ஸ்ரீமந்நாராயணனின் சக்திவிசேஷத்தால் ஆகாசம், சந்திரன், சூரியன், நக்ஷத்திரம், திக்குகள், பூமி, சமுத்திரம் முதலியவை நிலையாயிருக்கின்றன.

3 4 3
ஸஸுராஸுரகந்தர்வம் ஸயக்ஷோரகராக்ஷஸம் ।

3
ஜகதவஸே வர்த்தேதம் க்ருஷ்ணஸ்ய ஸசராசரம் ॥ (15)

தேவர், அசுரர், கந்தர்வர், யக்ஷர், உரகர், ராக்ஷஸர் முதலியவர்களுடன் கூடிய ஸ்தாவர ஜங்கமரூபமான உலகம், கிருஷ்ணபகவான் சுவாதீனத்திலிருக்கின்றது.

3 3 4 3 4
இந்த்ரியாணி மநோபுத்திஸ்ஸத்வம் தேஜோபலம்த்ருதி: ।

3
வாஸுதேவாத்மகாந்யாஹு: க்ஷேத்ரம் க்ஷேத்ரக்ஞ ஏவச ॥ (16)

இந்திரியங்கள், மனம், புத்தி, பலம், தேஜஸ், தைரிய மிவைகளெல்லாம் அவனதுரூபமென்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.

3 2
ஸர்வாகமாநாமாசார: ப்ரதமம் பரிகல்ப்யதே ।

2 4 4 4
ஆசார: ப்ரதமோ தர்ம: தர்மஸ்ய ப்ரபுரச்யுத: ॥ (17)

ஸகல சாஸ்திரங்களிலும் ஆசாரத்தை முதல் தர்மமாகவும் அந்த தர்மத்துக்கு அதிதேவதை ஸ்ரீமந்நாராயணனென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

3 4 4
ரிஷய: பிதரோ தேவா மஹாபூதாநி தாதவ: ।

3 3 3 3 4
ஜங்கமாஜங்கமஞ்சேதஜ்ஜகந்நாராயணோத்பவம் ॥ (18)

மகரிஷிகள், பித்ரு தேவதைகள், பஞ்ச மகாபூதங்கள், தாதுக்கள், ஸ்தாவரஜங்கம முதலிய ஸகல உலகமும் ஸ்ரீமந் நாராயணனிடமிருந்துண்டாயின.

3 2 2 3
யோகோ க்ஞாநம் ததா ஸாங்க்யம் வித்யாஶ்ஶில்பாதிகர்மச ।

3 3
வேதாஶ்ஶாஸ்த்ராணி விக்ஞாநமேதத்ஸர்வம் ஜநார்த நாத் ॥ (19)

யோகம், ஞானம், ஸாங்க்யம், வித்தை, சில்ப முதலிய கலைகள், வேதம், சாஸ்திரம், ஞானமிவைகளெல்லாம் பகவானிட மிருந்துண்டாயின.

3 4 2 4
ஏகோவிஷ்ணுர் மஹத்பூதம் ப்ருதக்பூதாந்யநேகஶ: ।

4 4 4 3
த்ரீந் லோகாந் வ்யாப்ய பூதாத்மா புங்தே விஶ்வபுக வ்யய: ॥ (20)

சகல ஜீவராசிகளிடத்திலும் மூவுலகங்களிலும் விஷ்ணு ஒருவரே தாமொருவராய் வ்யாபித்தும் ஆத்மரூபியாயும் நாசமில்லாதவருமாயுமிருந்து ரக்ஷித்துக்கொண்டு நித்ய விபூதியிலிருக்கிறார்.

4 3
இமம் ஸ்தவம் பகவதோ விஷ்ணோர்வ்யாஸேந கீர்திதம் ।

2 3 2 2
படேத்ய இச்சேத் புருஷ: ஶ்ரேய: ப்ராப்தும் ஸுகா நிச ॥ (21)

எவன் ச்ரேயஸையும் சுகத்தையும் அடைய விரும்புகிறானோ அவன், வ்யாஸ முனிவரால் சொல்லப்பட்ட இந்த விஷ்ணு ஸ்தோத்ரத்தைப் படிக்கக்கடவன்.

3 4
விஸ்வேஸ்வரமஜம் தேவம் ஜகதః ப்ரபுரவ்யயம் ।
4 4
பஜந்தி யே புஷ்கராக்ஷம் ந தே யாந்தி பராபவம் ॥ (22)

ஜகதீசனும் பிறப்பில்லாதவனும் லோகப் பிரபுவும் நாசரகிதனும் தாமரைக்கண்ணனுமான பகவானை எவன் பஜிக்கிறானோ அவன் ஒருகாலும் அவமானமடையமாட்டான்.

நதேயாந்தி பராபவமோம் நமஇதி.

அர்ஜுந உவாச—அர்ஜுனன் சொல்கிறான் :—

3 3 4
பத்மபத்ரவிசாலாக்ஷ பத்மநாப ஸுரோத்தம ।
4 4 3
பக்தாநாமநுரக்தாநாம் த்ராதா பவ ஜநார்தந ॥ (23)

ஓ தாமரைக்கண்ணா, பத்மநாபா, தேவாதிதேவா, ஜநார்த்தனா. தேவரீரையே நம்பி பக்தி செய்வோரை அவசியம் ரக்ஷிக்கவேண்டும்.

4 3
ஸ்ரீ பகவாநுவாச—ஸ்ரீ பகவான் சொல்கிறார் :—

2 3
யோ மாம் நாமஸஹஸ்ரேண ஸ்தோதுமிச்சதி பாண்டவ ।
ஸோஹமேகேந ஶ்லோகேந ஸ்துதஏவ ந ஸம்ஶயః ॥ (24)

அர்ச்சுனா ! எவன் எனது ஆயிர நாமங்களையும் ஸ்தோத்திரம்பண்ண விரும்பி ஒரு சுலோகமாவது சொன்னால் ஆயிர நாமங்களால் ஸ்துதி செய்ததுபோலத் திருப்தியடைவேன்.

ஸ்துதஏவ நஸம்ஶய ஓம் நமஇதி.

வ்யாஸ உவாச—வ்யாஸர் சொல்கிறார் :—

3 3
வாஸநாத்வாஸுதேவஸ்ய வாஸிதம் தே ஜகத்த்ரயம் ।
4 3
ஸர்வபூதநிவாஸோஸி வாஸுதேவ நமோஸ்துதே ॥ (25)

சகல உலகங்களிலுள்ள ஜீவர்களும் தம்முள் வசிப்பதால் வாசுதேவனெனப்பெயர்பெற்று எல்லா ஜீவர்களுக்கும் சுகமான வாஸஸ்தானமான உம்மை ஸேவிக்கிறேன்.

3
வாஸுதேவநமோஸ்துத ஓம் நமஇதி.

பார்வத்யுவாச—பார்வதி சொல்கிறாள் :—

4
கேநோபாயேந லகுநா விஷ்ணோர்நாமஸஹஸ்ரகம் ।
2 3 2 4
பட்யதே பண்டிதைர்நித்யம் ஶ்ரோதுமிச்சாம்யஹம் ப்ரபோ ॥

பிரபுவே! பிராணிகள் சுலபமாய் மோக்ஷமடைய உபாயமாக வியாஸரால் உரைக்கப்பட்ட இந்த விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைப் பண்டிதர்கள் தினந்தோறும் எப்படி படிக்கவேண்டுமென்கிற விஷயத்தைக் கேட்க விரும்புகிறேன்.

ஈஶ்வர உவாச—பரமசிவன் சொல்கிறார் :—

ஸ்ரீராம ராம ராமேதி ரமே ராமே மநோரமே ।
ஸஹஸ்ரநாமதத்துல்யம் ராமநாமவராநநே ॥ (27)

ஓ அழகிய முகமுள்ள பார்வதி! எவன் ராம ராம ராம வென்கிற மனத்திற் கினிதான நாமத்தை ஸ்மரணம் பண்ணுகிறானோ அவனுக்கு அந்த ராமநாம ஆயிர நாமத்திற்குச் சமானமான பலத்தைக் கொடுக்கும்,

3
பிரஹ்மோவாச—பிரம்மா சொல்கிறார் :—

நமோஸ்த்வநந்தாய ஸஹஸ்ரமூர்தயே
3 3
ஸஹஸ்ரபாதாக்ஷிஶிரோருபாஹவே ।
ஸஹஸ்ரநாம்நே புருஷாய ஶாஶ்வதே
3 4
ஸஹஸ்ரகோடியுகதாரிணே நம: ॥ (28)

நாசரஹிதரும், அநந்த ரூபமுள்ளவரும், அளவற்ற கால் கண் தலை நீண்ட கைகளுள்ளவரும், ஆயிரம் பெயருடையவரும், சாசுவதரும் யுகங்கள்தோறும் நித்யருமாயிருப்பவருமாகிய பரமபுருஷனை ஸேவிக்கிறேன்.

3 4
ஸஹஸ்ரகோடியுகதாரிண ஓம் நமஇதி.

ஸஞ்ஜய உவாச—ஸஞ்ஜயர் சொல்கிறார் :—

3 2 4 4
யத்ர யோகீஶ்வர: க்ருஷ்ணோ யத்ரபார்தோ தநுர்தர: ।
4 4
தத்ர ஶ்ரீர்விஜயோபூதிர் த்ருவாநீதி மதிர்மம ॥ (29)

யோகீச்வரனை கிருஷ்ணனும் வில்லாளியான அர்ஜுநனுமெங்கிருக்கிறார்களோ அங்கு நிச்சயமாய் ஐசுவரியமும் ஜயம் முதலானவையு முண்டாகும்.

ஸ்ரீ பகவாநுவாச—ஸ்ரீ பகவானுரைக்கிறார் :—

அநந்யாஶ்சிந்தயந்தோ மாம் யே ஜநா: பர்யுபாஸதே ।
4 3
தேஷாம் நித்யாபியுக்தாநாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம் ॥ (30)

எவர்கள் மற்றுமோர் தெய்வமின்றி என்னையே எப்பொழுதும் பக்தியுடன் உபாஸிக்கிறார்களோ அவர்கள் குடும்ப யோகக்ஷேமங்களை என்னுடையனபோலப் பாவித்து நடத்துகிறேன்.

4 3
பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம் ।
4 2 2 4 3 3
தர்மஸம்ஸ்தாபநார்தாய ஸம்பவாமி யுகே யுகே ॥ (31)

துஷ்டர்களைச் சிக்ஷித்துச் சிஷ்டர்களை ரக்ஷித்துத் தர்மத்தை நிலைநாட்ட ஒவ்வொரு யுகந்தோறும் நான் அவதாரம் செய்கிறேன்.

2 4 4
ஆர்தா விஷண்ணாஶ்ஶிதிலாஶ்ச பீதா கோரேஷு ச
4
வ்யாதிஷு வர்தமாநா: ।
3 3 2
ஸங்கீர்த்ய நாராயணஶப்தமாத்ரம் விமுக்ததுக்காஸ்
2 4
ஸுகிநோ பவந்தி ॥ (32)

ஸம்ஸாரத்தினால் பீடிக்கப்பட்டவர்களும், துக்கப்பட்டவர்களும், அபீஷ்டம் நிறைவேறாதவர்களும், பயப்பட்டவர்களும், கோரமான வியாதியாலுபத்திரவப்பட்டவர்களும், ஸ்ரீமந்நாராயணவென்னும் நாமத்தை ஒருதரம் உச்சரித்த மாத்திரத்தால் சகல துக்கங்களும் விலகி சந்தோஷத்துடன் சுகமாய் வாழ்வார்கள்.

ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாம ஸதாத்பர்யம்.

முற்றிற்று.

ஹரி: ஓம் ஸ்ரீ பத்மநாபாய நம:

ஓம்

# அரும்பதவுரை

அநிருத்தன்—கிருஷ்ணபரமாத்மாவின் குமாரனான பிரத்யும்னனின் புத்திரன். பாணாசுரன், புத்திரியான உஷையுடன் சேர்ந்திருப்பதைக்கண்டு இவனைச் சிறையிலடைக்க ஸ்ரீ கிருஷ்ணரால் மீட்கப்பட்டவன்.

அபக்தர்கள்—பக்தியில்லாதவர்கள்.

அபய ப்ரதானம்—அபயமளித்தல்.

அபீஷ்டம்—விருப்பம்.

அர்ப்பணம்—கொடுத்துவிடல்.

அவிர்ப்பாகம்—அக்னியில் மந்திரத்தால் தேவதைகளின் பேரைச் சொல்லி ஓமம் செய்து அதைப் பிரித்துக்கொடுப்பது.

அவிஸ்—ஓமத்திற்குரிய அன்னம்.

அநுஷ்டுப்—எட்டு உயிரெழுத்துக்கள் அடங்கிய முப்பத்திரண்டு எழுத்துகளால் ஆகிய ஒருவகை விருத்தம்.

ஆகர்ஷிக்கும்—இழுக்கும்.

ஆகம சாஸ்திரங்கள்—பாஞ்சராத்ரம், காமிகம் முதலிய பூஜைக்குரிய சாஸ்திரங்கள்.

ஆஹுதி—அக்நியில் ஓமம் செய்யப்படும் நெய் முதலியன.

இந்திரியங்கள்—மெய், வாய், கண், மூக்கு, செவி.

ஈற்றுப்பற்கள்—கோரப்பற்கள்.

உபாயபூதையான—கொடுப்பிக்கவல்ல.

உபேந்திரன்—அமிர்தத்தில் இச்சைப்பட்ட தேவேந்திரனுக்கு அதைக் கொடுக்கத் தம்பியாய்ப் பிறந்தவர்.

ஏகாந்தமாய்—தனியாய்.

ஐஹிகம்—இவ்வுலக சம்பந்தமானது.

கதன்—இவன், வசுதேவர் மனைவிகளில் சுநாமை என்பவளுக்குப் பிரந்தவன்.

கல்யாணம்—எப்பொழுதும் மங்களகரமாகியது.

காம்ய கர்மங்கள்—புத்ர, தனம் முதலிய சித்திக்காகச் செய்யும் கருமங்கள்.

காமாதிகள்—காமம், க்ரோதம், லோபம், மோகம், மதம், மாத்சர்யம் என்பவை.

காயக்லேசம்—சரீரசிரமம்.

கால நபி—யுகம், வருஷம், மாதம் முதலிய கால ஸ்வரூபியாயிருப்பவர்.

குணங்கள் (இவை பகவானைச் சேர்ந்தவை)—ஷாட் குண்யம் என்னும் பதத்தைப் பார்க்க.

குணானுபவாதிகள்—பகவத்குணானுபவசுகம் என்பதைப் பார்க்க.

கோட்பேரன் (கொள்பேரன்)—பேரனின் புத்ரன்.

ச்ரேயஸ்—புகழ்.

சக்தி—வசிஷ்டருக்கு அருந்ததியிடம் 100 பிள்ளைகளுண்டானார்கள். விசுவாமித்திரன் தூண்டுதலால் கல்மாஷபாதன் 99 பேரைக் கொல்ல இதை அறிந்த வசிஷ்டர் பிராணத்தியாகம் செய்ய எத்தனிக்க திருமால் அனுக்கிரகத்தால் சக்தி என்பவன் மிகுந்தான். இவன்தான் பராசரரின் தகப்பன்.

சங்கநிதி—ஒன்பது நிதிகள். மஹாபத்மம், பத்மம், சங்கம், மகரம், கச்சபம், முகுந்தம், குந்தம், நீலம், வரம்.

சதுர் வ்யூகம்—ஈசுவர ஸ்வரூபம் பரத்வம், வ்யூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரம் என்று ஐந்துவிதமாகக் கூடியிருக்கும் இருப்பு. அதில் பரத்வமாவது—பரமபதத்தில் நித்ய முக்தர்களுக்கு போக்கியனாய்க்கொண்டு எழுந்தருளியிருக்கும் நிலை. வ்யூகமாவது—சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் ஆகிய மூன்று தொழில்களையுமுடையவனாய் லோகரக்ஷணார்த்தமாக பரஸ்வரூபத்தினின்றும் குணங்களைச் சிறிது பிரித்துக்கொண்டு, வாஸுதேவ ஸங்கர்ஷண

6979


ப்ரத்யும்ந அநிருத்த என்கிற நான்குவிதரூபமாய் நிற்கும் நிலை. இதைத்தான் சதுர்வ்யூகமென்பது. விபவமாவது—மேற்கூறிய வ்யூ சச்சாயையோடு தேவர், மனிதர், விலங்கு முதலிய உருவத்தைத் தன் இச்சையினால் கொண்டு அவதாரம் செய்யும் நிலை. அந்தர்யாமித்துவமாவது—எல்லாப் பொருள்களிலும் மறைந்து நிற்கும் நிலை.

அர்ச்சாவதாரமாவது—யாவருக்கும் கண்டு வணங்குவதற்கு எளியவனாய் கோயில்தோறும் உருவத்தோடு நிற்கும் நிலை.

சந்தஸ்—விருத்தம்.

சப்தவாயுக்கள்—இந்திரனைக் கொல்லவேண்டி அதிதி தவஞ் செய்ய அவள் அசுசியாயிருந்தபோது இந்திரன் அவள் வயிற்றில் புகுந்து கர்ப்பத்தை 7 துண்டுகளாகச் செய்ய அவைகள் மருத்துக்களாய்ப் பிறந்தார்கள். இவர்கள்தான் சப்தவாயுக்கள் என்பது.

சர்வாபீஷ்ட ப்ரதர்—எல்லா மனோபீஷ்டத்தையும் அளிப்பவர்.

சாங்கமாய்—கிரமப்படி சம்பூர்ணமாய்.

சிலாலிகிதம்—கல்மேல் எழுத்து.

சிஷ்டர்கள்—நல்ல ஆசாரமுள்ளவர்கள்.

சுக வடிவு—ஆனந்தசுகரூபி.

சுவதந்தர பலப்ரதர்—தனது இச்சைப்படி பலத்தை அளிப்பவர்.

சேதனர்கள்—ஜீவர்கள்.

சோமபானம்—சோம லதை என்னும் கொடியின் ரசம். இதை யாககாலத்தில் யாககர்த்தா முதலானோர் குடிப்பது.

த்ரிஸாமா—மையம்.

தரிப்பவர்—வைத்துக்கொண்டிருப்பவர்.

தாபத்ரயம்—ஆத்யாத்மிகம், ஆதிதெய்விகம், ஆதி பௌதிகம் என மூன்று துக்கங்கள். முதலாவது—சரீரத்தில் உண்டாகும் நோய் முதலியவை, 2-வது—மழை, காற்று, இடி முதலியவைகளால் ஏற்படுவது, 3-வது—மிருகம், பாம்பு முதலியவற்றால் ஏற்படுவது.

திருவடிச் சோபை—பகவானின் பாத அழகு.

தேசகாலாதி நியமம்—இடம், காலம் முதலியவற்றின் எல்லை.

தேவதை—பிரதான புருஷர்.

நரனான அர்ச்சுனன்—முதல் ஜன்மம்—நரனென்னும் ரிஷியாய், 2-வது—இலக்ஷ்மணனாய், 3-வது—அர்ச்சுனனாகப் பிறந்தவன்.

நித்ய சூரிகள்—ஜனன மரணமில்லாமல் வைகுண்டத்தில் பகவானிடம் எப்போதும் கைங்கர்யம் செய்துவரும் முக்தர்கள். இவர்கள்தான் அனந்த, கருட, விஷ்வக்சேனர் முதலியவர்.

நித்யவிபூதி—மோக்ஷ சாம்ராஜ்யம்.

நியதமாய்—எப்பொழுதும்.

நிவாரகமான—போக்கவல்ல.

நிவாரணர்—போக்கடிப்பவர்.

நிஷ் ப்ரயோஜனம்—பிரயோஜனமற்றது.

ப்ரகிருதி—மாயை.

ப்ரத்யும்னன்—மன்மதனே ஸ்ரீ கிருஷ்ணருக்கு புத்திரனாய்ப் பிறந்தவன்.

ப்ரபத்தி—பக்திபோன்றது. ஒருவன் பகவானது திருவடியைச்சேர முதலில் தனது ஆசாரியனை அடைந்து அவர் மூலமாய் பகவானைச் சரணம் புகல்.

ப்ரமாணங்கள்—பிரத்யக்ஷம், அனுமானம். சப்தம் (சாஸ்திரம்) முதலியவற்றால் விஷயங்களை அறிவதற்கு உரிய கருவிகள்.

ப்ரமேயம்—பிரமாணத்தினாலே அறியப்படுகிற விஷயம்.

ப்ரலாபிக்க—ஆனந்த பாஷ்பம் பெருகிப் புலம்ப.

ப்ராப்தி—அஷ்டைச்வர்யங்களில் ஒன்று.

பகவத் குணாநுபவ சுகம்—பகவானது குணங்களைப் பாடுவதினாலும் ஸ்தோத்திரம் செய்வதினாலும் உண்டாகிற சுகம்.

பகவத் ஸாந்நித்யம்—பகவானின் கிட்ட அணுகுதல்.

பத்தர்—ஜீவர்கள் மூன்றுவகை—பத்தர், முக்தர், நித்யர். இதில் பத்தர் மாயாபாசத்தால் கட்டுண்டவர்கள்.

பரத்வம்—எல்லாவற்றிலும் மேற்பட்டது.

பர தத்வ ஸ்வரூபி—பரமாத்மா.

பன்னகசயனன்—பாம்பின்மேல் படுத்திருப்பவர்

பாஞ்சராத்ராகமம்—விஷ்ணு ஆலயங்களில் பூஜை செய்யும் விதியைக்கூறும் ஓர் ஆகம சாஸ்திரம். வேதங்களை பகவான் பிரமனுக்கு 5 ராத்திரியிலுபதேசித்ததால் இப்பெயருடையது.

பிரணவஸ்வரூபி—ஓங்காரரூபி.

பீஜம்—ஆதாரம்.

புருஷார்த்தம்—தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்பவை.

புவர்லோகம்—மேலேழுலோகங்களில் இரண்டாவது உலகம்.

பூமி நீளாசமேதர்—பூதேவி நீளாதேவி (நப்பின்னைப் பிராட்டி) யுடன் கூடியிருப்பவர்.

பூர்ணாஹுதி—யாகமுடிவில் நெய்யை ஒரே தாரையாய் விட்டு ஓமம் செய்தல்.

மர்த்தனர்—கொன்றவர்.

மனோபாவாதிகள்—மனத்தினால் நினைத்திருப்பவை.

மூச்சுக்காற்று—சுவாசம்.

மோட்டு—அரும்பு அல்லது மொக்கு என்று வழங்குவது.

யசஸ்—கீர்த்தி.

யாதனை—உபத்திரவம்.

யூப ஸ்தம்பம்—யாகத்தில் பலியிடும் பசுக்களைக் கட்டும் கம்பம்.

ரஞ்சிப்பவர்—சந்தோஷப்படுத்திவைப்பவர்.

ரித்விக்குகள்—யாகம் செய்யும் எஜமானனுக்குத் துணையாயிருப்பவர்கள்.

ருது—உ-மாதங்கள் சேர்ந்தது. அவை, வசந்த ருது, க்ரீஷ்மருது, வர்ஷ ருது, சரத் ருது, ஏமந்த ருது, சிசிர ருது என்பன.

லயம்—ஒடுங்குதல்.

வ்யூகாவதாரம்—சதுர்வ்யூகம் என்பதைப் பார்க்க.

வசீகரிக்கிறது—சுவாதீனப்படுத்துகிறது.

வரம்பாய்—எல்லையாய்.

வஹித்திருப்பவர்—சேர்த்துக்கொண்டிருப்பவர்.

விநியோகம்—உபயோகப்படுத்துவது.

வியக்தமாய்—பிரகாசமாய்.

விஷயசுகங்கள்—ஸ்திரீசுகம் முதலியன.

ஜலசாயியாய்—ஜலத்தில் சயனித்திருப்பவனாய்.

ஸ்தாவர ஜங்கமங்கள்—அசையாத மலை, மரம் முதலியன ஸ்தாவரம். அசையும் மனுஷன், மிருகம், ஊர்வன முதலியன ஜங்கமங்கள்.

ஸ்வக்ஞானம்—தன்னைப் பகுத்தறியும் ஞானம்.

ஸ்வயம்வரித்தல்—தனக்கு வேண்டுமவனைக் கணவனாக தானே ஏற்படுத்திக்கொள்ளுதல்.

ஸ்வீகரிப்பவர்—வாங்கிக்கொள்பவர்.

ஸங்கர்ஷணர்—பலராமர்.

ஸங்கல்பம்—மனதால் நினைப்பது.

ஸநகஸநந்தாதி—ஸநகர், ஸநந்தனர், ஸனத்குமாரர், ஸனத்சுஜாதர்.

ஸநாதன—பழமையான.

ஸபலமாக—பலனடையும்படி.

ஸர்வார்த்தம்—இகத்தில் வேண்டிய எல்லாப் பொருள்களும்

ஸாங்கிய சாஸ்திரம்—ஓர் தத்துவ சாஸ்திரம். கபிலமுனிவரால் உபதேசிக்கப்பட்டது. இவரைத்தான் கபிலவாசுதேவரென்று சொல்வது.

ஸாரூப்யம்—பகவானுக்குச் சமானமான ரூபத்தை உடைய நிலை.

ஹம்ஸம்—அன்னப்பட்சி.

ஹாவ்—ஓர் சப்தம்.

ஹீனஜன்மம்—மனுஷ ஜென்மத்திற்குக் கீழ்ப்பட்டது.

ஷாட்குண்யம்—பகவானின் ஆறு குணங்களையுடைமை: ஞானம், சக்தி, பலம், ஐசுவர்யம், வீர்யம், தேஜஸ்.